# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2051 ஆவணி / ஆகஸ்ட் 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


<u>தேசத்தின் குரல்</u>

## தேசியக் கல்விக் கொள்கை - 2020

### தமிழ்நாட்டின் மீதான பண்பாட்டுப் படையெடுப்பைப் புறங்காண்போம்!



இந்தியா ஒரு தேசமன்று. புவியியல் நோக்கில் அது ஒரு துணைக்கண்டம். அரசியல் நோக்கில் பல தேசங்களை உள்ளடக்கிய ஓர் அரசுக் கட்டமைப்பு. ஆகவே இந்தியா முழுமைக்கும் ஒரே கல்விக் கொள்கை என்பதே குமுக அறிவியலுக்கும் குடியாட்சியத்துக்கும் மக்கள் நலனுக்கும் புறம்பானது. பெரும்பாலும் மொழிவழி மாநிலமாக அமைந்துள்ள ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு தேசியக் கல்விக் கொள்கைதான் இயல்பான தேவை. இந்தியா முழுமைக்குமான தேசியக் கல்விக்

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. களம்-காலம் -20
3. இதயத்தை விற்று விசத்தை வாங்கும் பாஜக -23
4. செங்காட்டான் குறிப்புகள் -31
5. கீழடி: வரலாற்றைத் திரிக்கும் தமிழ்ப் பகைவர்கள் -33
6. பவன் சுக்தேவும் பசுமைப் பொருளாதாரமும்(1) -51
7. கியூபாவின் புரட்சிப் பெண்கள்(6)-59
8. நக்வெய்ன் மார்க்சியப்பள்ளியில் (10) -65
9. டாலருக்கு வந்த வாழ்வு (5) -74
10. யானை தானே தன் தலையில்; மண்ணை வாரி இறைத்துக் கொள்ளட்டும்;! தன்னைத்தானே அவமதித்துக் கொண்ட உச்ச நீதிமன்றம்! -83



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

கொள்கை என்பதே திணிப்புதான். வெறும் மொழித் திணிப்பு மட்டுமன்று, இது ஒரு பண்பாட்டுப் படையெடுப்பு.

இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியாவை ஒரு தேசமாக வரையறுக்காமல் அரசமாநிலங்களின் ஒன்றியமாகவே (UNION OF STATES) வரையறுக்கிறது. மொழிவழி மாநிலங்கள் என்பன வரலாற்று நோக்கில் தேசங்களைக் குறிக்கும். இந்தியாவின் கூட்டுப் பண்பாடு (composite culture) என்பதான ஒன்றை அரசமைப்புச் சட்டமே சொல்லிச் செல்கிறது. ஓரளவு இந்தப் புரிதலுடன் அரசமைப்புச் சட்டம் வரையப்பட்ட போது கல்வி என்பது மாநில அதிகாரப் பட்டியலில்தான் சேர்க்கப்பட்டது.

## அரசமைப்புச் சட்டத்தில் கல்வி

ஆனால் அப்போதே கல்வியின் சில கூறுகள் பல்வேறு பெயர்களில் ஒன்றியப் பட்டியலில் இடம்பெற்றன. சான்றாக, ஒன்றியப் பட்டியலில் இனம் 25 கடல்சார் கல்வியையும் இனம் 29 வான்பயணவியல் கல்வியையும் குறிப்பிடுகின்றன. இனம் 63 நடுவண் பல்கலைக்கழகங்களையும் தேசிய முகன்மை வாய்ந்ததென்று நாடாளுமன்றச் சட்டத்தால் அறிவிக்கப்படும் படியான வேறு எந்தக் கல்விக் கழகத்தையும் குறிப்பிடுகிறது, கல்வி மாநிலப் பட்டியலில் இடம்பெறும் போது தேசிய முகன்மை வாய்ந்த கல்விக் கழகங்களை மட்டும் மாநில அரசுகள் கையில் ஒப்படைக்க முடியாதா?

இதே போலத்தான் ஒன்றியப் பட்டியலில் இனம் 64 முழுமையாகவோ பகுதியாகவோ இந்திய அரசின் நிதி கொண்டு நடத்தப்பெற்று, தேசிய முகன்மை வாய்ந்தவை என்று நாடாளுமன்றச் சட்டத்தால் அறிவிக்கப் பெறும் கல்விக் கழகங்களை இந்திய அரசின் அதிகாரத்துக்கு உட்படுத்துகிறது. இனம் 65 தொழில்முறை, தொழிற்பயிற்சி, தொழில்நுட்ப நிறுவனங்களை ஒன்றிய அதிகாரத்திற்கு உட்படுத்துகிறது. இனம் 70 ஒன்றிய அரசுப் பணிகள் தொடர்பானது. இந்தப் பணிகளுக்கான கல்வி, பயிற்சி, தேர்வு ஆகியவற்றில் மாநில அரசுகளுக்குப் பங்கில்லை.

இனம் 66 உயர் கல்வி ஆராய்ச்சிக் கழகங்களிலும் அறிவியல் தொழில்நுட்பக் கழகங்களிலும் தகைமை (தரம்) ஒருங்கிணைப்புக்கும் தகைமைத் தீர்வுக்குமான அதிகாரத்தை ஒன்றிய அரசுக்கு வழங்குகிறது.

இவ்வாறு இந்திய அரசமைப்பு தொடக்கத்திலேயே கல்வித் துறையில் சில தலைக்கூறுகளை ஒன்றிய அரசின் கையில் ஒப்படைத்து மாநில அதிகாரத்தை வெட்டிக்

குறுக்கிடக் காண்கிறோம். நடைமுறையளவில் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி), இந்திய மேலாண்மைக் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் (எய்ம்ஸ்) போன்றவை முழுக்க முழுக்க இந்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. மாநில அரசுகளுக்கு இவற்றில் எள்முனையளவு அதிகாரமும் கிடையாது.

இவை நீங்கலாகக் கல்வி என்பது மாநிலப் பட்டியலில் இடம் பெற்றது. (இப்போது பொதுப்பட்டியல் என்கிற இசைவுப் பட்டியலில் இனம் 25). இந்த இனம் ”தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக் கழகங்கள் உட்படக் கல்வி” என்று சொல்கிறது. ஆனால் ஒன்றியப் பட்டியலின் 63, 64, 65, 66 இனங்களுக்கு உட்பட்டுத்தான்! இவ்வாறு மாநிலத்தின் கல்வியதிகாரத்துக்குக் கட்டுத்தளையிடப்படுகிறது. கல்வித் துறையில் மாநில அதிகாரத்துக்கு வெளிப்படையாகக் கட்டுத்தளையிடாத ஒன்றே ஒன்று வேளாண் கல்வி மட்டும்தான் (மாநிலப் பட்டியலில் இனம் 14).

## நெருக்கடிநிலைக் காலம்

ஆகவே தொடக்கத்திலிருந்தே இந்திய அரசமைப்பில் கல்வி மாநில அரசின் தனிமுழு அதிகாரமாக இடம்பெறவில்லை என்பதே உண்மை. இருப்பினும் மாநில அதிகாரப் பட்டியலில் கல்வி இடம் பெற்றதைக் கோட்பாட்டளவில் ஒரு வெற்றியெனவே கருத வேண்டும். மாநிலம் மொழிவழிப்பட்டதாக உள்ள வரை தேசிய இனத்தைக் குறிக்கும் என்பதால் மாநிலத்துக்குக் கல்வியதிகாரம் என்பது அந்தந்தத் தேசிய இனத்தின் பண்பாட்டு இறைமைக்குரிய அறிந்தேற்பாகும். தேசிய இனங்களின் அடிமைமுறியான அரசமைப்பில் இவ்வாறான குடியாட்சியக் கூறுகள் இடம் பெற்றிருப்பது மையத்தில் அதிகாரக் குவிப்பை நாடிய இந்திய ஆளும் வகுப்புகளுக்கு ஏற்புடையதாக இல்லை. தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் பாசிச மனத்துக்கும் உவப்பாக இல்லை. நெருக்கடி நிலைக் காலம் அவருக்கான வாய்ப்பை வழங்கிற்று.

1975-77 நெருக்கடிநிலைக் காலத்தில் அரசமைப்புச் சட்டத்துக்கான 42ஆம் திருத்தத்தைக் கொண்டு இந்திய அரசமைப்பின் குடியாட்சியக் கூறுகள் ஒவ்வொன்றின் மீதும் இந்திரா கொடுந்தாக்குதல் தொடுத்தார். இந்த ஒரு திருத்தத்தால் இந்திய அரசமைப்பு போய் ‘இந்திரா அரசமைப்பு’ வந்து விட்டதாகச் சொல்லப்பட்டது. அந்த 42ஆம் திருத்தத்தைக் கொண்டுதான் கல்வி அதிகாரம் மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியல் என்கிற இசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது.

1977ஆம் ஆண்டு இந்திராவின் தேர்தல் தோல்விக்குப் பின் ஆட்சிக்கு வந்த மொரார்ஜி

தேசாய் அரசு 42ஆம் திருத்தத்தின் வேறுசில கூறுகளை நீக்கிய போதும் கல்வியை மாநில அதிகாரப் பட்டியலுக்கு மீட்டுக் கொடுத்ததா என்றால் இல்லை. அடுத்து வந்த 40க்கு மேற்பட்ட ஆண்டுகளில் எந்த ஆட்சியும் இதற்கான முயற்சி கூட செய்யவில்லை. மாநில சுயாட்சிக் கொள்கை பேசும் கட்சிகள் இந்த ஆட்சிகளில் தொடர்ந்து இடம் பெற்றனவே தவிர யாரும் இதற்கான கோரிக்கை கூட எழுப்பவில்லை. மருத்துவக் கல்விக்கான தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) திணிக்கப்பட்டுத் தமிழகத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய பிறகுதான், இதன் குறியீடாக அனிதா தற்கொலை நிகழ்ந்த பிறகுதான் கல்வியை மீண்டும் மாநில அதிகாரப் பட்டியலில் சேர்க்கும் கோரிக்கையே உயிர்பெற்றது.

## இசைவுப் பட்டியலில் கல்வி அதிகாரம்

இசைவுப் பட்டியல் என்பதும் இறுதிநோக்கில் ஒன்றியப் பட்டியலே என்பது இப்போது மோதி அரசால் செயலளவில் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. ஏனென்றால் மாநில அரசுதான் இந்திய அரசின் இசைவு பெற வேண்டுமே தவிர இந்திய அரசு மாநில அரசுகளின் இசைவுபெறத் தேவையில்லை என்பதே மெய்ந்நடப்பாக உள்ளது. இந்த அடிப்படையில்தான் இந்திய அரசு எந்த மாநில அரசின் இசைவும் பெறாமலே ஒரு புதிய கல்விக் கொள்கையை வகுத்து அறிவித்துள்ளது. அதுதான் தேசியக் கல்விக் கொள்கை - 2020.

கல்வி ஒன்றியப் பட்டியலில் இருந்தால் எப்படியோ அதே போலத்தான் இசைவுப் பட்டியலில் இருக்கும் போதும் இந்திய அரசு செயல்பட்டுள்ளது. இந்தக் கொள்கை செயல்வடிவம் பெற்றால் மாநில அரசுகளுக்குக் கல்வித் துறையில் எவ்வித அதிகாரமும் மிஞ்சாது. இந்திய அரசுக்கு ஏவல் செய்வதே மாநிலங்களின் கடன் என்றாகி விடும்.

## **தேசியக் கல்விக் கொள்கை - 2020**

இந்தக் கொள்கையறிக்கையின் நல்லது கெட்டதெல்லாம் ஒருபுறமிருக்க இந்தியா முழுமைக்கும் ஒரே தேசியக் கல்விக் கொள்கை என்ற கருத்தையே நாம் மறுதலிக்க வேண்டும். நமக்குத் தேவை ஒவ்வொரு தேசிய இனத்துக்குமான தேசியக் கல்விக் கொள்கைகள்தாமே தவிர இந்தியாவுக்கான ஒற்றைத் தேசியக் கல்விக் கொள்கை அன்று.

ஒவ்வொரு துறையிலும் அதிகாரப் பரவலாக்கம் ஒரு குடியாட்சியக் கோரிக்கையாக வலியுறுத்தப்படும் காலத்தில், இந்தியத் தேசியக் கல்விக் கொள்கை - 2020 ஆனது அதிகாரத்தை அனைத்து வகையிலும் மையப்படுத்தும் முயற்சியாக உள்ளது. சான்றாகக் கல்வி தொடர்பான

அனைத்து அறுதி அதிகாரத்தையும் இந்தக் கல்விக் கொள்கை 'ராஷ்ட்ரிய சிக்ஷா அபியான்' (தேசியக் கல்விப் பேரவை) என்ற மைய அமைப்பின் கையில் குவிக்கிறது. இந்த அமைப்பின் தலைவராக நடுவண் அரசின் கல்வி அமைச்சர் பொறுப்பு வகிப்பார். பல்கலைக்கழக நல்கைக் குழு போன்ற கல்வித் துறை சார்ந்த மற்ற அமைப்புகள் கலைக்கப்பட்டு விடும், அல்லது அவற்றின் அதிகாரப் பல் ஒவ்வொன்றும் பிடுங்கப்பட்டு விடும். தேர்வுகளையும் கூட மையப்படுத்தும் வகையில் தேசியத் தேர்வு முகமை (NATIONAL TESTING AGENCY) அமைக்க வேண்டும் என்பது இந்தக் கல்விக் கொள்கையின் திட்டங்களில் ஒன்று.

பொறியியல், மருத்துவம், மேலாண்மை ஆகிய உயர்கல்விக்கு மட்டுமல்ல. இளங்கலைப் பட்டப் படிப்புக்கும் கூட நாடுதழுவியப் பொதுத்தேர்வு நடத்த வேண்டும் என்கிறது இந்தக் கல்விக் கொள்கை.

## நீட் கொடுமை

நீட் முதலான தேர்வுகள் வெறும் நுழைவுத் தேர்வுகள் அல்ல. அவை ஒருங்கே தகுதியையும் நுழைவையும் தீர்மானிக்கும் படியானவை. இதன் பொருள் என்ன? தமிழ்நாட்டில் ஒரு நேரம் நடந்து கொண்டிருந்தவை போன்ற நுழைவுத் தேர்வுகளில் பள்ளியிறுதி மதிப்பெண்களும் கணக்கில் கொள்ளப்படும். நீட் முதலானவற்றில் அந்த மதிப்பெண்களுக்கு மதிப்பே இருக்காது. பழைய ஏற்பாட்டில் 12 ஆண்டுகள் அல்லது இந்தக் கல்விக் கொள்கை சொல்லும் 11 ஆண்டுகள் படித்த படிப்பும், அதன் வழி பெற்ற மதிப்பெண்களும் பட்டப் படிப்பில் நுழைவதற்குப் பயன்பட மாட்டா. ஒரே ஒரு தேர்வில் பெறப்படும் மதிப்பெண் மட்டுமே மாணவரின் உயர்கல்விக்கு சாவா வாழ்வா என்பதைத் தீர்மானிக்கும்.

பள்ளிக் கல்வி பல்வேறு திறப்பட்டதாய் இருக்க நீட் முதலான தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு அனைத்து மாணவர்களுக்கும் ஒன்றே என்பது எவ்வளவு பெரிய அநீதி? அதிலும் இந்தியா முழுமைக்கும் ஒரே நீட் என்பது காலங்காலமாகக் கல்வியுரிமை மறுக்கப்பட்ட குமுகப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களை வழிமறித்து வெளியேற்றவே பயன்படும்.

சமூக வகையிலும் கல்வி வகையிலும் பிற்பட்ட வகுப்புகள் இருப்பதை இந்திய அரசமைப்பு (உறுப்பு 15) ஏற்றுக் கொள்கிறது. இந்தக் கல்விக் கொள்கை ஏற்றுக் கொள்கிறதா? ஏற்றுக் கொள்கிறது என்றால் நீட் போன்ற வடிப்பான்களை அனைத்தளாவியன ஆக்குவது இந்தப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களின் நலனில் எவ்வாறு தாக்கங்கொள்ளும் என்பதை இந்த அறிக்கை கணக்கில் கொண்டதற்கான அகச் சான்று ஏதுமில்லை. சமூக நீதி, சமத்துவம் என்று ஒப்புக்குச்

சொல்லிக் கொள்ளும் இந்தக் கல்விக் கொள்கையின் திட்டங்கள் சமூக நீதியையும் சமத்துவத்தையும் ஆழக் குழி தோண்டிப் புதைக்க முற்படுகின்றன என்பதே மெய்.

மாநில உரிமைகள் என்ற மங்கல வழக்கில் மறைந்துள்ள தேசிய இன உரிமைகளுக்கும் சமூக நீதிக்குமான இடையுறவுக்கும் எதிர்மறைச் சான்றாக இந்தக் கல்விக் கொள்கை அமைந்துள்ளது. மாநில உரிமைகள் தாக்குறும் போதெல்லாம் சமூக நீதி தாக்குறுகின்றது. சமூக நீதி தாக்குறும் போதெல்லாம் மாநில உரிமைகள் தாக்குறுகின்றன.

**கல்வி மொழிச் சிக்கல்**

எந்தவொரு கல்விக் கொள்கையிலும் கல்வி மொழி பற்றிய நிலைப்பாட்டுக்கு இன்றியமையாப் பங்குண்டு. இதுதான் எமது கல்வி மொழிக் கொள்கை என்று தெளிவாகப் பறைசாற்றாத ஒரு கல்விக் கொள்கை எப்படிக் கல்விக் கொள்கையாக இருக்க முடியும்?

தமிழ்நாட்டில் 2010ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சமச்சீர் கல்வியிலும் ஒரு தெளிவான கல்வி மொழிக் கொள்கை இல்லை என்பதுதான் மிகப் பெரிய ஊனம்! ஆங்கிலவழிக் கல்வி, தமிழ்வழிக் கல்வி இரண்டையும் வைத்துக் கொண்டு இரண்டுக்குமிடையே சமச்சீர்மை எப்படி வாழும்? தமிழ்நாட்டில் தமிழ் படிக்காமலே பள்ளிக் கல்வியும் அதற்கு மேல் பட்டப் படிப்பும் முடிக்க இயலும் என்ற அவலநிலையை மாற்றிப் பள்ளிக் கல்வியளவில் - மாநிலப் பள்ளிகல்வி வாரியத்துக்கு உட்பட்ட வரை மட்டும் - தமிழைக் கட்டாயப் பயில்மொழி ஆக்கியது மட்டும்தான் சமச்சீர் கல்வியின் ஒரே ஒரு சமச் சீர்மையாக அமைந்தது. இந்தச் சமச்சீர்மையையும் கூட தமிழ்நாட்டில் இயங்கும் நடுவண் பள்ளிகளுக்கும் மைய வாரியப் பள்ளிகளுக்கும் விரிவாக்கும் அரசியல் மனத்திட்பம் தமிழக அரசுக்கு இல்லாது போயிற்று.

தரம் எனப்படும் கல்வித் தகைமைக்கும் பயிற்றுமொழிக்குமான உறவைப் புரிந்து உள்வாங்கிக் கொள்ளாத கல்விக் கொள்கையால் கல்வித் துறையில் எந்த முன்னேற்றமும் காண முடியாது.

கல்வி மொழி என்பதென்ன? முதலாவதாக அது பயிற்றுமொழியைக் குறிக்கும். பொதுவாக அது தாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும். தாய்மொழி என்பது ஒவ்வொரு தேசிய இனத்தின் குமுகத் தாய்மொழியும் ஆகும். அதாவது தேசிய மொழி!

**தென் ஆப்பிரிக்கா, இசுரேல்**

விதிவிலக்கான சில வரலாற்று சூழல்களில் தாய்மொழிக்கு மாறாக வேற்றுமொழி ஒன்று பொதுமொழியாக அமையும் போது அதையே கல்விமொழியாகவும் கொள்ள நேரிடலாம். தென்

ஆப்பிரிக்காவில் கறுப்பின மக்கள் இனஒதுக்கலை எதிர்த்து ஒரு தேசமாக ஒன்றுபடும் வரலாற்றுத் தேவை நெருக்கியதால் இரவல் மொழியான ஆங்கிலத்தையே பொதுமொழியாக்கிக் கொண்டார்கள். அதுவே அவர்களின் போராட்ட அணித்திரட்சிக்கான ஊடகமும் கல்விமொழியும் ஆயிற்று. தென்னாப்பிரிக்க வரலாற்றில் ஆகப்பெரிய மொழிப் போராட்டமான சொவெட்டோ எழுச்சி ஆப்பிரிக்க மாணவர்கள் மீது ஒரு பிரிவு வெள்ளையரின் மொழியான ஆப்பிரிக்கான்ஸ் மொழித் திணிப்பை எதிர்த்து நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இசுரேலிய யூதர்கள் வெவ்வேறு மொழிகொண்ட வெவ்வேறு தேசங்களிலிருந்து வந்தவர்கள் என்றாலும் தமது யூதத் தேசியத்துக்கான பொதுமொழியாக எபிரேயத்தை (Hebrew) மீட்டு வளர்த்துள்ளார்கள். அவர்கள் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் எபிரேயத்தைக் கொண்டிருப்பினும் மக்கள்தொகையில் 15 விழுக்காடான அரேபியர்களுக்கு அரேபிய மொழியிலேயே கல்வி பெறும் உரிமை உள்ளது. இசுரேலின் இந்திய நண்பர்களுக்கு இது தெரியுமா?

கல்வி மொழியைப் பொறுத்த வரை தாய்மொழியே கல்வி மொழியாக இருக்க வேண்டும், அதாவது அதுவே அனைத்து நிலைகளிலும் பயிற்றுமொழியாகவும், முதல் பயில்மொழியாகவும் இருக்க வேண்டும் பயிற்றுமொழி வேறாகவும் முதல் பயில்மொழி வேறாகவும் இருக்க முடியாது. முதல் பயில்மொழி, இரண்டாம் பயில்மொழி என்பது வெறும் வரிசை எண் தொடர்பான சிக்கலன்று. அது பயில்முறையிலான வேறுபாட்டைக் குறிக்கும். முதல் பயில்மொழியை இயற்கை முறையிலும் இரண்டாம் பயில்மொழியை மொழிமாற்ற முறையிலும் கற்பதுதான் மொழிக் கல்வியின் அறிவியல்.

### தாய்மொழிக் கல்வியின் வலிமை

இந்திய அரசமைப்புச் சட்டம் ஆட்சி மொழி (அலுவல் மொழி), நீதிமன்ற மொழி, சட்ட மொழி பற்றியெல்லாம் பேசிய போதிலும் குறிப்பாகக் கல்விமொழி பற்றி எதுவும் சொல்லவில்லை. இந்திய அரசோ மாநில அரசுகளோ தமக்கென்று ஒரு கல்வி மொழிக் கொள்கையை இது வரை அறிவித்ததும் இல்லை.

அனைத்து வகையிலும் அயல் மொழியின் இடத்தில் தாய் மொழியைக் கல்வி மொழியாகக் கொள்வது சமூக நீதிக்கான பெரும்பாய்ச்சலாக அமையும். அதாவது பார்ப்பன-பனியா-பெருமுதலாளிய ஆளும் வகுப்புகள் முனைந்து கடைப்பிடிக்கும் சமூக அநீதிக்குப்

பெரும் அறைகூவலாகி விடும். இந்தியாவில் அயலாட்சியால் நேரிட்ட ஆகப்பெரும் தீங்கு நாம் நமது தாய்மொழிக் கல்வியைப் புறக்கணித்ததுதான் என்று 'தேசத் தந்தை'யே கூறியிருப்பினும் இந்த முக்கால் நூற்றாண்டுக்கும் மேலான காலத்தில் தாய்மொழிக் கல்வி தொடர்பான உறுதிப்பாடு இல்லாமல் போனதற்குப் பின்னால் இருப்பது ஆளும் வகுப்புகளின் ஊன்றிய தன்னலன்தானே தவிர வெறும் கருத்துத் தெளிவின்மையன்று. தாய்மொழிக் கல்வியா அல்லவா? என்பது வெறும் கருத்துப் போராட்டமன்று, அது வகுப்புப் போராட்டத்தின் (வர்க்கப் போராட்டத்தின்) ஒரு வெளிப்பாடே ஆகும். தாய்மொழிக் கல்வி இல்லாமல் இட ஒதுக்கீட்டைக் கொண்டே சமூக நீதியை அடையும் முயற்சி ஒற்றைக் காலால் நொண்டியடிப்பதே ஆகும்.

சரி. தாய்மொழிக் கல்வி பற்றி தேசியக் கல்விக் கொள்கை -- 2020 என்ன சொல்கிறது? இஸ்ரோ என்னும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக இருந்த கஸ்தூரிரங்கன் தலைமையிலான கல்விக் குழுவினர் சென்ற ஆண்டு விரிவான அறிக்கை தந்த போதே அதில் தாய்மொழிக் கல்வியின் தேவை குறித்துப் பேசியிருந்தனர்: ஆங்கிலக் கல்விதான் அறிவுக்கு வழி என்று எண்ணியிருந்தோம், ஆனால் பல நாடுகளும் தாய்மொழிக் கல்வியால் முன்னேறியிருக்கக் கண்டோம் என்று குறிப்பிட்டிருந்தனர். நல்ல கருத்து! சரியான கருத்து! ஆனால் இதனைச் செயலாக்கம் செய்ய வேண்டுமே, அதற்கு வழி சொன்னார்களா?

முதலாவதாக இவர்கள் உண்மையான கல்வியாளர்களாக இருப்பின் தாய்மொழிக் கல்விதான் முன்னேற்றத்துக்கு வழி என்பது ஏற்கெனவே இவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். பல நாடுகளையும் பார்த்துப் புதிய கண்டுபிடிப்பாக "யுரேகா!" என்று கூவாத குறையாக இந்த உண்மையை அறிக்கையிட வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காது. போகட்டும் இப்போதாவது தெரிந்து கொண்டார்களே என்று நிம்மதி அடையலாம்.

**இயன்றவிடத்து, கூடுமான வரை நஞ்சு**

ஆனால் இந்திய அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுள்ள இந்தக் கொள்கையறிக்கை என்ன சொல்கிறது? பயிற்றுமொழியைப் பொறுத்து ஐந்தாம் வகுப்பு வரை "கூடுமான வரை" தாய்மொழியைப் பயன்படுத்த விருப்பம் தெரிவிக்கிறது. ஏன் ஐந்தாம் வகுப்பு வரை? ஏன் ஆறாம் வகுப்பில் கூடாது? பள்ளியிறுதி வரை, கல்லூரி இறுதி வரை, ஏன் எல்லா நிலைகளிலும் தாய்மொழியே பயிற்றுமொழியாக இருக்கக் கூடாது? ஐந்தாம் வகுப்பு வரை என்று தேசியக் கல்விக் கொள்கை இடுவதும் கூட பிச்சைதான், இது கட்டளையில்லை, கட்டாயமில்லை. Wherever possible என்பதைத் தமிழில் இயன்றவிடத்து எனலாம். அல்லது கூடுமான வரை எனலாம். ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு போன்றதே wherever possible என்னும் இந்த இரு சொற்கள்.

இப்போது ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டு நடத்தப்படும் எந்தக் கல்வி நிறுவனமாவது அல்லது எந்தக் கல்வி வாரியமாவது இனிமேல் தாய்மொழியைப் பயிற்றுமொழியாக ஏற்றுக் கொள்வதற்கு இந்தக் கல்விக் கொள்கையால் வழிபிறக்குமா? கேந்திரிய வித்யாலயா எனப்படும் நடுவணரசுப் பள்ளிகள், சிபிஎஸ்இ எனப்படும் மையக் கல்வி வாரியப் பள்ளிகள், ஐஎஸ்சி எனப்படும் இந்தியப் பள்ளிச் சான்றிதழ் படிப்புகள், மாநில வாரியத்துக்குட்பட்ட தனியார் பள்ளிகள், திமுக, அஇஅதிமுக ஆட்சியாளர்கள் நிகழ்த்திய ஆங்கிலத் திணிப்பால் சகட்டுமேனிக்குச் சீரழிக்கப்பட்ட தமிழ்நாட்டு அரசுப் பள்ளிகள்... இவற்றில் எந்தப் பள்ளிகள் தேசியக் கல்விக் கொள்கையின் 'விருப்பத்தை' மதித்துத் தாய்மொழியைப் பயிற்றுமொழியாக்க முன்வரப் போகின்றன? எதுவும் இல்லை.

இந்திய மொழிகளின் அழிவு பற்றி இந்தக் கல்விக் கொள்கை ஒரு கட்டத்தில் பேசுகிறது (22.5). வரிவடிவமற்ற மொழிகள் அழிந்து கொண்டிருக்கின்றன. அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்ற 22 மொழிகளும் கூட இடர்ப்பாடுகளை சந்திக்கின்றன (22.6). தாய்மொழியே கல்வி மொழியாக இல்லாமற் போனால் அது மெல்ல மெல்லக் காணாமற்போகும்தான். தமிழே இந்த ஆபத்தைத்தான் எதிர்நோக்கியுள்ளது. ஆனால் தாய்மொழியைக் கல்விமொழியாக வலியுறுத்தாத ஒரு கல்விக் கொள்கை மொழிகளின் அழிவு பற்றி வருந்துவதால் என்ன பயன்?

இந்தக் கல்விக் கொள்கை தாய்மொழிக் கல்விக்கு வழி செய்கிறது என்பதெல்லாம் வெறும் பசப்பு! இந்தக் கல்விக் கொள்கை மெய்யாகவே தாய்மொழிக் கல்விக்கு அறுதியாகவும் உறுதியாகவும் வழி செய்யுமானால், மற்ற எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு அந்த ஒன்றைத் தயங்காமல் போற்றலாம். ஆனால் இந்தக் கல்விக் கொள்கையும் சரி, இந்தக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ள இந்திய அரசும் சரி, இந்தக் கல்விக் கொள்கையை எதிர்ப்பதாகச் சொல்லும் தமிழக அரசும் சரி தாய்மொழிக் கல்வியில் கொள்கை உறுதிப்பாடில்லாதவை, சரியாகச் சொன்னால் தாய்மொழிக் கல்வியை வீழ்த்தும் உறுதி கொண்டவை என்பதே மெய்.

அண்மைய ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மாநகராட்சி உள்ளிட்ட அரசுப் பள்ளிகளிலேயே மழலைநிலை தொடங்கி ஆங்கிலவழிதான் கோலோச்சுகிறது.

இந்தி எதிர்ப்பின் பெயரால் மும்மொழிக் கொள்கையை எதிர்ப்பதாகச் சொல்லும் தமிழக அரசு தமிழ்நாட்டிலுள்ள நடுவண் பள்ளிகளிலும் சிபிஎஸ்இ பள்ளிகளிலும் இந்திக் கல்விக்கு ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவித்ததில்லை என்பது மட்டுமல்ல, மாநில வாரியத்துக்குட்பட்ட தனியார் பள்ளிகளில் இந்தி கட்டாயமாகக் கற்றுத் தரப்படுவதையும் ஏற்றுக்கொண்டுதான்

உள்ளது.

இந்தத் தேசியக் கல்விக் கொள்கையின் வழியாக மென்மேலும் உறுதி செய்யப்படும் அதிகார மையப்பாடு தாய்மொழிக் கல்வியை அறவே ஒழித்துக்கட்டி விடும். ஏற்கெனவே தாய்மொழி மறுப்புக் கொள்கை அனைவர்க்கும் கல்வி என்ற குறிக்கோளை மறுப்பதற்கே பயன்பட்டு வருகிறது.

## ஆங்கிலத் திணிப்பு

பயிற்றுமொழி பற்றிய உறுதியின்மையோடு சேர்ந்து வருவது இரண்டாம் பயில்மொழி பற்றிய குழப்பம். இப்போதே தேர்ந்தெடுக்கும் வாய்ப்பில்லாத இரண்டாம் பயில்மொழியாக ஆங்கிலம் திணிக்கப்படுகிறது. இரண்டாம் பயில்மொழி ஒன்றின் தேவையை நாம் மறுக்கவில்லை. ஆனால் ஆங்கிலத்துக்கு மாற்றாக வேறு அயல்மொழி ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு இல்லாததால் இது ஆங்கிலத் திணிப்பாகிறது. எந்த வகுப்பு வரை தாய்மொழி மட்டும் பயில வேண்டும், எந்த வகுப்பிலிருந்து இரண்டாம் பயில்மொழியாக ஆங்கிலம் அல்லது வேறு அயல்மொழியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற வரையறை ஏதும் இந்தக் கல்விக் கொள்கையில் இடம்பெறவில்லை. இந்தியாவில் ஆங்கிலத் திணிப்பால் ஏற்பட்டுள்ள கல்வி மறுப்பையும் சமூக நீதி மறுப்பையும் ஆங்கில மேதாவிகளான கஸ்தூரிரங்கன் வகையறா உணர்ந்ததாகவே தெரியவில்லை.

பயிற்றுமொழியாகவும் ஒற்றை இரண்டாம் பயில்மொழியாகவும் ஆங்கிலம் திணிக்கப்படுவது போதாதென்று மூன்றாம் பயில்மொழியாக "இந்தி அல்லது பிற மொழி" என்று சொல்லிக் கொண்டே செயலளவில் இந்தியைத் திணிப்பதற்கு இந்த அறிக்கை வழிசெய்கிறது. இந்தியையும் செம்மொழிகளில் ஒன்று என்ற பெயரில் சமற்கிருதத்தையும் கல்விமுறைக்குள் மெல்ல நுழைக்கும் தந்திரம் காணப்படுகிறது. இது அனைவர்க்கும் கல்வி என்ற குறிக்கோளை மென்மேலும் விலக்கி நிறுத்தி எட்டாக் கனி ஆக்குவதாகத்தான் முடியும் என்பதற்குப் பெரிய விளக்கம் தேவையில்லை.

## மொழிக் கல்வியும் அறிவுக் கல்வியும்

அறிவுக் கல்விக்கும் மொழிக் கல்விக்குமான உறவைப் புரிந்து கொள்வதில் தேசியக் கல்விக் கொள்கை-2020 பெரிதும் குழம்பிப் போயுள்ளது. கூடுதலான மொழிகள் தெரிந்தால் கூடுதல் அறிவாளி என்ற கொச்சையான சமன்பாடு இந்தக் கொள்கை வகுத்த பெருமக்களை ஆட்டிப் படைப்பது போல் தெரிகிறது (பத்தி 4.11). கல்விக்கூடங்களை அறிவுத் துறைகளில் தேர்ச்சி தரும் நிலையங்கள் என்ற நிலையிலிருந்து பன்மொழிப் பயிற்சிக் கூடங்களாக மாற்றத்

துடிக்கின்றனர்.

நம் மாணவர்களில் பன்மொழிக் கல்வி வேட்கை கொண்ட சிலருக்கு அதற்கான கல்வி பெறும் வாய்ப்பும் கட்டமைப்பு வசதியும் இருக்க வேண்டும்தான். ஆனால் அதற்காகப் பொதுநிலைக் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் பன்மொழிப் பயிற்சி நிறுவனங்களாக மாற்ற நினைப்பது தனிமனித வளர்ச்சிக்கோ குமுக வளர்ச்சிக்கோ பயன்படாது.

குழந்தைப் பருவத்திலேயே பல மொழிகளையும் கற்கும் திறன் உண்டு என்பது இந்தப் பன்மொழிக் கல்வி ஆசைக்குச் சொல்லப்படும் விளக்கம். திறன் உண்டா இல்லையா என்பதன்று, தேவை உண்டா என்பதே வினா. பொதுவான தேவை இல்லை என்பதுதான் சமூக நீதி போற்றும் கல்வியாளர்தம் முடிவு.

மூன்றாம் வகுப்பிலும் ஐந்தாம் வகுப்பிலும் எட்டாம் வகுப்பிலும் தேர்வு நடத்த வேண்டும் என்கிறது தேசியக் கல்விக் கொள்கை - 2020 அறிக்கை. பலரும் சொல்வது போல் பொதுநிலைத் தேர்வு (public examination) என்று அறிக்கை குறிப்பிடவில்லை. பள்ளித் தேர்வு என்றுதான் சொல்கிறது. (அறிக்கை, பத்தி 4.40). இதற்கு மாறாக 10, 12ஆம் வகுப்புகளில் இப்போதிருப்பது போல் வாரியத் தேர்வுகள் (Board Examinations) நடத்தப்படும் என்று சொல்வதன் மூலம் 3, 5, 8ஆம் வகுப்புத் தேர்வுகளும் 10. 12ஆம் வகுப்புத் தேர்வுகளும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. ஆனால் 3, 5, 8ஆம் வகுப்புத் தேர்வுகளை உரிய ஆணையம் (appropriate authority) நடத்தும் என்று சொல்வதன் பொருள் என்ன? இந்தத் தேர்வுகளில் தடைப்படுத்தல் (detention) இருக்குமா? என்பதும் தெளிவாக்கப்படவில்லை. இப்போதிருக்கும் முறைதான் தொடரும் என்று புரிந்து கொள்வதானால் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்ட நடைமுறைகளை இந்தத் தேசியக் கல்விக் கொள்கை - 2020 ஏற்றுக் கொள்கிறதா? இந்தக் கல்விக் கொள்கையின் ஒட்டுமொத்தப் பகைப்புலத்தில் வைத்துப் பார்க்கும் போது 3, 5, 8ஆம் வகுப்புத் தேர்வுகளும் முதல் தலைமுறையாகக் கல்வி நிழலில் ஒதுங்கும் சமூகப் பின்னணியிலிருந்து வரும் மாணவர்களை வடிகட்டியோ வடிகட்டாமலே அச்சப்படுத்தியோ இடைநிற்க ஊக்கப்படுத்தும் விளைவையே கொண்டிருக்கும் என்று அஞ்சுவதற்கு இடமுண்டு.

**தேர்வென் செய்யும்?**

பள்ளிக் கல்வி முடிந்து 11ஆம் வகுப்பில் வாரியத் தேர்வில் பெறுகிற வெற்றி - இந்தத் தேசியக் கல்விக் கொள்கையின் படி - பல்கலைக்கழக நுழைவுக்கான தகுதியாக (eligibility) மதிக்கப்படாது. பழைய 11ஆம் வகுப்புச் சான்றிதழில் (SSLC - Secondary School Leave Certificate) பல்கலைக் கழகப் புதுமுகப் படிப்புக்கு (Pre-University Course) இடைக்காலத் தேர்வு பெற்றதாகச்

சான்றளிப்பார்கள். மேனிலைக் கல்வி (+2) வந்த பிறகும் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் கல்லூரிக் கல்வியில் நுழைவதற்கான தகுதியை வழங்கும். இடைக்காலத்தில் மருத்துவப் படிப்புக்கு நுழைவுத் தேர்வு வைக்கப்பட்ட போதும் +2 மதிப்பெண்களும் சேர்த்தே கணக்கிடப்பட்டன.

வேறுவேறு வாரியங்களில் வேறுவேறு கல்வித் திட்டங்களில் அல்லது வேறுவேறு பாடத் திட்டங்களில் பள்ளிக் கல்வி முடித்த மாணவர்களுக்கு ஒரே அடிப்படையில் கேள்வித்தாள் கொடுத்து நுழைவுத் தேர்வு நடத்துவது பெரும் அநீதி அல்லவா? இதை நாம் கற்பனையாகச் சொல்லவில்லை. நீட் (NEET) என்ற பெயரே இது வெறும் நுழைவுத் தேர்வு அன்று என்பதை உணர்த்தும். National Eligibility and Entrance Test தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு என்பதில் 'தேசிய' என்பது இது நாடு முழுமைக்குமானது என்பதைக் குறிக்கும். அதாவது மாநில வேறுபாடுகளோ கல்வி வாரிய வேறுபாடுகளோ ஒரு பொருட்டே அன்று. 'தகுதி' என்பதன் பொருள் பள்ளிப் படிப்பை நிறைவு செய்ததால் பெற்ற தகுதிக்கு மதிப்பில்லை, இனிதான் இந்தத் தேர்வின் வழியாகத் தகுதி பெற வேண்டும். இந்தத் தகுதிக்கு மேல் கூடுதல் மதிப்பெண் பெறும் போட்டியில்தான் 'நுழைவு' பெற வேண்டும்.

**வர்ண தர்மமும் வர்க்க தர்மமும்**

இந்தக் கொடிய 'நீட்'தான் அனிதாவின் கனவுகளையும் உயிரையும் மாய்த்த கயிறு என்பதை எப்படி மறப்போம்? இப்போது நீட் எல்லாவற்றுக்கும் வர வேண்டும் என்பது இந்தத் தேசியக் கல்விக் கொள்கையின் திட்டம். மருத்துவம், பொறியியல் படிப்புகளில் சேர முடியா விட்டாலும் இளங்கலைப் படிப்பிலாவது பட்டம் பெறும் வாய்ப்பையும் சிதைத்து வெளியேற்றுவதுதான் இதன் கொடிய விளைவாக இருக்கும். படாத பாடுபட்டுப் பல்கலைக்கழகப் படிப்பில் சேர்ந்த பிறகும் நான்காண்டுப் பட்டப் படிப்பில் எப்போது வேண்டுமானாலும் வெளியேறிச் செல்லும் வழியைத் திறந்து வைக்கிறது இந்தக் கொள்கை. இடைநிற்றலைப் பல்வேறு நிலைகளிலும் ஊக்குவிப்பதே இதன் நோக்கம். இடைநிற்றலை ஒழிப்பதற்கு வழி தேடுவதற்கு மாறாக இடைநிற்றலை முறைப்படுத்தி இடைநிற்போரை கூலிப் பட்டாளத்தில் கொண்டுசேர்க்கும் நோக்கமும் காணப்படுகிறது.

வெவ்வேறு பேரிலான நவோதயா பள்ளிகளை வலுவாக்கும் முன்மொழிவு ஏராளமான அரசுப் பள்ளிகளும் உள்ளாட்சிப் பள்ளிகளும் மூடப்பட்டு ஏராளமான எளிய குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்படுவதில்தான் போய் முடியும்.

மழலை நிலையிலிருந்தே தொழிற்கல்வி, 13 வயதிலிருந்தே தொழிற்பயிற்சி என்பதை இந்த நோக்கத்துடன் இணைத்தே பார்க்க வேண்டியுள்ளது. இதனை நேர்ப் பொருளில் குலக்கல்வி என்று சொல்ல முடியா விட்டாலும் சாதியம் கோலோச்சும் வரை அப்படி ஒரு விளைவு இருக்கவே செய்யும். உள்ளூர்த் தொழில்கள் என்ற குறிப்பில் தச்சு வேலை, மண்பாண்டம் செய்தல், பாத்திர வேலை, தோட்ட வேலை என்ற வரிசையில் சலவைத் தொழிலையும் முடிதிருத்தத்தையும் துப்புரவுப் பணியையும் இடுகாட்டுப் பணியையும் சேர்க்காமல் விட்டதால் மொத்ததில் குலக்கல்வி முறைக்குத் தரும் ஊக்கத்தை மறைத்து விட முடியாது.

வர்ணாசிரம மீட்சியில் ஆர்எஸ்எஸ்-க்கும் அம்பானி அதானிகளுக்கும் நுட்பமான வேறுபாடு இருக்கவே செய்யும். இந்துத்துவச் சார்பையும் ஒட்டுறவு முதலியத்தின் தேவைகளையும் - அல்லது வர்ண தர்மத்தையும் வர்க்க தர்மத்தையும் - இணக்கப்படுத்தும் வழிமுறை இந்தக் கல்விக் கொள்கையின் சாரமாக அமையும். காங்கிரசாட்சியில் கொண்டுவரப்பட்ட நவோதயா கல்வியின் சாரமும் இதுவே. அதையே இப்போது மேலும் பரவலாக்க முயல்கின்றனர்.

இந்த ஏற்பாடு முழுவதும் வரலாற்று வழியில் கல்வியுரிமை மறுக்கப்பட்ட மக்களின் மெல்லத் திறந்த எண்ணும் எழுத்துமான அறிவுக்கண்களை அவிப்பதாகவே அமையும். இது சமூகநீதிக்குத் தீராக் கேடு செய்வதோடு, ஏராளமான பிஞ்சுக் கைகளை உழைப்பங்காடியில் அள்ளி வீசி, சேம உழைப்புப் பட்டாளத்தின் அணிகளைப் பெருகச் செய்து, உழைப்புத் திறனின் விலையை வீழ்த்தித் தொழிலாளர் உரிமைகளுக்கு வேட்டு வைத்து விடும்.

பள்ளிக் கூடங்கள் கற்றலில் இனிமை கூட்டிப் பல்துறை அறிவு புகட்டும் கல்விச் சோலைகளாக இருக்க விடாமல் சர்க்கஸ் விலங்குப் பயிற்சிக் கூடங்களைப் போல் நீட் பயிற்சி மையங்களாக மாற்றப்படுவதற்கே இந்தக் கல்விக் கொள்கை வழிகோலும். பயிற்சி மையங்களை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டே எல்லாக் கல்விக் கூடங்களையும் பயிற்சி மையங்களாக மாற்றி விடும்.

கல்வியை அடிப்படை உரிமை என்று அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்த பின்னும் கல்வி பெறுவது மக்கள் உரிமை, கல்வி கொடுப்பது அரசின் கடமை என்ற குறிக்கோளை அடைய விடாமல் செய்து கொண்டிருக்கும் கல்வி-வணிகமயத்துக்குத் தீர்வு காணும் முயற்சி கூட இந்தத் தேசியக் கல்விக் கொள்கையில் காணப்படவில்லை. சொல்லப் போனால் அது இந்த வணிகமயத்தைப் பல்கிப் பெருகச் செய்யவே வழிகோலுகிறது. மென்மேலும் தனியார்

கல்லூரிகளைப் பல்கலைக்கழக இணைப்பிலிருந்து பிரித்துத் தன்னாட்சிக் கல்லூரிகளாகக் கட்டவிழ்த்து விடுவதும் கல்வித் துறையில் ஈட்ட வெறியுடன் வணிகமயம் மண்டிப் பெருகவே வழிசெய்யும்.

**கல்விக் கொள்ளையா? மக்கள் சேவையா?**

அனைவர்க்கும் கல்வி என்ற உயரிய குறிக்கோளை அடைய அருகாமைப் பள்ளிகள் அல்லது அண்டைப் புறப்பள்ளிகள் (Neighbourhood Schools) என்ற கருத்தைச் சமூக நீதிக் கல்வியாளர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள். இந்தக் கல்விக் கொள்கையோ இதற்கு நேர் எதிர்த் திசையில் திட்டமிடுகிறது. முழுவிரிவான பள்ளி வளாகங்களைத் தோற்றுவிப்பது என்ற திட்டம் ஏழை எளிய மாணவர்களுக்கும் ஊர்ப்புற மாணவர்களுக்கும் எட்டாத் தொலைவில் கல்வியை வைத்து விடும். இப்போதிருக்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் நடைமுறையை வைத்துப் பார்த்தால் மேட்டுக்குடியினருக்கு மட்டுமே கல்வி கட்டுப்படியாகும் என்ற நிலையைத் தோற்றுவித்து விடும்.

அரசுப் பள்ளிகளைத் தகைமையற்றவையாகக் கருதும் மனப்போக்கு அவற்றைத் தனியார் பள்ளிகளுக்குக் கீழ்ப்பட்டவையாக்கி விடும் (7.10). ஏனைய துறைகளில் போலவே கல்வித் துறையிலும் பொதுத் துறையை முடக்கித் தனியார் துறையை வளப்படுத்துவதே இதனால் கண்ட பலனாய் இருக்கும். இது மாணவர் நலனுக்கும் மக்கள் நலனுக்கும் புறம்பானது மட்டுமன்று, ஆசிரியர்களைக் கொத்தடிமைகளாக்கி விடும்படியானது.

ஆசிரியர்களுக்குப் பதவியுயர்வு, ஊதிய உயர்வு ஆகியவற்றுக்கு அவர்கள் பணி செய்த காலத்தைக் கணக்கில் கொள்ளாமல் அவர்களின் செயல்பாடு பற்றிய மதிப்பீட்டையே அடிப்படையாகக் கொள்வது (பத்தி 5.20) ஆசிரியர்களை ஆட்சியாளர்களின் தயவில் நிறுத்தி விடும். அடிமைகளைப் பழக்கும் அடிமைகளாகவே ஆசிரியர்களை மாற்றும் முயற்சி இது

மாணவர்களைக் கசக்கி ஆசிரியர்களைப் பிழிந்து பெற்றோரை ஒட்டக் கறக்கும் கல்வியின் பெயரிலான கொள்ளை நிறுவனங்களைப் பற்றிய இந்தக் கல்விக் கொள்கையின் பார்வை என்ன தெரியுமா? இவை செய்யும் வேலைக்குப் பெயர் "philanthropy"! பரோபகாரம்! லோகோபகாரம்! மக்கள்சேவை! அரசும் இந்தக் கல்விச் சேவைக் கழகங்களும் சேர்ந்து இந்தக் கல்விக் கொள்கையைச் செயலாக்கப் போகின்றார்களாம்! கல்வியைப் பரவலாக்குவது, சமூக நீதியையும் சமத்துவத்தையும் மெய்ப்படச் செய்வது இவைதாம் இந்தக் கல்விக் கொள்கையின் ஊடாக அடைய விரும்பும் இலக்குகள் என்றால் முதலில் கல்வித் துறையை இந்தப் பகற்கொள்ளையர்களின் பிடியிலிருந்து மீட்க வேண்டும். இந்த எண்ணமே இல்லையென்றால்,

பகற் கொள்ளையர்களுக்குப் மலர்ப் பாதை அமைப்பதே இந்தக் கல்விக் கொள்கையின் மெய்ந்நோக்கம் என்று குற்றஞ்சாட்டுகிறோம்.

## இந்திய மரபும் சமற்கிருதப் பெருமையும்

கல்விக்கு அறிவியல் நோக்கு போலவே அறவியல் நோக்கும் வேண்டும் என்பது குமுக நலன் நாடும் கல்வியாளர்கள் எப்போதும் வலியுறுத்தி வருவது. இந்தத் தேசியக் கல்விக் கொள்கை - 2020 அறிவியல் நோக்கும் அறவியல் நோக்கும் அற்றது என்பதற்கு அது விதந்தோதும் இந்திய மரபும் சமற்கிருத நாட்டமுமே போதிய சான்றுகளாக உள்ளன. இந்தியாவில் எந்தவொரு கல்விக் கொள்கையும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் பெரும்பான்மை மக்களைக் கல்வியுரிமை அற்றவர்களாக்கிய பார்ப்பனியப் பண்பாட்டைக் கணக்கில் கொண்டு அதிலிருந்து மீண்டு வருவதற்கு வழிகாட்ட வேண்டும். மாறாக இந்தத் தேசியக் கல்விக் கொள்கை இந்திய மரபு என்றும் பாரதப் பெருமை என்றும் அதே பார்ப்பனியத்தைக் கொண்டாடுகிறது. அந்தப் பார்ப்பனியத்தின் ஊர்தியாக வட மொழியை அரியணையேற்ற ஆயிரம் வழி தேடுகிறது. சாதிய எதிர்ப்பில்லாமல் சமூக நீதி சமத்துவம் என்பதெல்லாம் வெறும் பசப்பு!

இந்தியாவில் உயர் கல்வித் துறையில் கடந்த காலத்தில் இடஒதுக்கீட்டின் வகிபாகம் என்ன? இட ஒதுக்கீட்டு முறையை உறுதிப்படுத்தவும் விரிவாக்கவும் இந்தக் கல்விக் கொள்கையின் பரிந்துரை என்ன? இந்த வினாக்களை முன்னிறுத்தி விடை தேடும் முயற்சியே இல்லை. இது சமூகநீதியை மௌனத்தால் கொல்லும் திட்டம் என்றே கருத வேண்டியுள்ளது.

சமற்கிருதம் ஒற்றுமைக்கான மொழி என்றும், முதன்மைச் செம்மொழி என்றும் போற்றப்படுவதும், எட்டாம் வகுப்பிலிருந்து சமற்கிருதம் படிப்பதற்கு மாநில அரசுகள் சிறப்பு நிதியளிக்கச் சொல்வதும், கல்விச் செயற்பாட்டாளர்கள், தன்னார்வலர்கள் என்ற பெயரில் ஆர்எஸ்எஸ் சிந்தனைப் பரப்புநர்களை முறைசார் கல்விக் கழகங்களுக்குள் நுழைய விடும் திட்டமும், அற நிறுவனங்களுடன் அரசுக் கூட்டாண்மை என்ற பெயரில் இந்துத்துவ நிறுவனங்களைக் கல்வியமைப்புக்குள் கலக்கும் ஆர்வமும் தேசியக் கல்விக் கொள்கை - 2020 என்ற இவ்வறிக்கையின் இந்துத்துவச் சார்புக்குச் சான்றுகள் ஆகும். சமற்கிருதத்தின் வாயிலாகவே சமற்கிருதம் கற்பிக்கும் முன்மொழிவு (பத்தி 4.17) கல்வித் துறையில் பார்ப்பனர்களின் முதனிலையை உறுதியாக நிலைநிறுத்தவும் பார்ப்பனரல்லாதாரைக் கல்வியில் ஊக்கமிழந்து வெளியேறச் செய்யவுமே வழிசெய்யும். பள்ளிப் படிப்பில் ஈராண்டு காலம் இந்தியாவின் செம்மொழிகளில் ஒன்றைப் பயிலும் வாய்ப்பு வழங்கும் திட்டமும் (4.19)

சமற்கிருதக் கல்விக்கு இன்னுமொரு கொல்லைப்புற வழியே ஆகும். ஒரு கட்டத்தில் 'சர்வம் சமற்கிருத மயம்' என்ற நிலைக்கு இந்தக் கல்விக் கொள்கை வந்து விடுகிறது (பத்தி 22.15).

சமற்கிருத்தின் பல்துறை படர்ந்த அறிவமைப்பு குறித்துப் பேசித் திளைக்கும் தேசியக் கல்விக் கொள்கையின் படைப்பாளர்கள் தமிழையும் ஒரு செம்மொழியாகக் குறிப்பிடுவதோடு சரி. செத்த மொழிக்கு இவ்வளவு சிறப்பு இருக்கக் கூடும் என்றால் செம்மொழிகளுக்கெல்லாம் செம்மொழியாகிய சீரிளமைத் திறம் குன்றாத் தமிழுக்கு எவ்வளவு சிறப்பு இருக்கக் கூடும் என்று இவர்கள் எண்ணிப்பார்க்கவே இல்லை. இவர்களுக்குத் தொல்காப்பியமோ திருக்குறளோ எதுவும் தெரியவில்லை. தெரிந்த யாரையும் இந்தக் குழுவில் அமர்த்தவும் இல்லை.

வரலாற்று ஆய்வாளர்களுக்கோ இலக்கியத் திறனாய்வாளர்களுக்கோ சமற்கிருதக் கல்வி தேவைப்பட்டால் அதில் ஒரு பிழையும் இல்லை. அதற்கான தனி ஏற்பாடுகள் இருக்கவே இருக்கின்றன. ஆனால் இதற்காகப் பொதுநிலையில் அனைத்து மாணவர்களையும் சமற்கிருதம் கற்கத் தூண்டுவது வீண் வேலை. இது இலத்தீன், கிரேக்கம் போன்ற மற்ற மொழிகளுக்கும் பொருந்தும். அவை அயல் மொழிகள், சமற்கிருதம் நம் மொழி என்று சொல்ல முற்படும் போதுதான் சொல்கிறவர்களின் சமூகச் சார்பு என்ன என்ற கேள்வி எழுகிறது.

தேசியக் கல்விக் கொள்கை - 2020 ஆவணத்தை ஒரு முறை படித்துப் பார்த்தாலே போதும், இந்தக் கொள்கையை வரைந்தவர்கள் வட மொழிப் பைத்தியங்கள் என்ற எண்ணமே மிஞ்சும். பல வழிகளிலும் இவர்கள் இந்திய மொழிகளுக்கெல்லாம் சமற்கிருதமே மூலம் என்று தந்திரமாக நிறுவ முயல்கிறார்கள்.

சமற்கிருதத்தில் என்ன இருக்கிறதோ இல்லையோ இந்துத்துவத்தின் சாரமான பார்ப்பனியம் இருக்கிறது. கல்வி மூட நம்பிக்கைகளை வளர்ப்பதாக இருக்கக் கூடாது என்று ஒப்புக்குக் கூட ஒரு குறிப்பும் இல்லாத இந்தக் கல்விக் கொள்கை வளர்க்க விரும்பும் விழுமியங்களில் ஒன்றாக 'நிஷ்காம கர்மா' வலியுறுத்தப்படுகிறது. வர்ணாசிரமத்துக்கு பகவத் கீதை தரும் நியாய விளக்கம் இது.

இந்நிலையில் இந்தத் தேசியக் கல்விக் கொள்கை அறிவியல் உணர்வு பற்றிப் பேசுவது (4.20) நகைப்புக்குரியது. அதே மூச்சில் 'இந்திய அறிவு' பற்றியும் பேசுகிறது. இந்திய மரபின் ஒரு கூறாகக் கூட வருண தர்மத்தையும் அது அறிவுக்குச் செய்த கேட்டையும் இந்தக் கல்விக் கொள்கை அறிந்தேற்கவில்லையே? ஏகலைவனிடம் கட்டை விரல் கேட்ட துரோணரும், கர்ணனுக்கு சாவம் விட்ட பரசுராமனும், சம்பூகனை வெட்டிச் சாய்த்த இராமனும் இந்திய மரபின் தொன்மங்கள்தாமே?

இந்தக் கல்விக் கொள்கையின் படைப்பாளர்கள் பத்தோடு பதினொன்றாகத் திருவள்ளுவரின் பெயரையும் சொல்லி வைக்கிறார்களே தவிர திருக்குறளின் கல்விக் கொள்கையை ஏற்றெடுத்தும் பார்த்ததற்கான அடையாளமே இல்லை. இவர்களுக்குப் பிடித்தமான 'ஞானகுரு' சூழ்ச்சிக்கார சாணக்கியர்தாம் என்பதிலிருந்தே இவர்களின் உள்ளக்கிடக்கையை நாம் உய்த்தறியலாம்.

அரசமைப்புச் சட்ட விழுமியங்கள் என்று குறிப்பிடும் போது இந்தக் கல்விக் கொள்கை நெருக்கடிநிலைக் காலத்தில் நுழைக்கப்பட்ட பகுதி IV-A அடிப்படைக் கடமைகளை (குடிமக்களுக்குத்தான், அரசுக்கில்லை) வலியுறுத்துவதும், பகுதி III அடிப்படை உரிமைகளைக் கவனமாகத் தவிர்ப்பதும் இந்தக் கல்விக் கொள்கையின் பிரம்மாக்களைக் காட்டிக் கொடுப்பதாகும். மாணவர்களைப் பார்த்து "உங்களுக்கு உரிமைகள் உண்டு, அவற்றுக்காகப் போராடும் தெளிவு வேண்டும்" என்று சொல்லும் திறம் இல்லாத கல்விக் கொள்கை அடிமைகளைத்தான் வளர்க்கும். ஆளும் வகுப்புக்கு அடிமைகள்தாம் தேவைப்படுகின்றார்கள்!

**பார்ப்பனியக் கல்விக் குழு**

கஸ்தூரிரங்கன் தலைமையிலான குழுவினர் மெத்தப் படித்தவர்கள் என்று எடுத்துக்காட்டி அவர்களது கல்விக் கொள்கையில் குற்றம் காணலாமா? என்று கேள்வி எழுப்பப்படுகிறது, மெத்தப் படித்தவர்கள், சரி! கல்வியாளர்களாகக் கூட இருக்கலாம்! ஆனால் சமூக நீதிக் கல்வியாளர்களா? இவர்களது உலகக் கண்ணோட்டம் என்ன? இவர்களில் பெரும்பாலார் ஏதோ ஒரு வகையில் ஆர்எஸ்எஸ் தொடர்புடையவர்கள் என்பது இது வரை மறுக்கப்படவில்லை. பெரும்பாலும் பார்ப்பனியச் சிந்தனையில் ஊறியவர்கள் ஆக்கியுள்ள கல்விக் கொள்கையே இது என்பதற்கு அகச் சான்றுகளும் புறச் சான்றுகளும் உள்ளன.

இந்த அறிக்கையில் பற்றார்ந்த விருப்பங்களை வெளியிடும் பல சொல்வீச்சுகள் இருப்பினும் அவை கவைக்குதவாதவை என்பதோடு, இதன் உண்மையான நச்சு நோக்கங்களுக்கு உருமறைப்பும் ஆகும். நாட்டின் மொத்தப் பொருளாக்கத்தில் 6 விழுக்காட்டைக் கல்வித் துறைக்குச் செலவிடும் நிலையை நோக்கி விரைந்து முன்னேறுவது போன்ற கவர்ச்சியான சொல்வீச்சுகளால் ஒருபயனும் விளையப் போவதில்லை. முன்பு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சொன்னது, இப்போது தேசிய சனநாயகக் கூட்டணி சொல்கிறது, அவ்வளவுதான்! சொல்லிக் கொண்டே இருப்பார்கள்! ஒருபோதும் செய்ய மாட்டார்கள்! வேண்டுமானால் இதைச் சொல்லி ஒரு சிறப்பு வரி விதித்தாலும் விதிப்பார்கள்!

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

**பண்பாட்டுப் படையெடுப்பு**

வறுமையை ஒழிக்க முடியாதவர்கள், பசி பட்டினியை விரட்ட முடியாதவர்கள், நோய்மையை வென்று நலவாழ்வு தர முடியாதவர்கள், அறியாமையை வீழ்த்தி அனைவர்க்கும் தகைமையான கல்வியை மட்டும் வழங்கப் போகின்றார்கள், அதற்கான மந்திரக் கோலே இந்தத் தேசியக் கல்விக் கொள்கை 2020 என்று நம்புவதற்கு நாம் ஏமாளிகள் அல்லோம்!

இந்தப் பிற்போக்குக் கல்விக் கொள்கையை எதிர்த்து முறியடிப்பதோடு நாம் நமக்கான முற்போக்குக் கல்விக் கொள்கையை வகுத்து நிறைவேற்றவும் பாடுபட வேண்டும்.

உடனடியாகச் செய்ய வேண்டியது இதுதான்: தேசியக் கல்விக் கொள்கை - 2020 தமிழ்நாட்டுக்குள் நுழைய விடக் கூடாது. மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என்று தமிழக முதல்வர் எடப்பாடி சொல்கிறார். நல்லது. 80களின் பிற்பகுதியில் நவோதயாவை நுழைய விடாமல் தடுத்தது தமிழ்நாடு. இப்போது மும்மொழிக் கொள்கையை மட்டுமல்ல தேசியக் கல்விக் கொள்கை - 2020இன் எந்தப் பகுதியையும் நுழைய விடக் கூடாது. இதில் தமிழக அரசு உறுதியாக நிலையெடுக்க வேண்டும். நாம் இவ்வாறு இக்கொள்கையைத் தடுப்பதில் வெற்றி பெற்றால் இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கும் ஊக்கமளிப்பதாக இருக்கும். இல்லையேல் மற்ற மாநிலங்களைக் காட்டி இந்த அழிவுக் கொள்கையை நம் தலையில் கட்டி விடுவார்கள். கல்வி இப்போதும் இசைவுப் பட்டியலில்தான் உள்ளது, மாநில அரசின் இசைவில்லாமல் எந்தக் கல்விக் கொள்கையும் தமிழ்நாட்டில் கால் வைக்க முடியாது என்று தமிழக அரசு வாதுரைக்கலாம்.

நாம் நம் மொழி காக்கவும் சமூக நீதி காக்கவும் தமிழ்நாட்டுக்குக் கல்வி இறைமை கோருவோம்!

இது ஏதோ அரசியல் கட்சிகளின் பதவிச் சண்டைக்கான கருப்பொருள் என்று கருதி விட வேண்டாம். இது இந்திய அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான போராட்டம் என்று புரிந்து கொள்ள வேண்டும். மோதியின் 'பாரதம்' நம் தமிழ்த் தேசத்தின் மீது நடத்த முற்பட்டுள்ள இந்தப் பண்பாட்டுப் படையெடுப்பை முறியடித்தாக வேண்டும்.

## தன்னலங்கருதாத் தமிழ்த் தொண்டர்
## ஐயா ஐவர்வழி வேம்பையன்
## அவர்களுக்குப் புகழ் வணக்கம்!



## தமிழீழத்தின் தகைசால் நண்பர், போராடும் மக்களின் சட்டத் துணைவர்

## மூத்த வழக்கறிஞர் கலைமணி அவர்களுக்கு செவ்வணக்கம்!



# களம் காலம்

மகிழன்



2020 ஜூலை 2 -- சங்கர் கொலைக்கு நீதி வேண்டும்! என்ற முழக்கத்தோடு சனநாயக மீட்புக் கூட்டியக்கம் சார்பில் பொள்ளாச்சியில் இரு இடங்களில் கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தலைமை அஞ்சல் நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சார்பில் தோழர்கள் பங்கேற்றனர்! தோழர் பாரதி தலைமையேற்றார்.

2020 ஜூலை 10 -- ஆம் நாள் மக்கள் முன்னணி ஊடகம் சார்பில் 'அதிகாரங்கள் குறைக்கப்பட்டுக் காவல்துறை சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும்' என்ற தலைப்பில் இரண்டாம் கூட்டம் நடைபெற்றது. தமிழ்த் தேச மக்கள் முன்னணி பொதுச்செயலாளர் தோழர் பாலன் தலைமையில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு கருத்துரை வழங்கினார்.

2020 ஜூலை 12 -- சாத்தான்குளம் இரட்டைக் கொலைக்கு நீதி வேண்டி, காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சார்பில் சென்னையில் தோழர் மகிழன், பொள்ளாச்சியில் தோழர் பாரதி, மதுரையில் தோழர் கதிர்வேல், தஞ்சையில் தோழர் அருண் மாசிலாமணி, அருப்புக்கோட்டையில் தோழர் சுந்தர், புதுவையில் தோழர் செல்வமுருகன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திரளான மக்கள் சமூக இடைவெளியோடு பதாகைகள் ஏந்திக் கலந்து கொண்டனர்.

2020 ஜூலை 26 -- அநீதிக்கு எதிரான மக்கள் இயக்கம் சார்பில் இட ஒதுக்கீட்டு உரிமைக்காக இணையவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் பங்கேற்றதோடு, பொதுச்செயலாளர் தோழர் தியாகு முகநூல் நேரலையில் சிறப்புரை வழங்கினார்.

---

2020 ஆகஸ்டு 3 -- காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் (JAACT-TN) சார்பில் தமிழகம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கூட்டியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் தியாகு தலைமையில் நடைபெற்ற இந்த இணையவழிக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழக அனைத்துக் கட்சிகள், அமைப்புகளின் தலைவர்கள் கண்டன உரையாற்றினர்.

2020 ஆகஸ்டு 4 - கோவை குறிஞ்சி சிந்தனைக் களத்தின் 68ஆவது இணையக் கருத்தரங்கத்தில்.'சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு - 2020 எது நம்மைக் காக்கும் கவசம்?' என்ற தலைப்பில் தோழர் தியாகு கருத்துரை வழங்கினார்.

2020 ஆகஸ்டு 5 -- தமிழ்த் தேச மக்கள் முன்னணி சார்பில் 'ஆகஸ்டு 5 -- மசூதி இடிக்கப்பட்டு இராமர் கோவில்! காசுமீர் சிறைப்பட்டு ஓராண்டு!' என்ற தலைப்பில் கறுப்பு நாள் கடைப்பிடிக்கப்பட்டது. தோழர் மீ.த. பாண்டியன், தோழர் தியாகு ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

2020 ஆகஸ்டு 6 -- காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் (JAACT-TN), விருதுநகர் மாவட்டம் சார்பில் நடைபெற்ற இணையவழிக் கருத்தரங்கத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் தோழர் பால்ராஜ் தலைமையில் தோழர்கள் அருண் மாசிலாமணி, மீ.த.பாண்டியன், தியாகு ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

2020 ஆகஸ்டு 13 -- கல்வி பாதுகாப்புக் கூட்டமைப்பு சார்பில் 'தேசியக் கல்விக் கொள்கை 2020 - ஒரு விமர்சனப் பார்வை' என்ற தலைப்பில் இணைய வழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் ஸ்டீபன் தொடக்கவுரை ஆற்றினார். தொடர்ந்து தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, மனித உரிமைச் செயல்பாட்டாளர் தோழர் பிரிட்டோ ஆகியோர் கருத்துரை வழங்கினார்.

2020 ஆகஸ்டு 15 -- தெளிதல் களத்தின் 133ஆவது இணையக் கூட்டத்தில் 'தேசியக் கல்விக் கொள்கை - 2020' என்ற தலைப்பில் தோழர் தியாகு கருத்துரை வழங்கினார். தொடர்ந்து பங்கேற்பாளர்களின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்.

2020 ஆகஸ்டு 15 -- உலகத் தமிழ் அமைப்பு சார்பில் புதிய கல்விக் கொள்கையும் தேசிய இனங்களின் உரிமையும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. ஏராளமான அமெரிக்க வாழ் தமிழர்கள் கலந்து கொண்ட இந்த இணையவழி நிகழ்வில் தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் தியாகு இருவரும் கருத்துரை வழங்கினர்.

2020 ஆகஸ்டு 30 - ஐநா அறிவித்த அனைத்துலகக் காணாமலாக்கப்பட்டோர் நாளை முன்னிட்டு ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பில் அன்று மாலை இலங்கைத் தூதரக முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

1. ஈழத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட பத்தாயிரக்கணக்கான தமிழர்கள் எங்கே?
2. சிங்களப் படையினரிடம் சரணைந்தோர் பட்டியல் எங்கே?
4. நீதி வழங்க மறுக்கும் இலங்கைக்கு இங்கே தூதரகமா?
4. கொலைகார இராசபக்சேக்களோடு கும்மாளமா?



என்கிற முழக்கங்களோடு நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் சார்பில் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் மகிழன் கண்டன உரையாற்றினார்.

# இதயத்தை விற்று விசத்தை வாங்கும் பாஜக:

**சமந்தா**

கோவிட் தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வருகையில், மறு பக்கம் பாஜக அரசின் மக்கள் மீதான பலமுனைத் தாக்குதலும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கல்வித்துறை, சுகாதாரம், சூழலியல், விவசாயம், பொருளாதாரம் என எதையும் விட்டுவைக்கவில்லை. சமூக நீதிக்கு முற்றிலும் புறம்பாக புதிய கல்விக் கொள்கையை நடைமுறைபடுத்தியுள்ளார்கள். கோவிட்19 தாக்கமானது வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் கூட சுகாதாரத் துறையில் பொதுத்துறை முதலீட்டை அதிகப்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இந்தியாவில் குறைந்தபட்சமாக முகக் கவசங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள் கூட மக்களுக்கு கிடைக்காத வகையில், அவற்றை அத்தியாவசியப் பொருட்கள் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளனர். சுகாதாரத் துறை ஊழியர்களுக்கும் ஊதியக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

முடக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையூட்ட கூடிய செயல்பாடுகள் ஏதேனும் இருக்கின்றனவா எனத் தேட வேண்டியுள்ளது. பாஜக அரசின் மக்கள் விரோத செயல்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமாகியுள்ளனவே தவிர குறைந்த பாடில்லை. உடனடிப் பொருளாதார மீட்பிற்கு சாத்தியமே இல்லாத படியான நடவடிக்கைகளைக் கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி வருகிறது பாஜக. நான்கு கட்டமாக நிவாரணத் திட்டங்கள் அளிப்பதாகக் கூறினார்கள், ஆனால் புதிதாக உரிய நிதியை ஒதுக்காமலே 10% ஜிடிபி (உள்நாட்டு மொத்தப் பொருளாக்கம்) அளவிற்கு துயர்தணிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி உலகளவில் மிகவும் அதிகமாக நிவாரணம் அளித்ததாக தற்புகழ்ச்சி கொள்கிறார்கள்.

அடுத்தக் கட்ட நிதித் தொகுப்பானது, கோவிட்-19க்குத் தடுப்பு மருந்து தயாரித்த பின் வழங்கப்படும் என முதன்மைப் பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் கூறியுள்ளார். நிச்சயமின்மை இருக்கும் வரை மக்களிடம் பணம் இருந்தாலும் அதை வங்கியில்தான் வைத்திருப்பார்கள் என்றும், ஜன்தன் கணக்கில் அளிக்கப்பட்ட பணமானது செலவளிக்கப்படாமல் சேமிக்கப்பட்டே வருகிறது என்றும் கூறியுள்ளார். ஜன்தன் கணக்குகளில் அளிக்கப்பட்ட 500 ரூபாயை வைத்து என்ன கோட்டையா கட்ட முடியும்? மக்கள் அதை

சேமித்து வருகிறார்களாம்! நிதித் தொகுப்பு என இவர்கள் கூறி வருவது உண்மையில் கடன் திட்டங்களே. அதுவும் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை. அவசரக் கடன் உறுதித் திட்டத்தின் கீழ், பிணையின்றிக் கடன் வழங்க வங்கிகள் மறுப்பதால் தொழில் நிறுவனங்கள் பாதிப்பு அடைந்துள்ளன. பாஜக அரசு தன் செயலின்மைக்குக் காரணம் கற்பிக்கவே அடுத்த நிதித்தொகுப்பை கோவிட்-19 தடுப்பு மருந்துடன் கோர்த்துள்ளது. கோவிட் சூழலில் பொதுத் துறை வங்கிகளே அதிகளவில் கடனளிக்கின்றன. அதீத எச்சரிக்கை உணர்வால் தனியார் வங்கிகள் குறைந்த அளவிலேயே கடன் சேவை அளித்து வருகின்றன. பெருமளவில் கடன் பெற்றவை யாவும் உயர் தர மதிப்பீட்டை கொண்ட நிறுவனங்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாஜக அரசு நடப்பிலுள்ள பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளாக புதிய பிரச்சினைகளை அறிமுகப்படுத்துகிறது. அப்படித்தான் தற்சார்பு என்ற மேல்பூச்சுடன் தற்போது நவீன தாராளமய ‘சீர்திருத்த’ சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மக்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் நவீன தாராளமயச் செயல்பாடுகளை அறிமுகப்படுத்தி எதிர்ப்பு இல்லாமல் ஒப்புதல் பெற, தற்சார்பு என்ற தேசபக்தி சாயம் பூசியவாறே அந்நிய முதலீட்டாளர்களை நாட்டின் வளங்களை அபகரிக்குமாறு பாஜக அரசு கூவி அழைப்பது முன்னுதாரணமற்ற வரலாற்று முரண். ஆனால் அந்த மேல்சாயம் பெயரளவுக்குக் கூட ஒட்டவில்லை. “தற்சார்பு என்பது கதவுகளை மூடுவது அல்ல, கதவுகளை மேலும் திறப்பதே” என்று தற்சார்புக்குப் புதியதொரு முரணான விளக்கத்தைத் தந்துள்ளார் பியுஷ் கோயல். சுதந்திரம் என்பது அடிமைநிலையே என்று கூறுவதைப் போலத்தான் இருக்கிறது அவரது இந்த விளக்கம்.

பிரதமரும், நிதியமைச்சரும், தொழில்துறை அமைச்சரும் போட்டா போட்டியுடன் அந்நிய முதலீட்டாளர்களுக்குச் சிகப்புக் கம்பள வரவேற்பு அளித்து வருகிறார்கள். பொருளாதார நடவடிக்கைகள் பின்தங்கியுள்ள நிலையில் உற்பத்தித் துறையை மேம்படுத்துவதற்கு எந்தப் புதிய திட்டங்களும் இல்லை அப்படியிருந்தாலும் அனைத்தையும் தனியார் நிறுவனங்களே மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் பாஜக அரசின் நிலைப்பாடாக உள்ளது. அரசு எல்லாத் துறைகளையும் தனியார் நிறுவனங்களுக்கே திறக்க உள்ளது என்று சொல்லி, நிறுவனங்கள் தங்களுக்கு வேண்டியதைத் தேர்வு செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளார் நிதியமைச்சர். நான்கைந்து வங்கிகளைத் தவிர மற்றப் பொதுத்துறை வங்கிகள் அனைத்தையும் தனியார்மயப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இதயத்தையோ நுரையீரலையோ விற்று மருந்து வாங்கி உடல்நலம் காப்போம் என்பது எப்பேர்ப்பட்ட மோசடியோ அதைப் போன்றதுதான் பொதுத் துறை வங்கிகளையும் பொதுத் துறை நிறுவனங்களையும் தனியார்மயப்படுத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்துவோம் என்பதும். ஆனால் அதையும் ஒரு படி தாண்டி இதயத்தை விற்று விசத்தை வாங்கவே முன்னிற்கிறது. பாஜக அரசு. இலாபம் ஒன்றையே நோக்கமாகக் கொண்ட தனியார் நிறுவனங்கள் மக்களுக்கு முறையாக சேவை வழங்க மாட்டா என்பதை கோவிட்-19 தாக்கம் மீண்டும் தெளிவாக மெய்ப்பித்துள்ளது. இந்தியாவில் 60%க்கு மேல் தனியார் நிறுவனங்களே மருத்துவ சேவை அளித்து வருவதால்தான் கோவிட் தாக்கத்திற்கு முறையான சிகிச்சை கிடைக்காமல் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பணம் கொண்டவர்கள் மட்டுமே கோவிட்-19இலிருந்து பிழைத்துக் கொள்ள முடியும் என்ற நிலைதான் தொடர்கிறது. இந்தியாவில் மற்ற மாநிலங்களை காட்டிலும் கோவிட் -19ஐ கேரளா சிறப்பாகக் கையாண்டு உலக அளவில் பிரபலாமானதற்கு முக்கிய காரணம் அங்கு பேணப்படும் பொதுத்துறை மருத்துவமனைகளே ஆகும்.

தலைமை வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் விவசாய விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை அளிப்பதைத் திறனற்ற செயல்பாடாகக் கருதுகிறார். அவர் எந்த வர்க்கத்திற்காகச் செயல்படுகிறார் என்பதையே இது வெளிப்படுத்துகிறது. சுய லாபத்திற்காகச் செயல்படும் பெருமுதலாளிகளின் வாராக் கடன்களைத் தள்ளுபடி செய்வதையோ, கார்ப்பரேட் வரி குறைப்பையோ, அரசு நிர்வாகிகளுக்கு அளிக்கப்படும் ஊதிய உயர்வையோ அவர் அவ்வாறு கருதியிருப்பாரா? இதற்குச் சற்றும் சளைத்தவர் அல்ல முன்னாள் தலைமை வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன். அவர் கேட்கிறார்:

"அரசு தனியார்மயத்தைப் பற்றிப் பேசிவந்த போதிலும், ஏன் 4-5 மாதங்களில் சந்தை ஏற்றத்தை தனியார் மயப்படுத்தப் பயன்படுத்திக் கொள்ளாமல் உள்ளது?" '∵பாஸ்ட் ட்ராக் மோடில்' அதிவிரைவாகப் பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தச் சொல்கிறார். விவசாயத் துறையில் அறிமுகப்படுத்தியுள்ள தாராளமயச் சீர்திருத்தங்களை வரவேற்றுள்ளார்.

பாஜக அரசு வேளாண்மையைத் தனியார் பெருநிறுவனங்களின் வேட்டைக்கு விட்டுள்ளது. மின்சார வரைவுத் திருத்தச் சட்டம்-2020, அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச்சட்டம்-2020, வேளாண் பொருட்களின் வணிக ஊக்குவிப்பு அவசர சட்டம்-2020, விவசாயிகளுக்கான விலை உத்தரவாதம் மற்றும் வேளாண் சேவைகள் மீதான ஒப்பந்தப் பாதுகாப்பு அவசர சட்டம்-2020

எனப் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்கள் அனைத்துமே விவசாயிகள் நலனுக்கும் நுகர்வோர் நலனுக்கும் முற்றிலும் புறம்பானது.

வழக்கம் போல் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் எனக் கூறி , ,துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, விவசாயப் விளைபொருட்களிலும் எதிர்கால ஒப்பந்தங்களுக்கான சந்தையை ஆரம்பிக்கவுள்ளது பாஜக அரசு. பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யும் நிலையிலா இந்தியாவின் விவசாயிகள் உள்ளனர்?. பருப்பு வகைகளின் உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடையவில்லை, நாம் பருப்பு, பயறு வகைகளை அதிகளவில் இறக்குமதி செய்கிறோம். பருப்பு வகைகளின் விலைவாசியானது ஏற்கெனவே அதிகமாகவுள்ள நிலையில் அவற்றில் ஊக வணிகத்தை ஊக்குவிக்கும் விதத்தில் இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்துவது அவற்றின் விலையை மேலும் அதிகரிக்கச் செய்யும். இதனால் ஊக வணிகர்களும் இடைத்தரகர்களுமே இலாபமடையவுள்ளனர். விவசாயிகளும் பொதுமக்களும் கடுமையாகப் பாதிக்கப்படவுள்ளனர். இந்தியா முழுவதும் உர விற்பனை நிறுவனங்கள், டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள் மூலம் மட்டுமே விவசாயிகளிடம் உரம் விற்பனை செய்ய வேண்டும் என்று மத்திய அரசு அறிவிப்பாணை வெளியிட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளிடம் டிஜிட்டல் பரிவர்த்தனையை வலுவந்தமாகத் திணிக்க இதுவா நேரம்?

**ஜூன் மாதத்திற்கான தொழில்துறையின் வளர்ச்சி நிலை:**

தொழில்துறை மற்றும் வர்த்தகத்திற்கான அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி எட்டு முதன்மைத் தொழில்துறைகளின் வளர்ச்சி வீதம் (-)15.0% குறுக்கமடைந்துள்ளது, மே மாதத்தில் இது (-)22.0% வீழ்ச்சியடைந்திருந்தது. 2020-21 நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் எட்டு முதன்மைத் தொழில்துறைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி (-)24.6% குறுக்கமடைந்துள்ளது. தொழில்துறை உற்பத்திக் குறியீட்டில் (ஐ.ஐ.பி) இந்த எட்டு முதன்மைத் துறைகளும் 40.27 சதவீதம் பங்கு வகிக்கின்றன. ஜூன் மாதத்தில் உர உற்பத்தியைத் தவிர மற்ற அனைத்து முதன்மைத் தொழில்துறைகளின் வளர்ச்சி வீதமும் எதிர்மறையாக உள்ளது.

**நிலக்கரி:**

நிலக்கரி உற்பத்தி 2019 ஜூன் மாதத்தை விட 2020 ஜூன் மாதத்தில் (-)15.5 சதவீதம் குறைந்துள்ளது. 2020-21 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் அதன்

உற்பத்தியானது (-)15.0 சதவீதம் குறைந்துள்ளது.

**கச்சா எண்ணெய்:**

கச்சா எண்ணெய் உற்பத்தி 2019 ஜூன் மாதத்தை விட 2020 ஜூன் மாதத்தில் (-)6.0 சதவீதம் குறைந்துள்ளது. 2020-21 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் அதன் உற்பத்தியானது (-)6.5 சதவீதம் குறைந்துள்ளது. .

இயற்கை எரிவாயு உற்பத்தி 2019 ஜூன் மாதத்துடன் ஒப்பிடும் போது 2020 ஜூன் மாதத்தில் (-)12.0 சதவீதம் குறைந்துள்ளது. 2020-21 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் அதன் உற்பத்தியானது (-)16.2 சதவீதம் குறைந்துள்ளது.

பெட்ரோலிய சுத்திகரிப்புப் பொருட்களின் உற்பத்தி 2019 ஜூன் மாதத்துடன் ஒப்பிடும் போது 2020 ஜூன் மாதத்தில் (-)8.9 சதவீதம் குறைந்துள்ளது. 2020-21 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் அதன் உற்பத்தியானது (-)18.2 சதவீதம் குறைந்துள்ளது.

**உரங்கள்:**

உரங்களின் உற்பத்தி 2019 ஜூன் மாதத்துடன் ஒப்பிடும் போது 2020 ஜூன் மாதத்தில் 4.2 சதவீதம் அதிகரித்துள்ளது. 2020-21 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் அதன் உற்பத்தி 2.8 சதவீதம் அதிகரித்துள்ளது.

**எஃகு:**

எஃகு உற்பத்தி 2019 ஜூன் மாதத்தை விட 2020 ஜூன் மாதத்தில் (-)33.8 சதவீதம் குறைந்துள்ளது. 2020-21 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் அதன் உற்பத்தியானது (-)51.7 சதவீதம் குறைந்துள்ளது.

**சிமெண்ட்:**

சிமெண்ட் உற்பத்தி 2019 ஜூன் மாதத்துடன் ஒப்பிடும் போது 2020 ஜூன் மாதத்தில் (-)6.9 சதவீதம் குறைந்துள்ளது. 2020-21 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலப்பகுதியில் அதன் உற்பத்தி (-)38.3 சதவீதம் குறைந்துள்ளது.

**மின்சாரம்:**

2019ஆம் ஆண்டு ஜூன் மாதத்தை விட 2020 ஜூன் மாதத்தில் மின்சார உற்பத்தி (-)11.0 சதவீதம் குறைந்துள்ளது. 2020-21 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் அதன் உற்பத்தியானது (-)16.1 சதவீதம் குறைந்துள்ளது.

**பணவீக்க நிலை:**

நுகர்வோர் குறியீட்டு அடிப்படையிலான சில்லறைப் பண வீக்கத்தின் அளவானது ஜூன்

மாதத்தில் கிராமப்புறத்தில் 6.20% ஆகவும் நகர்ப்புறத்தில் 5.91% ஆகவும். ஒட்டுமொத்த அளவில் 6.09% ஆகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வானது ஜூன் மாதத்தில் கிராமப் புறத்தில் 8.41% ஆகவும்,. நகர்புறத்தில் 6.92% ஆகவும், ஒட்டுமொத்த அளவில் 7.87 % ஆகவும் உள்ளது. உணவுப் பொருட்களின் விலைவாசியானது தானியப் பொருட்களில் 6.49%, இறைச்சி, மீன் ஆகியவற்றில் 16.22%, முட்டையில் 7.40%, பால் பொருட்களில் 8.44 %, எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றில் 12.27%, காய்கறிகளில் 1.86% அதிகரித்துள்ளது. பழங்களின் விலைவாசி (-)0.68% குறைந்துள்ளது.

**இழப்பு இந்தியாவிற்கே:**

தற்பொழுது இந்தியா சீனப் பொருட்களையும், தொழில்நுட்பத்தையும் புறக்கணிப்பதன் மூலம் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கவே செய்யும். சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை இன்னும் அதிக விலை கொடுத்தே மற்ற நாடுகளிலிருந்து வாங்க முடியும். உள்நாட்டிலே அவற்றை உற்பத்தி செய்ய உற்பத்தித் துறையை, தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும், ஆனால் பாஜக அரசின் அறிவு மட்டமோ யோகா தொழில் நுட்பத்தின் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என்ற நிலையில்தான் உள்ளது. இந்தியாவால் உலகளவில் பெரிய யோகா சந்தையை உருவாக்க முடியும் என பிரதமரும், தொழில்துறை அமைச்சரும் கூறி வருகிறார்கள். யோகா என்ற உடற்கலைக்கு இடையில்தான் மோசடியான முறையில் இந்துச் சாயம் பூசப்பட்டது. யோகாவிற்கு இந்து மதமோ, பாஜகவோ உரிமை கொண்டாட முடியாது.

இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் இழுபறி நிலையிலேயே உள்ளது. இதற்காக இந்தியா அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் பொருட்கள், பாதாம், வால்நட், ஆப்பிள் ஆகியவற்றின் மீதான காப்பு வரியைக் குறைத்துள்ளது. மூலதனத்தின் மதிப்புக் கோட்பாட்டின் படி தொழில்நுட்ப வளர்ச்சியில் வெவ்வேறு நிலைகளில் உள்ள இரு நாடுகளுக்கிடையே நடக்கும் தடையற்ற வர்த்தகமானது அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்கே சாதகமாக அமையும், இழப்படையும் தரப்பாகத்தான் இந்தியா இருக்க முடியும். டாலர் உலகப் பணம் என்ற

தகைமை பெற்று வல்லரசாக உள்ளது. டாலருக்கு எதிராக இந்திய ரூபாய் 61 சதவீத நேரத்தில் மதிப்பிழந்துள்ளது. இந்நிலையில் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வது இந்தியாவிற்கு பாதகமாகவே அமையும். இந்தியா வர்த்தகப் பற்றாக்குறையால் சீனாவிடம் இழப்பதைக் காட்டிலும் அமெரிக்காவிடம் மேலும் அதிகமாக இழக்கவே நேரிடும்.

ஜிஎஸ்டி எனப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான வரி அறிமுகப்படுத்தப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இன்றைய நிலை எப்படி உள்ளது எனப் பார்த்தால், மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய ஜிஎஸ்டி தொகையை அளிக்கும் நிலையில் மத்திய அரசு இல்லை என்கிறார் மத்திய நிதிச் செயலாளர்.

யாரிடம் வரி வாங்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் வரிச் சலுகைகள் வழங்கி, சிறு குறு நிறுவனங்களிடம் வலுவந்தமாக வரிபெறும் விதத்தில், அனைத்தையும் வரிக் கட்டமைப்புக்குள் கொண்டுவரும் விதமாகவும், மாநிலங்களின் வரிபெறும் சுயாட்சி உரிமையைப் பறித்து வருவாயனைத்தையும் மையப்படுத்தும் விதமாகவுமே ஜிஎஸ்டி கொண்டு வந்தார்கள். ஜிஎஸ்டி வந்தால் விலைவாசி குறையும் என்றார்கள், வரி வருவாய் அதிகரிக்கும் என்றார்கள். ஆனால் விலைவாசியும் குறையவில்லை, வரிவருவாயும் அதிகரிக்கவில்லை. பேராசை பெரு நஷ்டம் என்ற பழமொழிக்கு நல்ல எடுத்துக்காட்டுதான் ஜி.எஸ்.டி. ஜூலை மாதம் ஜிஎஸ்டி கவுன்சில் கூடி மாநிலங்களுக்கு இழப்பீடு அளிக்கும் வழிமுறையை விவாதித்திருக்க வேண்டும், ஆனால் அந்தக் கூட்டமே நடைபெறவில்லை.

**காலநிலை மாற்றம்:**

காலநிலை மாற்றம் குறித்த ஆக்ஸ்ஃபோர்ட். பொருளாதார ஆய்வு முடிவுகள் அதிர்ச்சியளிக்கின்றன. புவி வெப்பமாதலால் தற்போது குளிர்ப் பிரதேசங்களாக உள்ள வட அமெரிக்காவும் ஐரோப்பாவும் ஓரளவு பயனடையலாம் என்றும் ஆனால் உலகின் வெப்பமண்டல, மிதவெப்ப மண்டலப் பகுதிகள் (உலகின் தென் கோளம்) வெப்பநிலை 15 பாகை அதிகரிக்குமானால், கடுமையான அழிவுகளுக்குள்ளாகும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இந்தியா தற்போது கடைபிடிக்கும் கொள்கைகளையே தொடர்ந்தால் 2100க்குள் 90% ஜிடிபியை இழக்க நேரிடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் காலநிலை மாற்றம் பற்றியோ, சுற்றுச்சூழல் பற்றியோ எந்த அக்கறையும் இல்லாத பாஜக அரசு ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள

சுற்றுச்சூழல் நெறிமுறைகளையும் நீர்த்துப் போகச் செய்யும் விதமாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான-2020 வரைவு அறிவிக்கையை வெளியிட்டிருப்பது பெருத்த வெட்கக்கேடு.

முதலாளித்துவத்தில் பொருளாதார நெருக்கடிகள் இலாப வீதம் வீழ்ச்சியடைவதால் தூண்டப்படுகின்றன. அதன் விளைவாக சிறு மூலதனங்கள், முதலீடுகள், மதிப்பிழக்கின்றன. சிறு உற்பத்தியாளர்கள், சிறு, குறு நிறுவனங்கள், சிறு வணிகர்களே மீளாக் கடன் துயரால் பெரும் பொருளாதார அழிவிற்குள்ளாகின்றனர். பழைய தொழில்நுட்பங்களை கொண்ட நிறுவனங்களும் அழிவுறுகின்றன. வங்கிகள் நெருக்கடிகளுக்குள்ளாகின்றன. மூலதனங்கள் மதிப்பிழக்கின்றன. சிறிய மீன்களைப் பெருமுதலைகள் விழுங்குகின்றன. மையப்படுத்துதல் நிகழ்முறை நடந்தேறுகிறது. வேலையின்மை அதிகரிக்கிறது, கூலி வீழ்ச்சியடைகிறது. மூலதனம் மதிப்பிழப்பதாலும், தொழிலாளர்களின் வேலை நேரத்தை நீட்டித்து பல்வேறு முறைகளில் உழைப்புச் சுரண்டலைக் கடுமையாக்குவதாலும் இலாப வீதம் மீண்டும் உயர்த்தப்படுகிறது. மூலதனக் குவிப்பில் முன்னணியில் உள்ளவர்களால் மட்டுமே மேலும் இலாபகரமாகத் தொழிலை மேற்கொள்ளும் நிலையைப் பெற முடிகிறது. நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் வீழ்ந்துள்ள நிலையில் இப்படித்தான் முகேஷ் அம்பானியும் உலகின் ஆறாவது பெரும் பணக்காரராக முன்னேறியுள்ளார். அவரது வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியதுதான் பா.ஜ.க அரசின் தலையாய சாதனையாகவுள்ளது.

இந்தியாவில் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நலிவடைந்த மக்களுக்கும், சிறு குறு நிறுவனங்களுக்கும் நிதி உதவி அளிக்க இடமுள்ளதாக சர்வதேசப் பண நிதியத்தின் நிதி விவகாரத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். பாஜக அரசு உதவுவது இந்தியாவின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படக் காரணமான அம்பானி-அதானிகளுக்கே. அவர்களின் பாதுகாவலனாக இருக்கும் பாஜக அரசு, அவர்களையே பொருளாதார இரட்சகர்கள் எனப் போற்றிவரும் நிலையில் இந்த ஒட்டுறவுக் கூட்டணியை முறியடிப்பதன் மூலமே மக்களின் பொருளாதார மீட்சி ஆரம்பமாகும். முடக்கப்பட்ட நிலையிலும் நாடு முழுவதும் விவசாயிகளும், மக்களும், சமூக ஆர்வலர்களும், போராளிகளும் எதிர்ப்பைத் தெரிவித்துத் தொடர்ந்துள்ள போராட்டத்தில்தான் அதற்கான நம்பிக்கை ஒளியைக் காண முடிகிறது.

## செங்காட்டான் குறிப்புகள்

## உச்ச நீதிமன்றம் பம்மியது ஏன்?

உச்ச நீதிமன்ற வழக்குரைஞர் பிரசாந்த் பூசன் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றம்தான் உண்மையில் ஏதோ இக்கட்டில் சிக்கிக் கொண்டது போல் நடந்து கொண்டது, பிரசாந்த் பூசன் தன் குற்றத்துக்காக மன்னிப்புக் கோர வேண்டும் என்று கடளையிட்ட நிலையிலிருந்து, ”ஒரு வருத்தமாவது தெரிவிக்க்க் கூடாதா?” என்று கெஞ்சும் நிலைக்கு உச்ச நீதிமன்ற நீதியர் வந்து விட்டனர், ஏன்? என்ற கேள்விக்கான விடை 02.08.2020 அன்று பிரசாந்த் பூஷன் கொடுத்த உறுதியாவணத்தில் காணக் கிடைக்கிறது. 175 பத்திகள் 134 பக்கங்கள் கொண்ட இந்த ஆவணம் நீதித் துறையின் மீதான நம்பிக்கைக்கே வேட்டு வைக்கும் படியானவை.

இந்த ஆவணத்தில் பூசன் எடுத்துக்காட்டிய முகன்மைக் கூறுகள் இவை:

பாரதிய சனதா, ஆர்எஸ்எஸ் தொடர்புடைய சிறுசிறு குழுக்களால் தலித்துகளும் சிற்பான்மை மக்களும் கொலை செய்யப்பட்ட நிகழ்வுகளில் காவல்துறை நடவடிக்கை எடுப்பது அரிதாகவே உள்ளது.

2019ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் தொடர்பான போராட்டங்களின் போது அவர்கள் மீது பாசக அரசு அடக்குமுறையை ஏவியது. ஜாமியா மிஸ்லியா கல்வி வளாகத்தில் மாணவர்கள் கொடிய முறையில் தாக்கப்பட்டனர்.

தலித்துகளுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக என்எஸ்ஏ, ஊபா சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன.

பாசக தலைவர்கள் இஸ்லாமியர்களுக்கு எதிராக அவதூறுகளும் பொய்ச்செய்திகளும் பரப்பியதோடு வன்முறையையும் தூண்டி விட்டனர்.

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்குக் காவல்துறை பாதுகாப்பு வழங்கியதற்குக் காணொலிச் சான்றுகள் உள்ளன.

சம்மு காசுமீர சட்டப் பேரவையின் ஒப்புதல் இல்லாமல் அம்மநிலம் மூன்றாக உடைக்கப்பட்டு முன்னாள் முதல்வர்கள் உட்படத் தலைவர்களும் மக்களும் சிறை வைக்கப்பட்டனர்.

கடந்த ஆறாண்டுக் காலத்தில் வேலையின்மையும் வேலையிழப்பும் உச்சங்கண்டன. கொரோனா காலத்தில் 10 கோடிக்கு மேற்பட்டோர் வேலையிழந்தனர்.

அரசமைப்புச் சட்ட நிறுவனங்களான தேர்தல் ஆணையமும் தலைமைக் கணக்காயரும் சிபிஐ மற்றும் நடுவண் விழிப்பு ஆணையமும் சேம வங்கியும் உள்ளிட்ட பொது அமைப்புகள் சீரழிக்கப்பட்டன.

ர:பேல் ஒப்பந்தம் தொடர்பான வழக்கில் பல உண்மைகள் மறைக்கப்பட்டன. உண்மைகளை வெளிப்படுத்தியவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். ர:பேல் குறித்துப் புலனாய்வு செய்ய முற்பட்ட சிபிஐ இயக்குநர் இரவோடு இரவாக வெளியேற்றப்பட்டார்.

தேசியப் புலனாய்வு முகமை மனிதவுரைமைப் போராளிகளையும் அரசுக் கொள்கைக்கு எதிரானவர்களையும் பழி வாங்குவதற்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

நாட்டின் வங்கிகளை மோசடி செய்த பெருமுதலாளிகள் வரி ஏய்ப்புக்குப் பொருத்தமான அயல்நாடுகளில் குடிபுகுந்தனர். அவர்களை இந்த நாட்டுக்குக் கொண்டுவர முயல்வது போல் நாடகம் நடக்கிறது.

பெரும்பாலான ஊடகங்கள் அச்சுறுத்தப்பட்டு அரசின் ஊதுகுழல்கள் ஆக்கப்பட்டுள்ளன.

இந்த உண்மைகள் நீதிமன்றங்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த நான்கு தலைமை நீதியர்களின் பதவிக் காலத்தில் மக்கள் உரிமைகள் பறிபோவதைத் தடுக்க உச்ச நீதிமன்றம் தவறி விட்டது.

காசுமீரில் இணைய வசதிகள் மறுக்கப்பட்டது, நீதிப்பேராணை வழக்குகள், ஜேஎன்யூ மாணவர்கள் தாக்கப்பட்டது, நீதியர் லோயா மர்ம மரணம், ர:பேல் ஊழல் ஆகிய வழக்குகளில் மூடி முத்திரையிட்ட உறையில் ஆவணங்கள் தரப்பட்டு எதிர்த்தரப்புக்கு ஆவணங்கள் தரப்படாமலே வழக்குகள் முடிக்கப்பட்டன.

உச்ச நீதிமன்ற நீதியர் ஊழல் செய்ததற்கான சான்றுகள் வெளிப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. (நீதியருக்கும் ஊழல் அரசியல்வாதிகளுக்குமான நெருக்கத்துக்கு பூசன் தந்திருக்கும் சான்றுகள் அதிர்ச்சி தரும் படியானவை. இந்தப் பட்டியலைத் தனியாகவே வெளியிடலாம்.)

இந்த உண்மைகள் பொதுவெளியில் அலசப்படுவதைத் தவிர்க்கவே அரசும் உச்ச நீதிமன்றமும் விரும்பின. சட்டி சுட்டதடா கை விட்டதடா என்ற நிலைக்கு வந்து விட்டதால்தான் வழக்கை முடிக்க வழிதேடி, வருத்தமாவது தெரிவித்தால் போதும் என்று நீதியின் தலைமைப்பீடம் கெஞ்சியது, வருத்தம் தெரிவிக்க மறுத்த பிரசாந்த் பூசனின் நிலைப்பாட்டை வரவேற்போம். அவரது பணி தொடரட்டும்.

# கீழடி: வரலாற்றைத் திரிக்கும் தமிழ்ப் பகைவர்கள்

பழ. நெடுமாறன்



2015-2016 ஆண்டுகளில் மதுரைக்கு மிக அருகில் வைகைக் கரையில் கீழடி என்னும் சிற்றூரில் இந்தியத் தொல்லாய்வுத் துறையின் தென்மாநிலங்களின் கண்காணிப்பாளர் அமர்நாத் இராமகிருட்டிணன் தலைமையில் 2 ஆண்டுக் காலம் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தடயப் பொருட்கள் அறிவியல் ரீதியில் காலக்கணிப்புச் செய்யப்படுவதற்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டுப் பெற்ற முடிவுகளின்படி அவை 2160+30 மற்றும் 2200+30 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது கண்டறியப்பட்டது.



வைகை ஆற்றின் இருமருங்கிலும் 300க்கு மேற்பட்ட தொல்லியல் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்றும், 20 ஆண்டுக் காலத்திற்கு இந்த ஆய்வு நடைபெற்றால் மேலும் புதிய வரலாற்று உண்மைகள் வெளிவரும் எனவும் அமர்நாத் இராமகிருட்டிணன் அறிவித்த போது தமிழர்கள் மட்டுமல்ல, வரலாற்று அறிஞர்கள் பலரும் வரவேற்றுப் பாராட்டினர்.

2015ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட இந்த அகழாய்வின் விளைவாக 7,500க்கும் மேற்பட்ட தொன்மையான பொருட்களும், சுவர் அமைப்புகளும், கிணறுகளும், கழிவு நீரை வெளியேற்றும் மண் குழாய்களும் கண்டறியப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள படி நகர்ப்புற நாகரிகத்தின் தடயங்களாக இவை

விளங்குவதாய் அறிஞர்கள் கூறுகின்றனர். கீழடி நாகரிகத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் அது சமயச் சார்பற்றது என்பதாகும். இங்கு கிடைத்த ஆயிரக்கணக்கான தொன்மைப் பொருட்களில் சமயச் சின்னங்களோ அல்லது சமயச் சடங்குகள் குறித்த பொருட்களோ கிடைக்கவில்லை.

“கீழடியில் தமிழி எழுத்துக்கள் அல்லது கிறுக்கல்களைக் கொண்ட ஏராளமான பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவை வரலாற்று முதன்மை வாய்ந்தவையாகும். சிந்து சமவெளி முத்திரைகளுக்கும், தமிழி எழுத்துகளுக்கும் இடையேயான இணைப்புச் சங்கிலியாகக் கீழடி பானைக் கீறல்களை நாம் பார்க்க முடியும். இந்தப் பானைக் கீறல்கள் சிந்து சமவெளிப் பகுதியில் கிடைத்த பானைக் கீறல்களை ஒத்திருக்கின்றன. ஆகவே சிந்து சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சியாக கீழடி நாகரிகத்தை நாம் பார்க்க வேண்டும். இதே மாதிரியான கீறல்களைக் கொண்ட பானை ஓடுகள் இந்தியாவின் சில பகுதிகளிலும், தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் கிடைத்திருக்கின்றன. ஆனால் பானைக் கீறல்களில் 75% தமிழ்நாட்டில்தான் கிடைத்துள்ளன. மேலும் தமிழ்நாட்டில் உள்ள கொற்கை, அழகன்குளம் ஆகியவற்றிலும் கிடைத்திருக்கின்றன. கீழடியில் தமிழி பொறிப்புகள் கிடைத்த படிநிலைக்குக் கீழே இவை கிடைத்துள்ளன. ஆகவே இவை தமிழி எழுத்துகளுக்கு முந்தியவையாகும்” என சிந்து சமவெளி ஆய்வாளர் ஆர். பாலகிருட்டிணன் கூறியுள்ளார்.

## கீழடியில் குதிரை இல்லை

கீழடியில் 70க்கு மேற்பட்ட எலும்புத் துண்டுகளும் கிடைத்தன. இவற்றைப் பகுப்பாய்வு செய்த போது திமில் உள்ள காளை, எருமை, வெள்ளாடு, கலைமான், காட்டுப் பன்றி மற்றும் மயில் ஆகிய உயிரினங்களின் எலும்புகள் என அடையாளம் காணப்பட்டன. இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், கீழடியில் குதிரையின் எலும்புகள் கிடைக்கவில்லை, சிந்து சமவெளி நாகரிகத்திலும் குதிரையின் எலும்புகள் கிடைக்கவில்லை. எனவே, இந்த இரு நாகரிகங்களும் ஆரியர் தொடர்பற்ற பூர்விகக் குடிகளின் நாகரிகமே என்பது உறுதி செய்யப்பட்டது.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த பிறகே குதிரை அறிமுகமானது. மோசமான வானிலை மாற்றம். நதிகளின் போக்கு மாறியது அல்லது வெள்ளம், நீர் வற்றியது, அளவுக்கு அதிகமான பயன்பாட்டின் விளைவாக மண்ணின் வளம் குறைந்தது போன்ற இயற்கை விளைவுகளால்

சிந்து சமவெளி நாகரிகம் அழிந்து 1000 ஆண்டுகளுக்குப் பிறகே, அதாவது கி.மு. 1900 ஆண்டிற்குப் பிறகே ஆரியர்கள் இந்தியாவிற்குள் அடியெடுத்து வைத்தனர் என வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

கீழடி மக்கள் பயன்படுத்திய அணிகலன்கள் மற்றும் பொருட்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. மிகச் சிறப்பாக மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. மீன் சின்னம் பாண்டியர்களின் சின்னம் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே கீழடி சங்க கால மதுரையாகவோ அல்லது மதுரையின் புறநகர்ப் பகுதியில் அமைந்ததாகவோ இருக்க வேண்டும்.

தமிழர்களின் தொன்மையை நிலைநிறுத்தக் கூடிய இச்சான்றுகள் மற்றொரு உண்மையையும் வெளிப்படுத்தின. சங்ககால இலக்கியங்களான மதுரைக் காஞ்சி பழைய மதுரையின் சிறப்புகளையும், பட்டினப்பாலை பூம்புகார் நகரின் சிறப்புகளையும் எடுத்துக் கூறுகின்றன. சங்கமருவிய காலத்து இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை மதுரை, பூம்புகார், வஞ்சி ஆகிய மூவேந்தர்களின் தலைநகரங்கள் குறித்து விளக்கமாகக் கூறுகின்றன. ஆனால் இலக்கியங்கள் கூறும் இந்த நகர்ப்புற நாகரிகங்கள் வெறும் கற்பனையே என வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கருதினர். ஏனெனில் தமிழ்நாட்டில் நகர்ப்புற நாகரிகம் நிலவியதற்கான தொல்லியல் சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

தமிழரின் நகர்ப்புற நாகரிகத்தின் முதல் சான்றுகள்

சுடுமண் குழாய்களால் அமைக்கப்பட்ட கழிவுநீர் அமைப்புகள் செங்கற்களால் அமைக்கப்பட்ட தளங்கள், சுவர்கள், உறைக்கிணறு, வீட்டின் ஒரு பகுதி போன்றவை கண்டறியப்பட்டன. சிந்து நாகரிகக் கண்டுபிடிப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்ட மிகத் தொன்மையான நகர நாகரிகம் கீழடி தமிழர் நாகரிகம் என்ற மாபெரும் உண்மையைத் தனது அயராத உழைப்பினாலும் விடாமுயற்சினாலும் கண்டறிந்த அமர்நாத் இராமகிருட்டிணன் அவர்களைப் பாராட்டுவதற்குப் பதில் உடனடியாகத் தொலைத்தூரத்தில் உள்ள அசாம் மாநிலத்திற்கு இடமாற்றம் செய்து நடுவண் அரசு ஆணை பிறப்பித்தது. இதற்குத் தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு எழுந்ததைக் கண்ட இந்திய அரசு மூன்றாம் கட்ட ஆய்வு என்ற பெயரில் துணைக் கண்காணிப்பாளர் சிறிராமன் என்பவரை அனுப்பி அவசர அவசரமாக ஒரே ஒரு குழியை மட்டும் தோண்டச் செய்து வேறு எந்தப் பொருளும் புதிதாகக் கிடைக்கவில்லை என அறிவிக்கச் செய்து

கீழடி ஆய்வை முடிவுக்குக் கொண்டுவந்தது.

கீழடியில் கண்டறியப்பட்ட ஆய்வின் முடிவுகள் குறித்து புகழ்பெற்ற இந்திய வரலாற்று அறிஞரான ரோமிலா தாப்பர் "தமிழகத்தில் கிடைத்துள்ள மிக முக்கியமான கண்டுபிடிப்புகள் இவையாகும். இவற்றின் மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றையே திருத்தி அமைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இந்த ஆய்வு தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்" என இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

## தமிழர் தொன்மையை மறைக்க முயற்சி

அதே காலக்கட்டத்தில், அதாவது 2016 டிசம்பரில் அயோத்தியில் இராமாயண அருங்காட்சியகம் அமைப்பதற்காக 150 கோடி ரூபாய்களை ஒதுக்கிய இந்திய அரசு கீழடியில் 3ஆம் கட்ட ஆய்வு நடத்துவதற்கு வெறும் ஒரு இலட்சம் ரூபாயை மட்டுமே ஒதுக்கியது. தமிழரின் வரலாற்றுத் தொன்மையைக் குறித்த இந்திய அரசின் அலட்சியப் போக்கையே இது காட்டுகிறது.

மீண்டும் தமிழகத்தில் கடும் எதிர்ப்பு எழுந்தது. கீழடி அகழாய்வினைத் தொடர்ந்து நடத்தினால் தமிழர்களின் தொன்மை வரலாறு வெளிப்பட்டு விடும் என்ற அச்சத்தின் காரணமாக இந்திய அரசு அதைத் தொடர விரும்பவில்லை எனத் தமிழர்கள் கருதினர். குசராத் மாநிலத் தோலா வீரா, லோத்தல் ஆகிய இடங்களில் 13 ஆண்டுகளும், ஆந்திர மாநிலத்தில் நாகார்ச்சுன கொண்டா என்ற இடத்தில் 10 ஆண்டுகளும், உத்திர பிரதேசத்தில் அதிசுசித்ரா என்னும் இடத்தில் 6 ஆண்டுகளும், அகழாய்வைத் தொடர்ந்து நடத்த அனுமதியும் அதற்கான நிதியும் ஒதுக்கிய இந்திய அரசு கீழடியில் 20 ஆண்டுகள் தொடர்ந்து நடத்த வேண்டிய அகழாய்வினை 2 ஆண்டுகள் மட்டும் நடத்தி அவசர அவசரமாக முடிவுக்குக் கொண்டுவர உத்தரவிட்டும், தமிழரின் தொன்மை வரலாற்றினை வெளிப்படுத்திய தொல்லாய்வுத் துறைக் கண்காணிப்பாளர் அமர்நாத் இராமகிருட்டிணனை இடமாற்றம் செய்தும் ஆணை பிறப்பிக்க வேண்டிய அவசியம் என்ன? மேலும் துணைக் கண்காணிப்பாளர் தகுதியில் ஒருவரை நியமித்து புதிய தடயம் எதுவும் இனி கிடைக்க வழியில்லை என்று கூறி கீழடி அகழாய்வினை முடிவுக்குக் கொண்டுவந்தது ஏன்?

அமெரிக்காவில் உள்ள பீட்டா அனலிசிசு ஆய்வு நிறுவனத்திற்குத் தொல்லியல் தடயங்கள் அனுப்பப்பட்டு ஆராயப்படுவது வழக்கமாகும். அகழாய்வில் கிடைக்கும் பொருட்களில் எத்தனைப் பொருட்களின் மூலக்கூறுகளின் மாதிரிகளை கார்பன்-14 பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டும்

என்பதை மத்தியத் தொல்லியல் துறைதான் முடிவு செய்கிறது. இராசசுதான் மாநிலத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் கிடைத்தவற்றுள் 28 பொருட்களின் மாதிரிகளும், குசராத் மாநிலத்தில் கிடைத்தவற்றில் 20 பொருட்களின் மாதிரிகளும், உத்திரபிரதேசத்தில் கிடைத்தவற்றில் 15 மாதிரிப் பொருட்களும் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால், கீழடியில் கிடைத்த மூலப்பொருட்களில் குறைந்தளவு 10 பொருட்களையாவது ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்க மறுத்து இரண்டே இரண்டு பொருட்கள் மட்டுமே ஆய்வுக்காக அமெரிக்காவிற்கு மத்தியத் தொல்லாய்வு துறையால் அனுப்பி வைக்கப்பட்டன.

இரும்புக் காலத்தில் தொடங்கி வரலாற்று ரீதியில் முதன்மையான ஆதாரங்கள் தொடர்ச்சியாகக் கிடைத்துள்ள இடம் கீழடியாகும். இந்த ஆதாரங்களின் மாதிரிகள் கார்பன்-14 முறையில் பகுப்பாய்வு செய்யப்படும் போதுதான் கீழடி நாகரிகத்தின் கால வளர்ச்சியை மிகத் துல்லியமாகக் கண்டறிந்து நிறுவ முடியும். தமிழர்களின் தொன்மையான நாகரிகம் அவ்வாறு நிறுவப்படுவதை இந்திய அரசு விரும்பவில்லை. எனவேதான் கீழடியில் கிடைத்தவற்றுள் அதிகமான மாதிரிகளை ஆய்வுக்கு அனுப்ப மறுத்திருப்பதின் மூலம் அவர்களின் திட்டமிட்ட உள்நோக்கம் வெளிப்படுகிறது.

தமிழர் நகர்ப்புற நாகரிகத்தின் தொன்மையை முதன் முதலாக வெளிப்படுத்திய இடம் கீழடியாகும். வரலாற்று ரீதியில் மிக முதன்மைப் பெற்ற இந்த ஆய்வினைத் தொடர்ந்து நடத்தி முழுமையான வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்றுதான் யாராக இருந்தாலும் கருதுவார்கள். ஆனால் இந்தியாவின் முதன்மையான நாகரிகம் தமிழர் நாகரிகமே என்பதை மறைத்து ஆரிய நாகரிகத்தை முதன்மைப்படுத்தப் பலவற்றாலும் முயலும் இந்திய அரசிடமிருந்து இதைத் தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும்?.

இந்திய அரசின் இச்செயலுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் உருவான எதிர்ப்பின் விளைவாக மத்திய கலாசாரத் துறையின் இணையமைச்சர் மகேசுவர்மா, மத்திய வணிக-தொழில்துறை இணையமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்தியத் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநர் இராகேசு திவாரி ஆகியோர் 28-04-2017 அன்று கீழடி வந்து பார்வையிட்டனர். கீழடி ஆய்வு மேலும் 3 ஆண்டுகளுக்கு நடைபெறும் என்றும் அறிவித்தனர். ஆனால் வெறும் அறிவிப்போடு அது நின்று

விட்டது.

கீழடியில் 110 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட தொல்லியல் மேட்டில் வெறும் 15%க்கும் குறைவான இடத்தில் மட்டும் ஆய்வை நடத்தினால் எத்தகைய முடிவையும் நிறுவுதல் இயலாத ஒன்றாகும். எனவேதான் இத்தகைய நெருக்கடியை ஆய்வாளரான அமர்நாத் இராமகிருட்டிணனுக்கு அளித்து அவர் அறிக்கை அளிக்கவில்லை என்ற பழியைச் சுமத்தி கீழடி அகழாய்வினை முடிவுக்குக் கொண்டுவர இந்தியத் தொல்லியல் துறை துடித்தது. ஏன் இந்தத் துடிப்பு? என்பது போன்ற கேள்விகளையும், ஐயப்பாடுகளையும், தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வாளர்களும், கட்சித் தலைவர்களும், எழுப்பிய பிறகு இந்திய அரசு பணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

21-09-2017இல் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் கனிமொழி மதி என்னும் வழக்கறிஞர் கீழடி அகழ்வாராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து நடத்த ஆணை பிறப்பிக்க வேண்டும் எனத் தொடுத்த வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகளான எம். சுந்தரேசு, என். சதிசு குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணை நடைபெற்றது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் விசாரணையை ஒத்தி வைத்து இருவரும் கீழடிக்கு நேரில் சென்று ஆய்வினைப் பார்வையிட்டனர். அவர்கள் தொடுத்த பல்வேறு கேள்விகளுக்குச் சரியான விடைகளைச் சொல்ல முடியாமல் துணைக் கண்காணிப்பாளர் சிறிராமன் மழுப்பினார். அதன் பின் கீழடி அகழாய்வினைத் தொடர்ந்து நடத்துவதற்கு மத்தியத் தொல்லியல் துறை அனுமதி வழங்க வேண்டும் என நீதிபதிகள் ஆணை பிறப்பித்தனர். தமிழக அரசு அதை ஏற்றுச் செயல்படத் தொடங்கியது அனைத்துப் பத்திரிகைகளிலும் இச்செய்தி வெளியாகியுள்ளது. இதைக் கூட அறியாமல் தி.மு.கவைச்சேர்ந்த கனிமொழி இந்த வழக்கைத் தொடுத்ததாகக் குற்றம் சாட்டி இந்து வெறியர்கள் பரப்புரை செய்கின்றனர். அவருக்கும் வழக்குத்தொடுத்த கனிமொழி மதி என்னும் வழக்கறிஞருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. உயர் நீதிமன்றத்தில் கீழடி அகழாய்வு தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என வழக்குத் தொடுத்து வெற்றிக் கண்ட பெருமை இவ்வழக்கறிஞருக்கு மட்டுமே உரியது.

தமிழகத் தொல்லாய்வுத் துறை கீழடி ஆய்வினைத் தொடர்ந்து மேற்கொண்டு மேலும் பல உண்மைகளை வெளிப்படுத்தியது. 2018ஆம் ஆண்டில் கீழடியில் நடைபெற்ற 5ஆம், 6ஆம் கட்டங்களின் அகழாய்வின் போது சேகரிக்கப்பட்ட கரிம மாதிரிகள் அமெரிக்காவில் உள்ள பீட்டா பகுப்பாய்வுச் சோதனைக்கு அனுப்பபட்டு அவை 2,580 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று அங்கு

கணித்துக் கூறியுள்ளனர். அதாவது கீழடியின் நாகரிகம் கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது இதன் மூலம் நிறுவப்பட்டது. முதல் இரு கட்ட கீழடி ஆய்வுகளின் மூலம் கிடைத்தப் பொருட்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு உரியவை என்பது வெளிப்பட்டது. கீழடியில் 4ஆம், 5ஆம் கட்டங்களின் அகழாய்வில் கிடைத்த பொருட்களின் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டு என்பது உறுதிப்பட்டது.

வைகைக்கரை நகர நாகரிகம், தமிழ் பிராமி எனப்படும் தமிழி எழுத்து ஆகியவற்றின் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டு அளவில் ஆனவை என்பது தெள்ளத் தெளிவாக நிலைநிறுத்தப்பெற்றது. கி.மு. 6ஆம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் எழுத்தறிவு பெற்ற சமுதாயமாகத் திகழ்ந்துள்ளனர் என்பதும் தமிழ்மொழியின் தொன்மை குறித்து அறிஞர் சிலர் கூறிவரும் கருதுகோள்கள் உண்மையானவை என்பதற்குக் கீழடி ஆய்வின் முடிவு சான்றாக அமைந்துள்ளது எனத் தொல்லியல் துறை அறிஞரான கா. இராசன் கூறியுள்ளார்.

## தமிழரும் சமயமும்

தமிழர் தொன்மை நாகரிகத்தை வெளிப்படுத்திய கீழடியின் அகழாய்வினைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் தோல்வியடைந்த இந்து வெறியாளர்களும் அவர்களின் கொத்தடிமைகளாகத் திகழும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலரும் தங்களின் கோபத்தினை அமர்நாத் இராமகிருட்டிணன் மீது திருப்பியுள்ளனர். தமிழ் இலக்கிய வரலாறு, தமிழர் பண்பாட்டு வரலாறு, தமிழர் வரலாறு ஆகியவை குறித்து சிறிதளவுக் கூட இவர்கள் அறிந்திருக்கவில்லை. கீழடி ஆய்வில் கிடைத்த சான்றுகளின்படி, கீழடியில் வாழ்ந்த தமிழர்களுக்கு இறைவழிபாடில்லை, மத நம்பிக்கையில்லை, எனவே தமிழர்கள் இந்துக்கள் அல்லர் என்பது போன்ற கருத்துக்களை கீழடி ஆய்வாளர்கள் வெளிப்படுத்துவதாகக் குற்றம் சாட்டி தங்களது அறியாமையை வெளிப்படுத்தியுள்ளனர். மதவெறி கண்ணோட்டத்துடன் எந்தப் பிரச்சனையும் அணுகுபவர்கள் கீழடி ஆய்வினையும் அதே கண்ணோட்டத்துடன் அணுகுகிறார்கள்.

சங்க கால இலக்கியங்களில் சமயம் அல்லது மதம் என்ற சொல்லாட்சியே கிடையாது. சமயம் என்னும் சொல்லாட்சி முதன் முதலாக 3ஆம் நூற்றாண்டுக் காலத்திய மணிமேகலையில்தான் காணப்படுகிறது.

“மூதூர் அகத்து
அவ்வவர் சமயத்து அறிபொருள் கேட்டு”

"உன்னிய பொருளுரைத்து
ஐவகைச் சமயமும் அறிந்தனன்"

"நூற்றுறைச் சமய நுண்பொருள் கேட்டே
அவ்வுரு வென்ன ஐவகைச் சமயமும்
செவ்விது அன்மையிற் சிந்தையின் வைத்திலேன்"

சங்க இலக்கியத்தை அடுத்து 8ஆம் நூற்றாண்டு காலத்திய மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் சமயம் என்னும் சொல் இடம் பெற்றுள்ளது.

சமயம் என்ற சொல்லாட்சியே நமது சங்க இலக்கியங்களில் காணப்படாத போது பழந்தமிழர்களிடம் சமய உணர்வுகள் இருந்தன எனக் கூறுவது வரலாற்று அறியாமையின் வெளிப்பாடாகும்.

சங்க இலக்கியத்தில் கடவுள், தெய்வம் என்னும் இரண்டு சொற்கள் இடம் பெற்றுள்ளன. மக்கள் வழிபட்ட அனைத்தையும் குறிப்பிடுவதாக இச்சொற்கள் அமைந்துள்ளன. கடவுள் என்னும் சொல்லுக்கு தெய்வம் என்னும் சொல்லோடு மேன்மை, சான்றோர், துறவிகள், நடுகல் வீரர்கள் என்ற பொருள்களும் கூறப்பட்டன.

இனக்குழுக்களாகத் தமிழர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் சமூகத்தில் மன்றம் என்ற பெயரிலான அமைப்பு நிலவியது. இது குறித்து தமிழறிஞர் ஆ. சிவசுப்பிரமணியன் பின்வருமாறு கூறியுள்ளார்.

மன்றம் என்பது ஊருக்கு வரும் கலைஞர்கள் தங்கும் இடமாகவும் சிறுவர்கள் விளையாடும் இடமாகவும் பயன்பட்டுள்ளது. அத்துடன் வழிபடும் இடமாகவும் இது விளங்கியுள்ளது. மேல்நிலை ஆவியத்தின் வளர்ச்சி நிலையாக, தெய்வம் உறைவதாக நம்பி மரங்களை இங்கு வழிபட்டதன் அடையாளமாக "மன்ற" என்னும் அடைமொழியிட்டு மன்ற வேம்பு, மன்றப் பலவு, மன்றப் பெண்ணை (நற்றிணை 303), மன்ற வேங்கை (குறுந்தொகை 241; அகநானூறு 232) என்ற சொல்லாட்சியைச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. அத்துடன் கோவில் போன்ற அமைப்பு மன்றத்தில் இருந்ததையும் அணங்கு, சூர், முருகு என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்த உருவமற்ற தெய்வங்களை வணங்கும் செயல் தொடங்கி விட்டதையும் அறிய முடிகிறது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

நடுகல்லிலும் "கள்ளி நிழலிலும்" மர வடிவில் மன்றங்களிலும் அணங்கு என்ற பெயரில் பல்வேறு பொருள்களிலும் உறைவதாக நம்பி வழிபட்ட தொல் கடவுளர்களுக்கு மாற்றாகக் கட்டட வடிவிலான கோயில்களில் புதிய கடவுளர்கள் இடம்பெறத் தொடங்கினர். திணைச் சமூகத்தின் அழிவு, திணைக்குரிய தெய்வங்களின் அழிவுக்கு இட்டுச் சென்றது. புதியதாக உருவான சிறப்புக் கடவுளர் உறைய "கோட்டம்" என்ற பெயரிலான கோவில்கள் உருவாயின. அரசன் வாழும் அரண்மனையும் தெய்வம் உறைவதாக நம்பும் கோட்டமும் கோவில் என்ற ஒரே சொல்லால் அழைக்கப்பட்டன. கோவில், இறை என்ற கடவுளுடன் தொடர்புடைய இருசொற்களும் மன்னனுடன் தொடர்புபடுத்தப்பட்டதைக் கவனிக்க வேண்டும்.

ஊரிலுள்ள மன்றத்தில் சுவர் எழுப்பியும், அதில் விட்டங்கள் வைத்தும், கூரை வேய்ந்தும் கோவில் உருவாக்கப்பட்டதையும் அதில் ஓவியமாகக் கடவுள் வடிவம் வரையப்பட்டிருந்ததையும், அவ்வுருவின் முன் "இட்டிகை" என்ற பெயரில் பலிபீடம் அமைத்துப் பலி கொடுத்ததையும் அகநானூறு பின்வருமாறு விரிவாகக் குறிப்பிடுகிறது.(137:9-20):

"கொடுவில் ஆடவர் படபகை வெரீஇ
ஊர் எழுந்து உலறிய பீர்எடு முதுபாழ்
முருங்கை மேய்ந்த பெருங்கை யானை
வெரிந் ஓங்கு சிறுபுறம் உரிஞ ஒல்கி
இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரம்சோர் மாடத்து
எழுது அணி கடவுள் போகலின் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்
பால் நாய் துள்ளிய மறைக்கட் சிற்றில்
குயில் காழ் சிதைய மண்டி அயில்வாய்க்
கூர்முகச் சிதலை வேய்ந்த
போர்மடி நல்இறைப் பொதியி லானே"

மனித சமூக வளர்ச்சியில் தொடக்க கால நுண்கலையாக ஓவியம் அமைகிறது என்பதன் அடிப்படையில் நோக்கினால், ஆவி என்ற ஆற்றலுக்கு உருவம் அமைக்கும் முயற்சியினை

இப்பாடல் செய்தி உணர்த்துகிறது. மானிடவியலாளரின் நோக்கில் கடவுளுக்கு மனித உருவேற்றம் (Anthropomorphic) வழங்கும் நிகழ்ச்சியின் வெளிப்பாடாக இதைக் கொள்ள முடியும்" எனக் கூறியுள்ளனர்.

எனவே பழந்தமிழர்களிடையே சமய உணர்வோ அல்லது சமயவழி தெய்வ வழிபாடோ இருக்கவில்லை. திணைவழித் தெய்வவழிபாடுகள் நிலவின. குறிஞ்சி நிலத்திற்கு முருகனும், முல்லை நிலத்திற்கு மாயோனும், மருத நிலத்திற்கு வேந்தனும், நெய்தல் நிலத்திற்கு வருணனும், பாலை நிலத்திற்குக் கொற்றவையும் தெய்வங்களாக வழிபடப்பட்டனர். இத்தெய்வங்கள் எச்சமயத்தையும் சேர்ந்தவையல்ல. அந்தந்த நிலங்களுக்குரிய தெய்வங்களாகத் திகழ்ந்தன. இதற்குப்பிறகு உருவமற்ற அணங்கு, சூர், முருகு போன்ற தெய்வங்கள் உறையும் இடங்கள் கோட்டங்கள் என அழைக்கப்பட்டன. இவற்றின் வளர்ச்சி நிலையை சங்கப் பிற்கால இலக்கியமான சிலப்பதிகாரம் விரிவாகக் கூறுகிறது.

## தமிழரின் இயற்கை நெறி

கி.பி. 3ஆம் நூற்றாண்டில்தான் வடநாட்டைச் சேர்ந்த வைதிகம், சமணம், பௌத்தம் போன்ற சமயங்கள் தமிழ்நாட்டில் புகுந்தன என்பது வரலாற்றுப் பூர்வமான உண்மையாகும். இச்சமயங்கள் தமிழகத்தில் அடியெடுத்து வைக்கும் காலம் வரைத் தமிழக மக்களிடையே சமயக் கோட்பாடுகளோ, சமயவழி வழிபாடுகளோ இருக்கவில்லை.

கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பல்லவர் ஆட்சி தமிழகத்தில் கால் கொண்ட பிறகு வடபுல ஆரியர்களின் குடியேற்றமும் கோயில்களில் அவர்கள் நுழைவும் தமிழர்களின் தொல்வழிபாட்டு முறையைச் சிதைத்தது. ஆனாலும் தொல் தமிழர்களின் தெய்வங்கள் இன்றும் நாட்டார் தெய்வங்கள் எனப் போற்றி வணங்கப்படுகின்றன. இன்றும் குலதெய்வம் என்ற பெயரில் தமிழர்கள் தங்கள் குடும்பங்களில் நடைபெறும் திருமணங்கள் போன்றவற்றுக்கு குலதெய்வக் கோயிலில் முதலில் வழிபட்ட பிறகே மற்றவற்றைச் செய்யும் பழக்கம் நீடிக்கிறது.

சங்க காலத் தமிழகத்தில் இயற்கை நெறி போற்றப்பட்ட காலத்தில் வடநாட்டில் சமயநெறி போற்றப்பட்டது. தமிழர் வாழ்வில் சமயம் முக்கிய இடம் பெறவில்லை. ஆனால், வடக்கே வைதிகம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களும் அவற்றுக்கிடையே சச்சரவுகளும் பரவியிருந்தன. வட நாட்டிலிருந்து இந்தச் சமயங்கள் தமிழகத்திற்கு வருவதற்கு முன்பாகத் தமிழர் வாழ்வில் ஆன்மீக ஈடேற்றம் என்பது வாழ்வின் நோக்கமாக அமையவில்லை.

## வரலாற்றுத் திரிபு

இத்தகைய வரலாற்று உண்மைகளை அறியாதவர்கள் திட்டமிட்டுப் பொய்ப்பரப்புரையில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். ஆர்.எசு.எசு. அமைப்பின் துணை அமைப்புகளில் ஒன்றான பாரதிய விசார கேந்திரம் என்ற அமைப்பு கேரள மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு நடத்தும் கேசரி என்னும் இதழிலும் பா.ச.க.வின் இதழான விசய வாணி என்னும் இதழிலும் கீழடி ஆய்வுகள் குறித்து முற்றிலும் பொய்யானதும் ஆதாரமற்றதுமான கட்டுக்கதைகள் தொடர்ந்து பரப்பப்படுகின்றன. அவற்றையே தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்து வெறியர்கள் சிலரும் இங்கு பரப்புகிறார்கள்.

வரலாற்றைப் திரித்தலிலும் முற்றிலும் பொய்மையான வரலாற்றை எழுதுவதிலும் இந்து வெறியர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். சிந்து சமவெளி நாகரிகம் ஆரியரின் இந்திய வருகைக்கு முற்பட்ட நாகரிகம் என்பது இந்திய மற்றும் உலக வரலாற்று அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். ஐரோப்பிய கிறித்துவ அறிஞர்கள் திட்டமிட்டுப் பரப்பும் கட்டுக்கதை இது என இந்து வெறியர்கள் தொடர்ந்துக் கூறிவருகிறார்கள். சிந்து சமவெளி நாகரிகத்தின் பெயரையே சரசுவதி நாகரிகம் என மாற்ற முயலுகிறார்கள். ரிக் வேதத்தில் சரசுவதி நதி குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர இந்தியாவில் எந்தப் பகுதியிலும் சரசுவதி நதி ஓடவில்லை. ஓடியதாக வரலாற்றுக் குறிப்புகளும் இல்லை. இல்லாத சரசுவதிநதியின் பெயரால் ஆரிய நாகரிகத்தை சிந்து சமவெளி நாகரிகத்தின் மீது சுமத்த இடைவிடாது முயற்சி செய்கிறார்கள்.

11-07-1999 அன்று என்.எசு. இராசாராம் முனைவர் நட்பர் சா ஆகிய இருவர் பரப்பரப்பான ஒரு செய்தியை வெளியிட்டார்கள். சிந்து சமவெளி முத்திரைகள் சொல்லும் செய்தியைத் தாங்கள் கண்டறிந்து விட்டதாகப் பின்வருமாறு கூறினார்கள். “ஆர்வர்டு பல்கலைக்கழக அகழ்வாராய்ச்சி அறிஞரான ரிச்சர்டு மீடோ என்பவர் கண்டெடுத்த பானை ஓடு ஒன்றில் சில சின்னங்கள் குறிக்கப்பட்டு இருந்தன. அவை கூறுவது என்ன என்பதை எங்களது ஆய்வின் மூலம் நாங்கள் கண்டறிந்துள்ளோம். ரிக் வேதத்தில் குறிப்பிடப்படும் சரசுவதி நதியையே இது குறிக்கிறது” என அறிவித்தார்கள்.

இந்த கண்டுபிடிப்பு முற்றிலும் பொய்யானது என்பது விரைவில் வெளியாகி விட்டது. ரிக் வேதம் தோன்றிய காலத்திற்கு 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் இந்தப் பானை ஓடு. இந்த

உண்மையை மறைத்து அவர்கள் கூறிய பொய் அம்பலமானது. ரிக் வேதம் தோன்றாத காலத்திலேயே அதைப் பற்றிய குறிப்பு சிந்து சமவெளிப் பானை ஓட்டில் உள்ளது என்று அவர்கள் கூறியதைக் கேட்டு வரலாற்று அறிஞர்கள் நகைத்தார்கள்.

மற்றொரு அப்பட்டமான பொய்யையும் சற்றும் கூசாது அவர்கள் கூறினார்கள். ரிக் வேதம் குதிரைகளையும், ரதங்களையும் பற்றிக் குறிப்பிடுகிறது. சிந்து சமவெளி நாகரிகத்தில் குதிரையைப் பற்றிய தடயம் ஏதும் கிடைக்கவில்லை. சிந்து சமவெளி நாகரிகம் இயற்கைக் காரணங்களினால் அழிந்து ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகே ஆரியர்கள் குதிரைகளை ஓட்டிக் கொண்டு இந்தியாவுக்குள் அடியெடுத்து வைத்தார்கள் என்பது வரலாறாகும். இந்த உண்மையை மறைப்பதற்காக குதிரையின் எலும்பு சிந்து சமவெளியில் கிடைத்தது என்று கூறுவதின் மூலம் அந்நாகரிகத்தையே ஆரிய நாகரிகமாகக் காட்டுவதற்குத் திட்டமிட்டு பொய்யான தடயங்களை உருவாக்கினார்கள். சிந்து சமவெளி முத்திரைகளில் குதிரையைக் குறிக்கும் முத்திரை ஒன்று உள்ளது என்று கூறி அதன் படத்தையும் வெளியிட்டார்கள்.

இதன் விளைவாகப் பெரும் குழப்பம் உருவாயிற்று ஆர்வர்டு பல்கலைக்கழக சமற்கிருதப் பேராசிரியரான மைக்கேல் விட்செல் அவர்களும் மற்றும் சில ஆய்வாளர்களும் இராசாராம் கூறிய குதிரை முத்திரை குறித்த உண்மையைக் கண்டறிவதில் தீவிரமாக ஈடுபட்டனர். ஒற்றைக் கொம்புடைய காளை சின்னம் பொறிக்கப்பட்ட உடைந்த முத்திரையின் படம் ஒன்றைக் கணினி மூலம் திரித்து குதிரை என அவர் மோசடிச் செய்திருப்பதைக் கண்டுப்பிடித்து அம்பலப்படுத்தினார்கள்.

சிந்து சமவெளி மக்கள் பேசிய மொழி வேதகாலச் சமற்கிருதம் என இராசாராம் கூறியிருந்தார். இக்கூற்றினை சிந்து சமவெளி நாகரிகத்தை ஆராய்ந்த பல அறிஞர்கள் ஆதாரத்துடன் மறுத்தனர். தனது கண்டுபிடிப்புகள் அனைத்தும் பொய்யானவை, முற்றிலும் தவறானவை என ஆராய்ச்சி அறிஞர்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டாலும் அவர் அது குறித்து வெட்கப்படவில்லை. தான் எழுதிய “சரசுவதி நதியிலிருந்து சிந்து எழுத்துக்கள் வரை என்னும் நூலை ஆங்கிலத்திலும் இந்தியாவில் உள்ள 13 மொழிகளிலும் வெளியிட பா.ச.க அரசு முன்வந்திருப்பதாக" அவர் கூறிக் கொண்டார்.

வரலாற்று அறிஞரான ரோமிலா தாப்பர் “இந்துத்துவாவும் வரலாறும்” என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். “ஆரியர்கள் அன்னிய

படையெடுப்பாளர்கள் என்பதை மறைக்க இந்துத்துவாதிகள் விரும்புகிறார்கள். இந்து என்பவன் இந்தியாவைத் தனது பித்ரு பூமியாகவும், புண்ணிய பூமியாகவும் ஏற்றுக்கொண்டவன் என இந்துத்துவாத் தத்துவத்தை உருவாக்கிய சாவர்க்கார் கூறியுள்ளார். எனவே, அன்னிய படைப்பாளரிடமிருந்து ஒரு இந்து தோன்றியிருக்க முடியாது. ஆரிய கலாசாரப் பாரம்பரியத்திலிருந்து இந்துக்கள் தோன்றியதாகக் கூற வேண்டுமானால், ஆரியர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பது நிலைநாட்டப்பட வேண்டும். எனவே அவர்கள் சிந்து சமவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் என்றும் அதற்கு முற்பட்டு அல்லது அந்த நாகரிகக் காலத்தில் பிறந்தது ரிக் வேதம் என்றும் சாதிக்க விரும்புகிறார்கள். இதற்காகவே சிந்து சமவெளி நாகரிகத்தில் குதிரை இருந்ததென்றும், அம்மக்கள் சமற்கிருதம் பேசினார்கள் என்றும் பச்சைப் பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்.

ஆரியர்கள் இந்தியாவில் குடியேறிய வந்தேறிகள் என்ற வரலாற்று உண்மையை ஒப்புக்கொள்ள மறுத்தால் வேறுசில கேள்விகளுக்குப் பதில் கூறவேண்டியிருக்கும். ஆரியர்களின் மொழியும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களின் பல்வேறு மக்களின் மொழிகளும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். ஆரியர்கள் வெளியிருந்து இந்தியாவிற்கு வந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்ள மறுத்தால் ஐரோப்பிய நாட்டு மக்கள் இந்தியாவிலிருந்து அங்கு சென்று குடியேறியவர்கள் எனக் கருத வேண்டியிருக்கும். இதைப்போல மேலும் பல்வேறு கேள்விகளுக்கு விடை சொல்ல நேரும் எனக் கூறினார்.

பா.ச.க. அரசின் சுற்றுலா - கலாசாரத் துறையமைச்சராகயிருந்த சக்மோகன் என்பவர் சரசுவதி நதி குறித்து அகழ்வாராய்ச்சி செய்யக் குழுவை அமைத்து நிதியும் ஒதுக்கினார். இந்திய அகழ்வாராய்ச்சித் துறையின் தலைமை இயக்குநராகயிருந்த லால் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழு “அரியானா- பஞ்சாபில் ஓடி சர்சா என்னும் இடத்தில் வற்றிப் போன காகர் நதிதான் சரசுவதி நதி” எனப் பொய்யான கட்டுக்கதையை வெளியிட்டது.

புகழ்பெற்ற அகழ்வாராய்ச்சி அறிஞரான சூரசுவான் என்பவர் ரிக் வேதத்தில் குறிப்பிடப்படும் சரசுவதி ஆப்கானிசுதானில் உள்ள ஆரக்வதி நதியே ஆகும். என்பதை எடுத்துக் கூறி சரசுவதி நதிப் பொய்மையை உடைத்தெறிந்தார். இப்படித் தொடர்ந்து வரலாற்றுத் திரிபு வேலைகளைச் செய்து மூக்குடைப்பட்டு வரும் இந்து வெறியர்கள் கீழடி நாகரிகத்தையும் திரித்து கூற முற்பட்டுள்ளனர்.

**சேரன் முசிறி**

கேரள மாநிலத்தில் உள்ள பட்டணம் என்னும் இடத்தில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியில் அறியப்பட்ட முடிவுகளும் கீழடி முடிவுகளும் ஒன்றாக அமைந்துள்ளன என பி.செ. செரியன் என்னும் ஆய்வாளர் தெரிவித்தார். பட்டணம் என்பது பண்டைய சேர நாட்டு முசிறித் துறைமுகமாகும். கிரேக்கம், ரோமாபுரி போன்ற மேற்கு நாடுகளுடன் தமிழர்கள் வாணிபத் தொடர்பினை முசிறித் துறைமுகத்தின் மூலம் அந்த நாளில் செய்து வந்தனர். எனவே அங்கு அகழாய்வில் கிடைத்த தடயங்களும், கீழடித் தடயங்களும் ஒரே மாதிரியாக இருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. இது வரலாற்று அடிப்படையிலான உண்மையாகும். இதைக்கூட இந்து வெறியர்கள் திரித்துக் கூற முற்பட்டுள்ளனர். (பண்டைய சேரநாடு தமிழ் பேசும் நாடாக விளங்கியது. கி.பி.10ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே மலையாள மொழி பிறந்தது என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.)

**அறியாமையின் உச்சக்கட்டம்**

இயேசு கிறித்துவின் சீடரான தாமசு முசிறியில் வந்து இறங்கி கிறித்துவ மதத்தைப் பரப்புரைச் செய்தார் என்பதை நிலைநாட்டுவதற்காக செரியன் போன்ற கிறித்துவர்கள் முயற்சி செய்வதாக நகைப்புக்கு இடமான செய்தியை இந்து வெறியர்கள் பரப்புகின்றனர். கீழடி மற்றும் முசிறி ஆகியவற்றின் அகழாய்வில் கண்டறியப்பட்ட பொருட்களின் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டாகும். அதாவது இயேசு கிறித்து பிறப்பதற்கு 600 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் என்பதைக் கூட உணராமல் மதவெறியில் எதை எதையோ உளறிக்கொட்டித் தங்களின் அறியாமையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கீழடி, முசிறி ஆகிய இடங்களில் கிடைத்த தடயங்களின் மூலம் இந்தியாவைப் பிளவுப்படுத்த சதி நடைபெறுவதாக இந்து வெறியர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். திராவிடக் கட்சிகள் கீழடி நாகரிகத்தைத் திராவிட நாகரிகம் என்றும், இந்து வெறியர்கள் பாரத நாகரிகம் என்றும் திரித்துக் கூற முற்படுகின்றனர். வரலாற்று அறிவு குறைந்தளவுக்குக் கூட இவர்களுக்கு இல்லை என்பதையே இது வெளிப்படுத்துகிறது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் ஆதி சங்கரர் திருஞானசம்பந்தரைப் பற்றி கூறும் போது திராவிட சிசு எனக் குறிப்பிட்டார். முதன் முதலாக திராவிடம் என்னும் சொல் அப்போதுதான் குறிப்பிடப்படுகிறது. இதற்கு 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட கீழடி தமிழர் நாகரிகத்தைத் திராவிட நாகரிகம் என்று சொல்வது அறியாமையின் உச்சக் கட்டமாகும். அதைப் போல பாரத நாகரிகம் எனக் கூறுவதும் தவறாகும். பாரதம் என்னும்

சொல் மகாபாரதக் காலத்திற்கு பிறகே வழக்குக்கு வந்த சொல்லாகும். இந்தியா என்ற சொல்லோ ஆங்கிலேயர் வரவுக்குப் பிறகு அவர்கள் காலத்தில் கூறப்பட்ட பெயராகும். இதற்கெல்லாம் பல நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழர்களின் உண்மையான நாகரிகத்தை இந்திய நாகரிகம் என்று இவர்கள் கருதுவது உண்மையானால், அதை மூடி மறைக்க முயலுவது ஏன்?

## மரபியல் மேலாண்மை

கீழடி அகழ்வாராய்ச்சிப் பணிகள் குறித்து தமிழ்ப்பல்கலைக்கழகத் தொல்லியல் துறையின் துணைப் பேராசிரியர் வீ. செல்வகுமார் "நமது மரபியல் மேலாண்மை பாதுகாக்கப்பட வேண்டும், அகழ்வது மட்டும் போதுமானது அல்ல. அதன்மூலம் அறியப்படும் தரவுகளைப் பாதுகாத்து அவற்றை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டியது முதன்மையானதாகும். நமது பண்பாட்டுப் பெருமையைச் சொல்லும் தரவுகளை வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியங்களில் அழகாகக் காட்சிப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அந்தளவுக்கு நாம் இன்னும் செயல்படவில்லை.

"தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர், பூம்புகார், கங்கைகொண்ட சோழபுரம், அழகன்குளம், அரிக்கமேடு, கீழடி போன்ற இடங்களில் அகழாய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இடங்களுக்கு மக்கள் சென்று வருவதற்கான போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். தமிழ்நாட்டில் இன்னும் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொல்லியல் இடங்களில் அகழாய்வுகள் செய்ய முடியும். இவற்றிற்குத் தேவையான நிதியை யுனெசுகோ போன்ற அமைப்புகளிடமிருந்து பெற முடியும். இவ்வாறு அமைக்கப்படும் அருங்காட்சியகங்களில் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தும் வகையில் வரலாற்று பாடத்தில் தொல்லியலையும் சேர்க்க வேண்டும். இதன்மூலம் நமது மரபையே நமக்கான வளமாகக் கொள்ள முடியும். இவற்றைத் திறம்படச் செய்து முடிப்பதற்குத் தொல்லியல் துறை, அருங்காட்சியகத் துறை, அறநிலையத் துறை, சுற்றுலாத் துறை, உயர்கல்வித் துறை ஆகியவை ஒருங்கிணைந்து மரபியல் மேலாண்மை முறைமையை உருவாக்க வேண்டும்" என்று கூறியுள்ளதைச் செயற்படுத்த தமிழக அரசு முன்வரவேண்டும்.

## மறைப்பு-1 - கொடுமணம்

தற்போது உள்ள ஈரோடு மாவட்டத்தில் கொடுமணம் அமைந்துள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறையைச் சேர்ந்த புலவர் செ. இராசு 1985ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை இங்கு மேற்கொண்ட அகழாய்வில், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையும்

சென்னைப் பல்கலைக் கழக ஆய்வுத் துறையும் பங்கு கொண்டன. கொடுமணம் அகழாய்வு பெருங்கற்படை சின்னங்களிலிருந்தும், பானை ஓடுகளிலிருந்தும் கிடைத்த குறியீடுகள் தமிழ் பிராமி எழுத்துகளாகும். இதிலிருந்து பல செய்திகள் கிடைத்துள்ளன.

பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ள கொடுமணம் என்ற ஊரே தற்போது கொடுமணல் என வழங்கப்படுகிறது என்பதும் தெரிகிறது. தன்னைப் பாடிய புலவர்களுக்குக் கொடுமணத்தில் செய்யப்பட்ட அணிகலன்களைச் சேர மன்னன் பரிசாக அளித்தான் என்பது இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வூரில் ரோமாபுரி நாணயங்களும் மேலும் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட கருப்பு-சிவப்பு மண்பாண்ட ஓடுகளும் கிடைத்துள்ளன. இவை கி.மு. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இப்போதைய கரூருக்கு மிக அருகில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள பாடியூர், ரோம் அரசுடன் மிக அதிகமான வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது இதன் மூலம் புலப்படுகிறது. படிகப் பச்சை, படிகக் கல், சூதுபவளம், நீலம் போன்றவற்றைக் கொண்டு செய்யப்பட்ட அணிகலன்கள் இவ்வூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

கரூருக்கு அருகே இருக்கக் கூடிய அமராவதி ஆற்றில் கடந்த நூறாண்டு காலமாக ரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் கொடுமணம், பாடியூர் ஆகிய ஊர்களுக்கு மிக அருகில் அமைந்திருந்த சங்க காலச் சேரர்களின் தலைநகராக இருந்த கருவூர் இப்போதைய கரூர் நகரத்தின் அருகில்தான் அமைந்திருக்க வேண்டும். அதை அகழ்வாராய்ச்சின் மூலம் தேடிக் கண்டறியும் பணியினை மத்திய தொல்லாய்வுத் துறை இதுவரை மேற்கொள்ளவில்லை. தமிழரின் தொன்மையான நாகரிகம் வெளிப்பட்டு விடக் கூடாது என்பதற்கான மறைப்பு வேலையே இதுவாகும்.

**மறைப்பு-2 - ஆதிச்சநல்லூர்**

\தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது. பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த கொற்கையிலிருந்து 13 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது.

1876ஆம் ஆண்டு முனைவர் சாகர் என்னும் ஜெர்மானியரும் 1904ஆம் ஆண்டு லூயிஸ் லேபிக்யூ என்னும் பிரெஞ்சுக்காரரும் முதன் முதலாக இங்கு அகழாய்வு செய்த போது அவர்களுக்குக் கிடைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க பொருட்களை ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்று விட்டனர்.

1889 முதல் 1905 வரை ஆங்கிலேயரான அலெக்சாண்டர் ரியா என்பவர் அகழாய்வு நடத்தி வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த இதற்கு இணையாக இந்தியாவில் வேறு எந்த இடமும் கிடையாது என அறிவித்தார். இவருடைய முயற்சியில் 4000த்திற்கும் மேற்பட்ட பழம்பொருட்களைக் கண்டெடுத்தார். இரும்பால் செய்யப்பட்ட ஆயுதங்கள், பாத்திரங்கள், வெண்கலத்தால் செய்யப்பட்ட அணிகலன்கள், தங்க நகைகள், பல்வேறு வகையான மணிகள், மாவு அரைக்கும் கல் இயந்திரங்கள், விளக்குகள் போன்றவற்றைக் கண்டெடுத்தார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற அகழாய்வின் போது 160க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகளும் அவற்றுக்குள் மனித எலும்புகளும் கிடைத்தன. 144 ஏக்கர் பரப்பளவில் ஆயிரக்கணக்கானவர்கள் இங்கு புதைக்கப்பட்டுள்ளார்கள். இவை 3,800 ஆண்டிற்கு முற்பட்டவை என ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். இவற்றில் தமிழ் பிராமி எழுத்தில் குறியீடுகளும் இருந்தன. முதுமக்கள் தாழிகள் புதைக்கப்பட்ட மயானம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் அதற்கருகே மக்கள் வாழ்ந்த நகரம் அமைந்திருக்க வேண்டும். ஆனால், அதைக் கண்டுபிடிக்கும் ஆய்வுகள் தொடரவில்லை.

இங்கு பணியாற்றிய தொல்லியல் அதிகாரி 2006ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். ஆனால் தான் செய்த அகழ்வாராய்ச்சிகள் குறித்த அறிக்கையினை அவர் கொடுக்காமலேயே சென்று விட்டாரா? அல்லது கொடுத்தும் வெளியிடப்படாமல் மறைக்கப்பட்டு விட்டதா? மேற்கண்ட அதிகாரி அதைக் கொடுக்க வில்லை என்றால் அவர் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

முன்னாள் அதிகாரி அறிக்கையைக் கொடுக்காமல் சென்றிருந்தால் அவருக்குத் துணையாகச் செயல்பட்ட அதிகாரிகளைக் கொண்டு அந்த அறிக்கையை மத்தியத் தொல்லியல் துறை உருவாக்கியிருக்க வேண்டும். பின்னர் அதை வெளியிட்டும் இருக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட எதுவுமே செய்யப்படாதது பல்வேறு கேள்விகளுக்கும் ஐயப்பாடுகளுக்கும் இடமளிக்கிறது. தமிழர் நாகரிகத்தின் தொன்மையை மறைக்கும் முயற்சியே இதுவாகும்.

**மறைப்பு-3 - பூம்புகார்**

சங்க இலக்கியங்களிலும், சிலம்பு, மேகலை போன்ற காப்பியங்களிலும் சிறப்பாகக் குறிப்பிடப்படும் சோழர் தலைநகரமான பூம்புகார் கடல் கோளில் அழிந்து போனது.

1991ஆம் ஆண்டில் இந்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சிக் கழகம் புகழ்பெற்ற பூம்புகார் நகரக் கடல் பகுதியில் மேற்கொண்ட ஆய்வின் மூலம்

கடற்பகுதியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்குள் பல வட்ட வடிவமான கிணறுகள் தரங்கம்பாடி வரை இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் சங்க காலத்தைச் சேர்ந்த சுட்ட செங்கற்களால் ஆன ட வடிவக் கட்டிடம் ஒன்றும் கண்டறியப்பட்டது. இத்துடன் 23 அடி ஆழத்தில் 85 அடி நீளமும் 2 மீட்டர் உயரமும் கொண்ட பல பொருட்கள் கண்டறியப்பட்டன. இவை அனைத்தும் ஒரு பெரிய நகரம் மூழ்கிக் கிடக்கக் கூடும் என்பதை உறுதிப்படுத்தின. ஆனால், தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சிக் கழகம் தனது ஆய்வினைப் பாதியில் நிறுத்தி விட்டது.

2001ஆம் ஆண்டில் பூம்புகார் கடல் பகுதியில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆழ்கடல் ஆராய்ச்சியாளர் கிரகாம் ஆன்காக் என்பவர் தீவிரமாக ஆராய்ந்து கடலுக்கு அருகில் ஒரு பெரும் நகரம் மூழ்கிக் கிடப்பதைக் கண்டறிந்தார். இதனுடைய காலம் 11,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறினார். அந்நகரம் சுமார் 75 அடி ஆழத்தில் புதைந்து கிடப்பதைக் கண்டறிந்தார். பூம்புகார் நகர நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகத்தை விட மிகவும் மேம்பட்ட ஒன்று என்றும் அவர் கூறினார்.

இலக்கியச் சான்றுகளை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆதாரங்களும் பூம்புகாரில் கிடைத்துள்ளன. சங்க காலப் படகுத்துறை, புத்த விகாரை, உறைகிணறுகள், அரிய மணிகள், கட்டிடங்கள், பழங்காசுகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. முதுமக்கள் தாழி ஒன்றும் அதற்குள் 10க்கும் மேற்பட்ட சிறுசிறு கலயங்களும் கிடைத்துள்ளன. கருப்பு, சிவப்பு கலயத்தில் எழுத்துப் பொறிப்புடன் கிடைத்துள்ள முதல் கலயம் இதுதான். கருப்பு, சிவப்பு நிறம் என்பது கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தைக் காட்டுகிறது.

ஆனாலும், கடலுக்குள் மூழ்கிக் கிடக்கும் பூம்புகாரைப் பற்றிய முழுமையான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறவில்லை. கிரகாம் ஆன்காக்கின் ஆய்விற்குப் பிறகு இந்த ஆழ்கடல் ஆய்வு இந்திய அரசால் தொடரப்படவில்லை.

ஆனால், பாரதகால கிருட்டிணனின் தலைநகரமாக விளங்கியதாகக் கூறப்படும் துவாரகா நகரம் கடலுள் மூழ்கி விட்டதாகக் கூறப்படுகிறது. அதைத் தேடிக் கண்டறியும் பணியில் மத்திய அரசின் தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சிக்கழகம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. ஆனால் பூம்புகாரில் கடலுள் 75 அடி ஆழத்தில் மூழ்கிய நகரம் ஒன்றின் தடயங்களை மேனாட்டு அறிஞர் கண்டுபிடித்து அதற்கான சான்றுகளுடன் கூறிய பிறகும் கூட அந்த ஆய்வினைத் தொடர்ந்து நடத்த மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. தமிழரின் தொன்மை வெளிப்பட்டு விடக் கூடாது என்பதற்கான தொடர் மறைப்பு முயற்சியே இதுவாகும்.

# பவன் சுக்தேவும் பசுமைப் பொருளாதாரமும்(1):



சமந்தா

இயற்கை வளங்கள் நமக்குப் பலவிதமான பொருட்களையும், சேவைகளையும் வழங்கியிருக்கலாம், பல்லுயிர்களுக்கு உணவையும், உறைவிடத்தையும் தந்திருக்கலாம், நமக்குத் தாயாக, தோழமையாக இருந்து நம் பண்புநிலையை மேம்படுத்தியிருக்கலாம், அவற்றை எல்லாம் சொல்லித் தீராது. ஒன்றை இழக்கும் போதுதான் அதன் மதிப்பு உணரப்படும் **என்பார்கள்**, ஆனால் **இந்த அளவிற்கு இயற்கை வளங்களை** இழந்தும் அதன் மதிப்பை **அரசும் நிறுவனங்களும், மக்களும்** உணர்ந்தபாடில்லை. இயற்கை வளங்கள் அழிக்கப்படும் போது அது எல்லோரிடமும் வலியை ஏற்படுத்துவதில்லை. ஆனால் ஒரு ரூபாய் நோட்டை இழந்தால் ஒருவர் கவலை கொள்கிறார், ஏனென்றால் ரூபாய் நோட்டின் மதிப்பை அவர் அறிந்துள்ளார், ஆனால் இயற்கையின் மதிப்பை அவர் அறியவில்லை. இந்த முதலாளித்துவ சமூகம் கெடுவாய்ப்பாக நமக்குப் பண மதிப்பை, சந்தை மதிப்பை மட்டுமே மதிக்கக் கற்றுத் தந்துள்ளது. அதனால் சந்தை மதிப்பு இல்லாத இயற்கை வளங்களையும், பல்லுயிர்களையும், மனித சமூகம் புறக்கணித்துச் சீரழிக்கிறது.

இயற்கையின் மதிப்பை உணர்த்துவதற்குப் பலரும் பல்வேறு முறைகளில் முயன்று வரும் போது அதன் பொருளாதார மதிப்பு குறித்து முக்கிய ஆய்வுகளை மேற்கொண்டவர் இந்தியாவைச் சேர்ந்த பவன் சுக்தேவ். பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக பவன் சுக்தேவ் மேற்கொண்ட பெருமுயற்சிகளை அங்கீகரித்து சூழலியலில் நோபல் பரிசாகக் கருதப்படும் டைலர் விருது அவருக்கு மே மாதத்தில் வழங்கப்பட்டது. ஆனால் அவரது ஆய்வுகளுக்குத் தர வேண்டிய முக்கியத்துவத்தை ஊடகங்கள் தரவில்லை என்பது கவலையளிக்கிறது.

**இளமைக் காலத்தில்:**

1960இல் டெல்லியில் பிறந்து வளர்ந்த பவன் சுகதேவ், தன் இளமைக் காலத்தில் டெல்லி இயற்கையால் சூழப்பட்ட ஒரு சிறிய நகரமாய் இருந்ததாகவும், அவரது பாட்டி வீட்டுத் தோட்டத்தில் உள்ள மரங்களைச் சுற்றிப் பறக்கும் பழந்தின்னி வெளவால்களைக் காண



முடிந்ததாகவும், இரவில் குள்ளநரிகள் ஊளையிடுவதைக் கேட்க முடிந்ததாகவும் நினைவு கூர்கிறார். கோடை விடுமுறையின் போது, குடும்பத்தினருடன் சிம்லா, நைனிடால், முசூரி போன்ற பல இடங்களுக்குச் சுற்றுலா சென்ற போது இயற்கையின் இணையற்ற அழகை அவரால் ரசிக்க முடிந்தது. அது அவருக்கு இயற்கையின் மீதான ஈடுபாட்டை ஏற்படுத்தியது. அவர் பள்ளியில் சிறந்த மாணவராகத் திகழ்ந்தார். அவரது தந்தை சுவிட்சர்லாந்திற்குப் பணிமாற்றம் பெற்றதால் அவர் குடும்பத்துடன் ஐரோப்பாவுக்குச் சென்றார். பவன் சுவிட்சர்லாந்திலும், பிறகு இங்கிலாந்திலும் படித்தார். பவன் விஞ்ஞானியாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறையில் சேர்ந்தார். ஆனால் அவருக்குக் கிடைத்த உதவித் தொகை குறைவாக இருந்ததால் அவரால் அத்துறையிலேயே நீடிக்க முடியவில்லை. ஏமாற்றத்துடன் அவர் இயற்பியலைக் கைவிட்டு, ஒரு கணக்காளர் வேலை பெறலாம் என்ற எண்ணத்துடன் பொருளாதாரத் துறைக்கு மாறினார். இயற்பியலில், ஒரு கோட்பாட்டை உண்மையாக நிரூபிக்க முடியாத போது, அக்கோட்பாடு கைவிடப்படுகிறது. ஆனால் பொருளாதாரத்தில், கோட்பாடுகளுக்காகச் சில நேரங்களில் உண்மைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதும் பொருளாதாரத்தில் கணக்கில் கொள்ளப்படாத புறத்தாக்கமும் (Externality) அவருக்கு ஆரம்பத்தில் விசித்திரமாகப் பட்டது. ஒரு நல்ல ஊதியம் தரும் வேலை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் செயல்பட்டதால் அவற்றையெல்லாம் கொஞ்ச காலம் மறந்திருந்தார்.

**வங்கியாளராக:**

23 வயதில் பவனுக்கு ஆஸ்திரேலியாவில் உள்ள நியூசிலாந்து வங்கியில் வேலை

கிடைத்தது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு டொய்ச் வங்கியின் இந்திய அலுவலகத்தில் பணி புரிந்தார். பின்னர் அவ்வங்கியின் ஆசிய பிராந்திய இயக்குநராக உயர்ந்தார். பவனுக்கு மஹிமா, ஆஷிமா என இரண்டு மகள்கள் பிறந்தனர். அவரது முதல் மகள் மஹிமா இயற்கையை வெகுவாக நேசித்தார். தந்தையும் மகளும் இயற்கையையும், பறவைகளையும் ரசிப்பதிலும், அவற்றைப் படம் பிடிப்பதிலும் காலம் கழித்தனர். குழந்தைப் பருவத்தில் இயற்கையின் மீது பவன் கொண்டிருந்த ஈடுபாடு இவ்வாறு மீண்டும் புத்துயிர் பெற்றது. அவரது இரண்டாவது மகள் ஆஷிமா மறுசுழற்சி செய்வதில் மிகவும் விருப்பம் உள்ளவர். பேச ஆரம்பிப்பதற்கு முன்பே ரீசைகிள் (Recycle) என்று சொல்லுவாராம். பவன் தன் மகள்களுக்குப் பழைய அட்டைப் பெட்டிகளிலிருந்து ஒரு பொம்மை வீட்டைச் செய்து கொடுத்தார், அவருடைய இரண்டு மகள்களும் அதை வைத்து மணிக்கணக்கில் விளையாடினர். இயற்கையுடன் இருந்ததும், தனது மகள்களுடன் மறுசுழற்சிச் செயல்பாடுகளில் ஈடுபட்டதும் வங்கியாளரான தன்னைச் சூழலியல் பொருளாதார நிபுணராக மாற்றிக் கொள்ள ஊக்கமளித்ததாக அவர் கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் இருந்த பவனின் நண்பர் ஒருவர் அவரிடம், ஒரு கேள்வி கேட்டுள்ளார். அந்தக் கேள்வி அவர் வாழ்வையே மாற்றிப் போட்டது. “ஏன் சிலவற்றுக்குப் பண மதிப்பு உள்ளது, சிலவற்றுக்கு இல்லை?” என்பதே அந்தக் கேள்வி. பவன் இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடிய போது, பொருளாதார அமைப்பில் ஏதோ தவறு இருப்பதாக உணர்ந்தார். இயற்கை குறிப்பிடத்தக்க பொருளாதார மதிப்பைக் கொண்டிருக்க வேண்டும், ஆனால் அது பெரும்பாலும் பொருளாதாரத் துறையில் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கருதினார். இயற்கையின் மதிப்பை கணக்கிடக்கூடிய ஓர் அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணரத் தொடங்கினார்.

**பசுமை கணக்கீட்டு முறை (Green Accounting):**

பவன் சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையிலான உறவை ஆராயத் தொடங்கினார். அவர் பல புத்தகங்களைப் படித்தார். நாடுகளின் செல்வத்தை அளவிடப் பயன்படுத்தப்படும் தர மதிப்பீடுகளில் குறிப்பாக ஆர்வம் காட்டினார். ஒரு நாட்டின் ஜிடிபி (மொத்த உள்நாட்டு உற்பத்தி} அதிகரித்துள்ளது என்று சொல்லப்படும் போது, அந்த நாடு ஒரு பணக்கார நாடாக, வளமிக்க தேசமாக வளர்ந்து வருகிறது என்று பொதுவாக நினைக்கிறோம்.

ஆனால் அந்த வளர்ச்சிக்குப் பின்னே இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டிருக்கலாம். தற்பொழுதுள்ள தேசியக் கணக்கீட்டு முறையின் மூலம் நாட்டின் செல்வ மதிப்பு சரியாகக் கணக்கிடப்படுவதில்லை. செல்வ மதிப்பானது தேசிய அளவில் ஜிடிபியாகவும் (மொத்த உள்நாட்டு உற்பத்தி), நிறுவனங்கள் அளவில் இலாபமாகவும் அளவிடப்படுகிறது. ஆனால் ஜிடிபியில் - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் - மனித மூலதனம் (அறிவு மற்றும் திறன் பயிற்சி) கணக்கில் கொள்ளப்படுவதில்லை. காடுகளின் இழப்போ, நீர் மாசுபாடோ கணக்கில் கொள்ளப்படுவதில்லை. இது இயற்கை வளங்கள், இயற்கை மூலதனம் அழியக் காரணமாகிறது, இதனால் மக்களின் வறுமைநிலை மேலும் தீவிரமாகிறது. இந்தியாவில் ஏழைகளின் நல்வாழ்வுக்கு இயற்கைதான் அடிப்படையாக உள்ளது. அவர்கள் தங்களது பல்வேறு தேவைகளுக்காக இயற்கையைச் சார்ந்திருக்கிறார்கள். இந்தியாவில் கால்நடை வளர்ப்பையும், விவசாயத்தையும் நம்பி வாழ்பவர்கள் ஏராளம். காடுகளை இழந்தால் ஏழை விவசாயிகளின் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்காது. காடுகளை இழந்தால் அவர்களுடைய நிலங்களின் மண் வளமும், நீர் வளமும் குறைந்து விவசாயம் பாதிக்கப்படும். இதைப் பொருட்படுத்தாமல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பை (ஜிடிபி) அதிகரிப்பதற்காகக் காடுகளை அழிப்போமானால் அது இயற்கை வளங்களை நம்பி வாழும் ஏழைகளின் ஜிடிபியை அழிக்கிறது. தேசிய அளவில் பசுமைக் கணக்கீடு செய்ய வேண்டியது உடனடித் தேவையாக உள்ளது. இல்லையெனில், இந்தியா, அதன் ஜிடிபியை -மொத்த உள்நாட்டு உற்பத்தியை - அதிகமாக்கி வளர்ச்சியடைவதாகக் கருதி உண்மையில் ஏழைகளின் ஜிடிபியை - இயற்கை வளங்களை - அழித்து விடும் என்கிறார் பவன்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகமாக்கும் உத்திகளின் எதிர்மறை விளைவுகளைக் கவனத்தில் கொள்ளாதது மிகப் பெரிய சிக்கல்களைத் தோற்றுவிகிறது. இந்த சிக்கலைத் தீர்க்க, பவன் சுக்தேவ் சுற்றுச்சூழலியல் கணக்கீட்டு முறையை செயல்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு பசுமைக் கணக்கீட்டு முறையை (Green Accounting) உருவாக்கினார். இம்முறையில் ஒரு நாட்டின் செல்வத்தை அளவிடும் போது, அந்நாட்டின் இயற்கை வளங்களையும், பொருளாதார நடவடிக்கைகளால் இயற்கையில் ஏற்படும் எதிர்மறை, நேர்நிறை தாக்கங்களையும் உள்ளடக்கியவாறே மதிப்பிடப்படும். இந்த முறையை வளர்த்தெடுக்கும் போது, பவன் சுக்தேவ், பிற நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்றார். சுற்றுச்சூழலியல் பொருளாதாரத்தில்

முன்னோடியாக இருந்த டேவிட் பியர்ஸின் நூல்களைப் படித்த பவன், அவரை நேரில் சந்தித்து அவரது கருத்துகளைப் பெற்றார். பேராசிரியர் பியர்ஸ் சுக்தேவுக்கு ஆலோசனைகளை வழங்கினார். மற்றும் சுற்றுச்சூழலியல் பொருளாதாரத்தில் ஆர்வமுள்ளவர்களுடன் பவன் சுக்தேவை அறிமுகப்படுத்தினார். **டேவிட் பியர்ஸ், எட் பார்பியர், கார்ல்-கோரன் மாலர், பார்த்தா தாஸ்குப்தா, ஹெர்மன் டேலி ஆகியோரைத் தன் ஆசான்களாகக் குறிப்பிட்டுள்ளார் பவன்.**

**பசும் இந்திய மாநிலங்களுக்கான அறக்கட்டளை (GIST) :**

பவன் பசுமைக் கணக்கீட்டு முறையை இந்தியாவில் முதலில் செயல்படுத்த ஆரம்பித்தார். சுக்தேவ் தன் மூன்று நண்பர்களுடன் இணைந்து இந்தியாவில் பசுமைக் கணக்கீட்டு முறையைச் செயல்படுத்துவதற்கான ஆலோசனை வழங்கும் அறக்கட்டளையை (GIST) 2004இல் நிறுவி அதன் தலைமை நிர்வாக இயக்குநராக பவன் பணியாற்றி வருகிறார். .அது இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பசுமைக் கணக்கீட்டை அறிமுகப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட -இந்திய மாநிலங்களுக்கான பசுமை கணக்கீட்டுத் திட்டத்தை (GAISP) செயல்படுத்தும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். அது இயற்கை மூலதனத்திலும், மனித மூலதனத்திலும் ஏற்படுத்தப்படும் தாக்கங்களைக் கண்டறிந்து மதிப்பிடவும், நிர்வகிக்கவும், பசுமைக் கணக்கீட்டைச் செயல்படுத்தவும் அரசாங்கங்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி வருகிறது.

இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்திலும் கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது இயற்கை எந்த நிலையில் உள்ளது எனப் பசுமைக் கணக்கீட்டு முறையில் அவர் ஆய்வு செய்த போது அதிர்ச்சியூட்டும் உண்மை வெளிப்பட்டது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, சில மாகாணங்கள் அவற்றின் மொத்த ஜிடிபி - உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 10 முதல் 20% வரை வீழ்ச்சியடைந்திருந்தன. ஒவ்வொரு ஆண்டும் ஜிடிபி - மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 30% இழக்கும் ஒரு மாகாணமும் இருந்தது. இந்தியாவில் சூழலியல் பாதிப்புகளால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் குறித்து யாரும் ஆய்வு செய்யாததாலும், அது குறித்தப் புள்ளிவிவரங்களை வெளியிடாததாலும் அதன் முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. 2006இல், இந்திய உச்ச நீதிமன்றம் இந்தியாவில் காடுகளை அழிப்பதன் மூலம் ஏற்படும் இழப்பீட்டிற்கான மதிப்பைத் தீர்மானிக்க பவனின் பசுமைக் கணக்கீட்டு GIST மதிப்பைப் பயன்படுத்தி இயற்கை

வளங்களுக்கான இழப்பீட்டு மதிப்பை 5 மடங்காகவும், தேசியப் பூங்காக்களுக்கான இழப்பீட்டு மதிப்பை 10 மடங்காகவும் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

**சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பல்லுயிர்களின் பொருளாதாரத் திட்டத்தின் (TEEB) தலைவராக:**

2007இல் ஜெர்மனியின் போட்ஸ்டாமில் ஜி 8 + 5 கூட்டமைப்பில் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் உலகளவில் சுற்றுச்சூழல் அமைப்புகள் குறித்தும், பல்லுயிர் இழப்பு குறித்தும் ஆய்வு மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து விவாதித்தனர். கலந்துரையாடலின் விளைவாக சுற்றுச்சூழல் அமைப்புகளால் வழங்கப்படும் பரந்த அளவிலான நன்மைகளை மதிப்பீடு செய்யவும் அவற்றின் முக்கியத்துவத்தை சமூகம் அங்கீகரிக்கும் விதமாகச் சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்களின் பொருளாதார திட்டம் (TEEB) என்பதைத் தொடங்க முடிவு செய்தனர். ஜெர்மனியின் சுற்றுச்சூழல் அமைச்சர் சிக்மார் கேப்ரியலும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சுற்றுச்சூழலியல் ஆணையர் ஸ்டாவ்ரோஸ் டிமாஸும், இந்தத் திட்டத்திற்கான தலைவராக, இந்தியாவில் பசுமை கணக்கீட்டை செயல்படுத்துவதில் முனைப்புடன் பணியாற்றிய பவன் சுக்தேவை தேர்ந்தெடுத்தனர். ஒரு வங்கியாளராகத் தனது பணியை தொடர்ந்தவாறே இந்த தலைமைப் பொறுப்பையும் பவன் ஏற்று கொண்டார். "சுற்றுச்சூழல் அமைப்புகளாலும், பல்லுயிர் பெருக்கத்தினாலும் ஏற்படும் உலகளாவிய பொருளாதார நன்மைகள், பல்லுயிர் அழிவினால் ஏற்படும் இழப்புகள், அவற்றைப் பயனுள்ள முறையில் பாதுகாப்பதற்கு ஆகும் செலவுகள், அவற்றைப் பாதுகாக்கத் தவறும் போது ஏற்படும் இழப்புகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு செயல்முறை இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.

இன்றுள்ள நிலைமையை மாற்றுவதற்கும், நீடித்த பயன்பாட்டின் மூலம் இயற்கையைப் பாதுகாப்பதற்கும் பவன் தலைமையிலான டீப் (TEEB) குழுவினர் இயற்கையின் மதிப்பை நிர்ணயிக்கும் செயல்முறையை உருவாக்கினர். இயற்கையின் பொருளாதார மதிப்பு நேரடியாகக் கண்ணுக்குத் தெரிவதில்லை இயற்கையின் சேவைகள் அனைத்தையும் இலவசமாகப் பெறுகிறோம். அவை சந்தைப் பொருட்களாக இல்லாமல் அனைவருக்கும் பொதுவானவையாக உள்ளன. இயற்கையைப் பாதுகாக்கப் பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. மனிதர்கள் தாங்கள்

மதிப்பதையே பாதுகாக்கிறார்கள். இயற்கையைப் பாதுகாக்க மக்களுக்கு ஒரு காரணம் தேவைப்படுகிறது. இயற்கை நமக்களிக்கும் அளப்பரிய சேவைகளுக்கும், பொருட்களுக்கும் ஒருபோதும் பணம் கேட்பதில்லை. நாம் பொதுவாகப் பணம் செலவழித்துக் கட்டிய பாலங்களையோ தொழிற்சாலைகளையோ அழிப்பதில்லை, அவற்றை மதிக்கிறோம்; ஆனால் இயற்கையின் ஒப்பற்ற மதிப்பை நாம் அங்கீகரிக்கவில்லை, ஏனெனில் அது நமக்கு இலவசமாகக் கிடைக்கிறது. இயற்கை இவ்வளவு எளிதில் அழிய இதுதான் காரணம். இயற்கையின் பொருளாதார மதிப்பு கண்ணுக்குத் தெரியாததாக உள்ளது. இன்று சமூகத்தில் அனைத்துப் பொருட்களும், சேவைகளும் பணத்தால் மதிப்பிடப்படுகின்றன. அதனால் இயற்கை வளங்களுக்கும் பணத்தில் விலை நிர்ணயித்தால்தான் அவை சரியான முறையில் பராமரிக்கப்படும் என்பதே டீப் குழு முன்வைக்கும் வாதம்.

**டீப் ஆய்வின் மூலம், வறுமையானது சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிவுடனும், பல்லுயிர் இழப்புடனும் பிரிக்கமுடியாத வகையில் நெருங்கிய தொடர்பில் இருப்பது கண்டறியப்பட்டது. சுற்றுச்சூழல் அமைப்புகள் அளிக்கும் சேவைகளின் உடனடிப் பயனாளிகளாக பெரும்பாலான ஏழை மக்கள் உள்ளனர். அவற்றை அழிக்கும் போது உலகின் ஏழைகளின் வாழ்வாதாரத்திற்கான உரிமையும் மறுக்கப்படுகிறது.**

சுக்தேவ் தலைமையிலான 'டீப்' (TEEB) உறுப்பினர்கள் தங்கள் இடைக்கால அறிக்கையை சுவிட்சர்லாந்தின் பென் நகரில் நிகழ்ந்த உயிர்ப் பன்மையத்திற்கான மாநாட்டின் (CBD COP-9) 9ஆவது சந்திப்பில் முன்வைத்தனர். மிகவும் பயனுள்ளவை அனைத்துமே உயர் மதிப்பைப் பெறவில்லை (எ.கா: நீர்); அதிக மதிப்புள்ள அனைத்துமே மிகவும் பயனுள்ளதாக இல்லை (வைரம்) என்ற கூற்றுடன் தொடங்கும் அந்த அறிக்கை, இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் ஏற்பட்ட பொருளாதார இழப்பு குறித்த தகவல்களை விவரித்தது. பெருநகரங்களைப் பற்றிய அவர்களின் ஆய்வில் ஒவ்வோர் ஆண்டும் சூழலியல் பாதிப்புகளால் சுமார் 2 முதல் 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார இழப்பு ஏற்படுவது தெரிய வந்தது. இது 2008இல் பொருளாதார நெருக்கடியின் போது ஏற்பட்ட இழப்பின் மதிப்புக்குச் சமமானது என்றும், கடந்த சில பத்தாண்டுகளாக அந்தளவிற்கு ஒவ்வோர் ஆண்டும் சூழல் பாதிப்புகளால் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது என்றும் பவன் குறிப்பிட்டார். இந்தப் புள்ளிவிவரங்கள் இயற்கையின்

இழப்பை முன்னர் புரிந்து கொள்ளாதவர்களிடம் தாக்கம் ஏற்படுத்தியதுடன், இப்பிரச்சினையின் தீவிரத்தை உணர வைக்கவும் உதவியது. இந்த இடைக்கால அறிக்கையை முன்வைத்த பின்னர், வங்கியிலிருந்து இரண்டு வருடம் விடுப்பு எடுத்துக் கொண்டு TEEB செயல்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார் பவன். 2010இல் ஜப்பானின் நாகோயாவில் நடைபெற்ற உயிர்ப் பன்மையத்திற்கான மாநாட்டின் (CBD COP-10) 10ஆவது சந்திப்பில், பவன் தலைமையிலான டீப் குழு தங்கள் இறுதி அறிக்கையை முன்வைத்தனர். சமூகத்தில் எவ்விதமான முடிவுகளை எடுக்கும் போதும், செயல்பாடுகளில் ஈடுபடும் போதும் இயற்கையின் மதிப்பை அங்கீகரிக்கவும் மதிக்கவும் வேண்டும் என டீப் குழு வேண்டுகோள் விடுத்தது. உதாரணமாக, தேசிய அல்லது பிராந்திய அரசியலில் ஈடுபடும் நபர்கள், இயற்கையைப் பாதுகாக்கும் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். நிறுவனங்கள் உற்பத்தியின் போது இயற்கைக்குச் சேதமோ, அழிவோ ஏற்படாத வண்ணம் மேலாண்மை செய்ய வேண்டும். தனிநபர்களாகிய நாம் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை வாங்குவதன் மூலமும், தண்ணீரை வீணாக்குவதைத் தடுப்பதன் மூலமும் இயற்கையைப் பாதுகாப்பதில் பங்களிக்க முடியும். டீப் குழு ஒவ்வொரு நபரிடமும் இயற்கையைப் பாதுகாக்காமல் நீடித்த நிலையான வளர்ச்சியை அடைய முடியாது என்றும், இயற்கையை மதித்துப் பாதுகாப்பதே சமூகத்திற்கு நாம் செய்யக் கூடிய பங்களிப்பாகும் என்றும் கேட்டுக் கொண்டது.

(தொடரும்)

தோழர் தியாகுவின் அறிவுக்குரல் கேட்க
கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்

https:www.youtube.com/user/ajanthavalga?fbclid=IwAR0APppP9wjVctyVG1DShVLvQWRKtHOTuuR4g7zwwBeqLE-6zcuyiKZjxoQ

சமந்தா

# கியூபாவின் புரட்சிப் பெண்கள் (6)



## லிடியா எஸ்தர் டோஸ்

லிடியா எஸ்தர் டோஸ் 1916ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் நாள் ஹோல்குன் நகருக்கு அருகிலுள்ள மிர் எனும் வடகிழக்கு நகரில் பிறந்தார். தந்தை கிளாடியோ டோஸ் கோமேஸ் ஸ்பெயினில் உள்ள சாண்டாண்டரை சேர்ந்தவர். அவர் வெலாஸ்கோவைப் பூர்விகமாகக் கொண்ட தெரசா சான்செஸ் அவிலாவை 1912ஆம் ஆண்டின் இறுதியில் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளுக்கு பிறகுக் கடைக்குட்டியாக லிடியா பிறந்தார். வணிகத் தொழில் செய்து வந்த அவர் வணிகக் கூட்டாளரால் தாக்கப்பட்டு இறந்து போனார். லிடியாவின் தாயார் மறுமணம் செய்து கொண்டு போர்டோரிகோவின் சான் ஜெர்மானுக்குச் சென்று விட்டதால் மிர்ரில் உள்ள தன் மாமாவின் பராமரிப்பில் லிடியா வளர்ந்தார்.

லிடியாவால் 5ஆம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்தது, ஆனாலும் பள்ளி நிகழ்வுகள் அனைத்திலும் ஆர்வத்துடன் பங்கேற்றார். இசை, நடனம், நடிப்பு ஆகியவற்றில்

மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்தார். அவர் தையல் வேலைப்பாடுகளைக் கற்றிருந்தார். ஒரு நிபுணரைப் போலக் குதிரை சவாரி செய்தார்.

மிகவும் இளம் வயதிலே திருமணம் செய்து கொண்ட லிடியா கணவருடன் சான் ஜெர்மான் நகரத்திற்குக் குடிபெயர்ந்தார். பின்னர் கணவரை விவகாரத்து செய்து ஹவானாவுக்குச் சென்று, வீட்டுப் பணியாளராக வேலை பார்த்தவாறே தையல் வேலையும் செய்து வந்தார். அவரது மகன் எஸ்ட்ரென் கெரில்லாப் போராளியாகச் செயல்பட்டுக் கொல்லப்பட்டார் எனக் கேள்விப்பட்டு கிழக்கு மாகாணத்திற்கு விரைந்தார். அங்கே அது தவறான செய்தி என்பதை அறிந்து நிம்மதியடைந்தார். 1952 மார்ச் 10இல் லிடியா பாத்திஸ்டாவின் கொடுங்கோன்மைக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றார். தனது மகன் எஃப்ரான் கெரில்லாப் படைப்பிரிவில் சேர்ந்துள்ளான் என்பதை அறிந்ததும், தானும் அதே பாதையைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தார். அவர் தன் குழந்தைகள் அருகே இருக்க முடிவு செய்தார். யாவ் ஆற்றின் கரையருகே ஒரு வீட்டில், லிடியா கெரில்லாப் படைகளுக்கு உதவுவதற்கான தன் வேலைகளை தொடங்கினார். சீருடைகள் மற்றும் கொடிகள் தைத்தார். கிரான்மா படகு தரையிறங்கிய போது, லிடியா பொறுப்பும் முதிர்ச்சியும் மிக்க பெண்மணியாக இருந்தார்., சான் பப்லோ டி யாவோவில் அவர் புரட்சிப் படையில் இணைந்தார்.

லிடியா சியரா மேஸ்ட்ராவின் தூதராகச் செயல்பட்டார். பிடல் காஸ்ட்ரோவும் எர்னஸ்டோ சே குவேராவும் ஒப்படைத்த பல பணிகளைத் துணிச்சலுடன் நிறைவேற்றி அவர்களின் மிகுந்த நம்பிக்கைக்குரியவரானார். லிடியாவும் புரட்சியின் வெற்றியில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்.

லிடியாவை ஃபிடலும் சே குவேராவும் முக்கியமான ஆவணங்களுடன் சாண்டியாகோ மற்றும் ஹவானாவுக்கு அனுப்பினர். திரும்பும் பயணத்தில், அவர் போராளிப் படைகளுக்கான மருந்துகள், ஆயுதங்கள் மற்றும் பிற பொருட்களை எடுத்து வருவார். அவ்வாறு பயணம் மேற்கொள்ளும் போது அதிகாரிகளுக்குத் தன் மீது சந்தேகம் வராதவாறு நேர்த்தியாக உடை அணிந்து தலைமுடியின் நிறத்தை மாற்றி, கண்ணாடி அணிந்தவாறு செல்வார். "ஒரு கியூபப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையில் பாத்திஸ்டா படையினர் லிடியாவுடன் உரையாடலில் ஈடுபட்டால், எதுவும் நடக்காதது போலவும், உலக விசயங்களில் அக்கறை இல்லாதவர் போலவும் சிரித்தவாறே மணிக்கணக்கில் பேசவும் லிடியாவால் முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சே குவேராவின் கூற்றுப்படி, லிடியா புரட்சி படையில் சேர்ந்த அக்கணமுதலே உற்சாகமாகவும் குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்புடனும் பணிசெய்தார், அவரது துணிச்சல் வரம்பற்றது. லிடியா சமவெளிகளுக்கும் மலைகளுக்கும் இடையில் மிகவும் ஆபத்தான பணிகளை நிறைவேற்றினார். முக்கியச் செய்திகளை மலைகளுக்குக் கொண்டு வந்தார், கெரில்லா செய்தித்தாள் எல் கியூபானோ லிப்ரே, மருந்துகள் என்று உத்தரவிடப்பட்ட அனைத்தையும் எடுத்துச் சென்றார்.

சே குவேரா மற்றும் அவரது படையானது வேகாஸ் டி ஜிபாகோவாவுக்குச் சென்ற போது, 40 கெரில்லாக்களைக் கொண்ட அவரது துணை முகாமின் தலைவராக லிடியா நியமிக்கப்பட்டார், அவரது உறுதிமிக்க அமைதியான அணுகுமுறை, பெண்களின் ஆணையின் கீழ் செயல்பட பழகாத ஆண்களிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியது. அவரது செயலபாடுகள் சிலரிடம் பாராட்டுதலையும், சிலரிடம் வெறுப்பையும் பெற்றிருந்தது என்று சே குறிப்பிட்டுள்ளார். லிடியா சே குவேராவின் மரியாதைக்குரிய புரட்சிகர ஆளுமைகளில் ஒருவராக இருந்தார்.

லிடியா தனது சக போராளியும், சிறந்த நண்பருமான குளோடோமிரா அகோஸ்டா ஃபெரலுடன் ஒரு பணி நிமித்தமாக சியராவிலிருந்து ஹவானா சென்றார். ஏறக்குறைய இரண்டு வாரத்திற்குள் முடிக்க வேண்டிய முக்கியப் பணிகளுக்காக ஹவானா வந்து சேர்ந்த அந்த இரண்டு தூதர்களும் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஒரே இடத்தில் தங்கவில்லை. செப்டம்பர் 9 அன்று ஒரு தலைமறைவுப் போராளியின் வீட்டில் தங்கியிருந்த போது நள்ளிரவில் காவலாளிகள் போராளிகள் மீது திடீர்த் தாக்குதல் மேற்கொண்டனர். ஆல்பர்டோ அல்வாரெஸ் (21 வயது), லியோனார்டோ வால்டஸ் (23 வயது), ஒனெலியோ டாம்பியேல் (22 வயது), மற்றும் ரெனால்டோ குரூஸ் உட்பட 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். லிடியாவும் குளோடோமிராவும் வெளியே தள்ளப்பட்டுப் பின்னர் 11ஆவது காவல் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டனர். லிடியாவுக்கு அப்போது 42 வயது, குளோடோமிராவுக்கு 22 வயது. அவர்கள் சிறைப்படுத்தப்பட்டுக் கொடிய முறையில் சித்திரவதை செய்யப்பட்டனர். செப்டம்பர் 17, 1958 அன்று, பாத்திஸ்டாவின் காவல் படையினர் லிடியாவையும் குளோடோமிராவையும் கொலை செய்து அவர்களின் உடல்களைக் கடலில் வீசியெறிந்தனர்.

லிடியா கியூப மக்களின் நினைவில் துணிவுமிக்க கியூபாவின் வீர மகளாகத் திகழ்கிறார். அவரது வீடு இப்போது அருங்காட்சியகமாக உள்ளது.

## குளோடோமிரா அகோஸ்டா ஃபெரலெஸ்

குளோடோமிரா அகோஸ்டா ஃபெரலெஸ் 1936ஆம் ஆண்டில் பிப்ரவரி 1ஆம் நாள் மன்சானிலோவில் உள்ள கயல் எனும் கிராமத்தில் பிறந்தார். ஒன்பது வயதில் வீட்டு வேலை செய்வதற்காக வீட்டை விட்டு வெளியேறி நகரத்திற்குச் சென்ற குளோடோமிரா ஜூன் 1957இல் அவரது வீட்டிற்கு அருகே இராணுவத் தாக்குதல் ஏற்பட்ட போது, கிராமத்திற்குத் திரும்பி, போராளிகளுடன் இணைந்து செயல்படத் தொடங்கினார், அப்போது அவருக்கு இருபது வயது. போராளிப் படையில் முதலில் அவர் துணி துவைப்பது, தண்ணீர் கொண்டுசெல்வது ஆகிய வேலைகளையே செய்தார். அவரது நுண்ணறிவும், அர்ப்பணிப்பும் தலைவர்களின் கவனத்தை ஈர்த்தது, ஃபிடல் காஸ்ட்ரோவின் முதல் முன்னணிப் படையின் தூதராக அவர் நியமிக்கப்பட்டார்.

கியூப கிராமப்புறங்களின் தீவிர வறுமையில் பிறந்த பலரைப் போல அவரும் கல்வியறிவு பெறாத போதும், இயல்பிலேயே நுண்ணறிவு மிக்கவராகவும், சிக்கலான பணிகளைத் திறம்பட செய்து முடிப்பவராகவும் இருந்தார். மிகவும் விழிப்புடனும், சுறுசுறுப்பாகவும் செயல்படுமிறவராகவும் துணிவுமிக்கவராகவும் இருந்தார். கிளர்ச்சிப் போராட்டத்தின் போது சியரா மேஸ்ட்ராவுக்கும், சமவெளிகளில் செயல்படும் மற்றக் கிளர்ச்சிப் படைகளுக்கும் இணைப்பு ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றினார்.

அவரது சிறந்த நண்பரும் போராட்டத்தில் தோழருமான லிடியா டோஸைப் போலவே, ஃபிடல் காஸ்ட்ரோ, எர்னஸ்டோ சே குவேரா ஆகியோரின் முழு நம்பிக்கையையும் பெற்றிருந்தார். ஃபிடல் காஸ்ட்ரோ அவரிடம் ஒப்படைத்த நுட்பமான பணிகளை அவரால் திறம்படச் செய்ய முடிந்தது. ஜூலை 26 இயக்கத் தலைமையின் முழு நம்பிக்கையையும் அவர் பெற்றிருந்ததால், அடிக்கடி கிராமப்புறங்களுக்கும் நகரங்களுக்கும் சென்று பிற பகுதிகளில் செயல்படும் புரட்சியாளர்களுக்கு அறிவுறுத்தல்களை அனுப்பும் பணியை மேற்கொண்டார்.

வெளுத்துப் போன நிறத்துடன் மெலிந்தவராகவும் கூச்சமிக்கவராகவும் காணப்பட்ட போதும் தேவைப்படும் போது அசாத்தியத் துணிவுடன், மன உறுதியுடன் செயல்பட அவரால் முடிந்தது. இரண்டு சந்தர்ப்பங்களில், பாத்திஸ்டா படையினரால் சிறைப்படுத்தப்பட்டார், ஆனால் எதுவும் அவரது துணிச்சல்மிக்க பணியைத் தடுக்கவில்லை.

எஸ்காம்ப்ரேயில் என்ன நடக்கிறது, மக்கள் அங்கு எப்படி உள்ளனர் என அந்தப் பகுதியின் நிகழ்வுகளை அறிந்து கொள்வதில் ஃபிடல் ஆர்வமாக இருந்தார்; அதைத் தெரிந்து கொள்வது

மிகவும் அவசியமாக இருந்தது. அதற்கும் குளோடோமிராவையே அங்கு அனுப்பினார், அவர் அங்கு சென்று தேவையான தகவல்களுடன் திரும்பினார்.

1958 பிப்ரவரியில், எஸ்காம்ப்ரேயில் இடம்பெற்ற கெரில்லா தலைமையகத்தை குளோடோமிரா தொடர்பு கொள்ளுமாறு ஃபிடல் கேட்டுக் கொண்டார். பின், ஹவனாவில் இருந்த ஃபாஸ்டினோ பெரெஸுக்கு ஏப்ரல் 9 வேலைநிறுத்தம் தொடர்பான சில ஆவணங்களை வழங்க ஃபிடல், குளோடோமிராவை நியமித்தார். குளோடோமிரா பகைவர்களிடம் சிக்காமல் வெற்றிகரமாக அதைச் செய்து முடித்தார்.

மரியனா கிரஜெல்ஸ் என்ற பெண்களுக்கான ஆயுதப் படையை உருவாக்குவது குறித்துப் பேசப்பட்ட போது குளோடோமிரா அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். பிறகு தளபதி வேலை நிமித்தமாக அவரை ஹவானாவுக்குச் செல்லுமாறு பணித்த போது அம்மகிழ்ச்சி நீடிக்க வில்லை. அதை கவனித்த சிலர் அவர் பெண்கள் படைப்பிரிவைச் சேர்ந்தவர் தான் என்றும் ஹவானாவிலிருந்து திரும்பிய பின், அதில் இணையலாம் என்றும் உறுதியளித்தனர். ஆனால் ஃபாத்திஸ்டா படையினர் அவரது மகிழ்ச்சியை நிரந்தரமாக பறித்துக் கொண்டனர்.

"குளோடோமிரா புறப்படுவதற்கு முந்தைய நாள் இரவு, நார்மா ஃபெரர் அவரைப் பார்க்கச் சென்ற போது அவர் மிகவும் அழுதுள்ளார், ஏனெனில் அவர் சியராவிலேயே தங்கவே விரும்பினார். இருப்பினும், போராளிக்குரிய உறுதியுடன் அவர் மறுநாள், மிக சீக்கிரமே அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.

மரியானா கிரஜல்ஸ் உறுப்பினர்களில் ஒருவரான லிலியா ரியோ ரோட்ரிக்ஸ், ஒரு சந்தர்ப்பத்தில் கூறிய போது குளோடோமிரா அகோஸ்டா ஃபெரலெஸ் என்ற பெண்ணும் மரியானா கிரஜல்ஸில் இருந்தார். அவர் பணி நிமித்தமாக ஹவானாவுக்கு அனுப்பப்பட்ட போது அவரும் லிடியா டோஸ் சஞ்செஸ் என்பவரும் பிடிபட்டு சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

“வீரப்பெண். குளோடோமிரா ஒரு பணிவுமிக்க இளம் பெண், அளவுகடந்த புத்திசாலித்தனத்துடனும் துணிவுடனும் செயல்பட்டவர், அவரும் லிடியாவும் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர், ஆனால் கடைசி வரை எதிரியிடம் எந்த ரகசியத்தையும் வெளிப்படுத்தாமல், எதிரியிடம் ஒரு வார்த்தை கூட பேசாது உறுதியுடனும் இருந்தனர்.” என்று

குளோடோமிராவையும் லிடியாவையும் பற்றி ஃபிடல் குறிப்பிட்டுள்ளார்.

தளபதி சே குவேரா அவர்களை அவர்களை பற்றி பின்வருமாரு நினைவு கூர்ந்தார்:

அவர்களின் உடல்கள் மறைந்துவிட்டன, லிடியாவும் குளோடோமிராவும் தங்களது சுதந்திரத்திற்கான பெரும் போரின் கடைசி நாட்களில் ஒன்றாக போராடினார்கள். .

கிளர்ச்சி இராணுவத்திற்குள், அந்த வேதனையான நாட்களில் போராடி தியாகம் செய்தவர்களிடையே, அபாயகரமான அன்றாட பணிகளை செய்து தீவு முழுவதும் தகவல் தொடர்பை சாத்தியமாக்கிய அந்த பெண்களின் நினைவுகள் என்றென்றும் நம்முடன் வாழ்கின்றன.”

குளோடோமிராவின் அர்ப்பணிப்பையும், புரட்சிகர நடவடிக்கைகளை புரட்சிகர நடவடிக்கைகளையும் நினைவுகூரும் வகையில், கியூப பெண்கள் கூட்டமைப்பின் பல கட்டமைப்புகளுக்கும் இந்த வீரமிக்கப் பெண்ணின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

20 வயது வித்தியாசம் கொண்ட இரு வேறு ஆளுமைகளான லிடியாவும், குளோடோமிராவும் கொண்ட கொள்கையில் உறுதியாலும், அர்ப்பணிப்பாலும் ஒன்றுபட்ட தோழர்கள். இறப்பின் போதும் ஒன்றிணைந்த அத்தோழர்கள் கியூபப் புரட்சி வரலாற்றின் நினைவுச் சின்னமாக இறவாப் புகழ்பெற்றுள்ளனர்.

(தொடரும்)

**பெருந்தொற்றுக் காலம் பெருங்கொடுமைக் காலம்!**
**பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள்!**
**தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள்!**
**வறியோருக்கு எதிரான வன்கொடுமைகள்!**
**காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்**
**JAACT - TN**

**ஒருங்கிணைப்பாளர்:**
**தோழர் தியாகு, 8939154752.**

**செயலாளர்:**
**தோழர் மீ.த. பாண்டியன்,**
**9080427640.**

சமந்தா

## நக்வெய்ன் மார்க்சியப்பள்ளியில் (10):

ஆசிரியர்: **வெங்கடேஷ் ஆத்ரேயா**

## தலைப்பு: மதிப்பும் உபரி-மதிப்பும்

முதலாளித்துவம் அதற்கு முன்னிருந்த பொருளாதார அமைப்புகளின் சாம்பலிலிருந்தே உருவாக்கப்பட்டது. ரஜனி பாமிதத் இன்றைய இந்தியா என்ற தன் புத்தகத்தில் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 1857ல் இந்தியாவில் உள்நாட்டு தொழில்கள், முற்றிலுமாக அழித்தொழிக்கப்பட்டன. சிறு உற்பத்தியாளர்கள் நசிவடைந்தனர்.

முதலாளித்துவத்திற்கு முன்பிருந்த சமுதாய அமைப்புகளில் எளிய உற்பத்தி முறையில் குறைந்த அளவில் சரக்குற்பத்தி செய்யப்பட்ட போதிலும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் போதுதான் சரக்குற்பத்தி முழு வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது. கிட்டத்தட்ட அனைத்துப் பொருட்களுமே முதலாளித்துவத்தில் சரக்குகளாக்கப்படுகின்றன. எளிய சரக்குற்பத்தியை முதலாளித்துவச் சரக்குற்பத்தியிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் முக்கியமான பண்பு என்னவென்றால். முதலாளித்துவத்திற்கு முன்பிருந்த உற்பத்தி முறைகளில் உழைப்புச் சக்தியானது சரக்காக மாற்றப்படவில்லை. முதலாளித்துவத்தில்தான் உயிருள்ள உழைப்புச் சக்தியானது சரக்காக மாற்றப்பட்டுள்ளது.

எளிய உற்பத்தி முறையில் உற்பத்திச் சாதனங்களை உற்பத்தியாளார்களே உடைமையாகக் கொண்டிருந்தனர். தங்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களைப் பெறும் பொருட்டே, தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை சந்தையில் பரிவர்த்தனை செய்து கொண்டனர். சரக்குற்பத்தியானது பெருமளவில் நேரடி நுகர்வுக்காகவே செய்யப்பட்டது. எளிய உற்பத்தி முறையில் நடைபெறும் பரிவர்த்தனையில் (i) உற்பத்தியாளர் தன் சரக்கை விற்கிறார் அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ii) தனக்கு தேவையான இன்னொரு பொருளை வாங்கிக் கொள்கிறார்.முதல் கட்டத்தை ச-ப எனக் குறிப்பிடலாம், இதில் ச என்பது விற்கப்பட்ட சரக்கையும், ப என்பது அதன் மூலம் கிடைக்கும் பணத்தையும் குறிக்கிறது. இரண்டாம் கட்டத்தை ப-ச' என குறிப்பிடலாம்.இதில் ச' என்பது முதல் கட்டத்தில் கிடைத்த பணத்தை

கொண்டு வாங்கப்பட்ட புதிய சரக்கைக் குறிக்கிறது. எளிய உற்பத்திமுறையைக் குறிக்கும் இந்த சுற்றை ச-ப-ச’ என்று குறிப்பிடலாம்.

முதலாளித்துவ உற்பத்திமுறையின் சுற்று இதிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. எளிய சரக்குற்பத்தியின் சுற்று ச-ப-ச’. முதலாளித்துவ உற்பத்திமுறையின் சுற்று ப-ச-ப’ என்ற வடிவத்தில் உள்ளது.

பணத்துடன் தொடங்கிய முதலாளித்துவச் சுற்று அதை மீண்டும் பணமாகப் பெறவே ச- சரக்காக மாற்றப்படுகிறது. இந்தச் சுற்றின் செயல்பாடு பணத்தில் தொடங்கி பணத்தில் முடிவடைவதால் பயன்மதிப்பில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. ப-வைவிட ப’ அதிகமாக இருக்கவில்லை என்றால் இந்தச் சுற்று நடைபெறுவதில் எந்த அர்த்தமும் இல்லை. இந்தச் சுற்றானது நுகர்வுக்காக செய்யப்படாமல் பணம் ஈட்டி இலாபம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

ச-ப-ச’ சுற்றானது பயன்மதிப்புக்காகவும், நுகர்வுக்காகவும் செய்யப்படுகிறது. ஆனால் ப-ச-ப’ என்பது இலாபம் ஈட்டுவதையே, ப அளவிலான பணத்தை ப’ அளவிற்கு அதிகரிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. எளிய பொருளுற்பத்தி நுகர்வை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஒரு குறிப்பிட்ட அளவிற்குள் மட்டுமே செய்யப்பட்டது. முதலாளித்துவ உற்பத்தி முறை இலாபத்தை எல்லையில்லாமல் விரிவாக்கம் செய்வதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது. முதலாளித்துவத்தில் ப-ச-ப’ சுற்றே மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் ச-ப-ச’ சுற்று இல்லாமல் மறைந்து விடுவதில்லை. பிழைப்பிற்காகத் தன் உழைப்புச் சக்தியை விற்கும் பெரும்பான்மையான மக்கள் இச்சுற்றிலே ஈடுபடுகின்றனர். அவர்கள் தமது உழைப்புச் சக்தியை (ச) விற்று அதில் கிடைக்கும் பணத்தில் அத்தியாவசியமான பொருட்களை ( ச’ ) வாங்குகின்றனர்.

ப-ச-ப’ என்ற மூலதனச் சுற்றில் ஆரம்பப் பண மதிப்பை விரிவாக்கம் செய்வதே அதன் சாரமாக உள்ளது. ஒரு பொருளை மலிவாக வாங்கி அதிக விலைக்கு விற்கும் வணிக மூலதனமும், சரக்கு என்ற இடைநிலை வடிவத்தைச் சுற்றில் கொண்டு வராமல் பணத்தின்

மூலம் மேலும் அதிகப் பணத்தைப் பெறும் ப-ப' என்று குறியிடப்படும் வட்டிமூலதனமும், மூலதனத்தின் ஆரம்ப வடிவங்களாக இருந்தன. முதலாளித்துவத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுவது தொழில்துறை மூலதனமே. பண மதிப்பை எல்லையில்லாமல் விரிவாக்குவதை நோக்கமாகக் கொண்ட முதலாளித்துவ மூலதனச் சுற்றான ப-ச-ப' (பணம்-சரக்கு-பணம்') எனும் சுற்றில் உற்பத்தி மூலதனமானது ஒரு நேரத்தில் பணமாகவும், பிறகு சரக்கு வடிவிலும் காணப்படுகிறது. பணம், சரக்கு ஆகியவை மதிப்பின் வெவ்வேறு வடிவங்களாக உள்ளன. பணம் மதிப்பின் பொதுவான வடிவமாகவும், சரக்கு அதன் குறிப்பிட்ட வடிவமாகவும் உள்ளது.

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது ச-ப-ச' (சரக்கு-பணம்-சரக்கு') என்ற சுற்றைத் திருப்பிப் போட்டால் ப-ச-ப' பெறலாம், உபரி-மதிப்பு என்பது ப-ப' இடையிலான வேறுபாடே. ஆனால் ப-ச-ப' என்ற சுற்றில் மட்டும் எப்படி மதிப்பு விரிவாக்கம் அடைந்து கூடுதல் மதிப்பு - உபரி-மதிப்பு - கிடைக்கிறது. சரக்குகள் மதிப்பின் அடிப்படையிலே பரிவர்த்தனை செய்யப்படுகின்றன எனப் பார்த்திருந்தோம். சம மதிப்புடைய சரக்குகளிடையேயான பரிவர்த்தனை செய்யப்படும் போது உபரி-மதிப்பு உருவாக்கம் எவ்வாறு சாத்தியமாகிறது என்பது புதிராக இருந்தது.

உபரி-மதிப்பு வர்த்தகத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது என்று ஒரு வாதம் முன்வைக்கப்பட்டது. வர்த்தகத்தின் மூலம் மதிப்பு கூட்டப்படுவதால் பொருளை வாங்கும் நுகர்வோருக்கு அது அதிக மதிப்புடையதாக இருக்கிறது என்று கூறப்பட்டது. இன்னொரு வாதமாக பொருட்களை விலையை கூட்டி விற்பதன் மூலமும், குறைந்த விலைக்கு வாங்குவதன் மூலம் உபரி-மதிப்பு பெறப்படுவதாக கூறப்பட்டது. அவ்வாறு எல்லாப் பொருட்களும் அதிக விலைக்கு விற்கப்படுமானால், விற்பவராக ஒருவர் ஈட்டுவதை, வாங்குபவராக இழக்கும் நிலை ஏற்படுகிறது. எனவே எல்லாப் பரிவர்த்தனைகளையும் மொத்தமாகக் கணக்கில் கொண்டால் மதிப்பில் ஈட்டமோ, இழப்போ இல்லை. இதன் மூலம் தனி நபர் அளவிலோ, சமூக அளவிலோ உபரி-மதிப்பு எப்படி உருவாகிறது என்பதற்கான எந்த விளக்கமும் கிடைக்கவில்லை. 'எ' என்பவர் பொருளை அதன் மதிப்பைக் காட்டிலும் அதிக விலைக்கு சாதுரியமாக 'பி' என்பவரிடம் விற்கிறார் என்றும், 'பி' என்பவர் சரக்கின் மதிப்பிற்கே அதை 'ஏ'-யிடம் விற்கிறார் என்றும் வைத்துக் கொள்வோம். இதில் 'ஏ' ஆதாயமடைபவராகவும், 'பி' இழப்பவராகவும் உள்ளார். ஏ, பி ஆகிய இருவர் கொண்டிருக்கும் மதிப்பைச் சேர்த்து

பார்த்தால் மொத்த மதிப்பில் ஏற்றமோ இழப்போ இல்லை. இதன் மூலம் ‘ஏ’ என்ற தனி நபர் அடையும் உபரி-மதிப்பிற்கான விளக்கத்தைப் பெற முடிந்தாலும், சமூகத்தின் ஒட்டுமொத்த அளவில் உபரி எவ்வாறு உருவாகிறது என்பதை இது விளக்கவில்லை. இதில் நடந்தது என்னவென்றால் சுற்றோட்டத்தில் மொத்த மதிப்பின் விநியோகத்தில் மட்டுமே மாற்றம் ஏற்பட்டுள்ளது. ’ஏ’-க்கு அதிகமாகச் சென்றுள்ளது, பி-க்குக் குறைவாகச் சென்றுள்ளது. விநியோகத்தில் ஏற்படும் மாற்றத்தினால் மட்டுமே சுற்றோட்டத்தின் மொத்த மதிப்பு அதிகரிப்பதில்லை. சுற்றோட்டத்தின் மூலமோ, பரிவர்த்தனையின் மூலமோ புதிய மதிப்பு உருவாக்கப்படுவதில்லை. உபரி-மதிப்பு சுற்றோட்டத்தின் மூலம் பெறப்படுவதில்லை. அதே நேரத்தில் சுற்றோட்டம் இல்லாமல் வேறு சரக்குற்பத்தியாளர்களின் தொடர்பில்லாமல் சரக்குற்பத்தியாளர் மதிப்பை விரிவாக்கம் செய்து சரக்குகளை மூலதனமாக மாற்றவும் முடியாது என்பதால் ஒரே நேரத்தில் உபரி-மதிப்பு சுற்றோட்டத்தில் தோன்றாதது போலவும், தோன்றுவது போலவும் ஒரு முரண்பாட்டை தோற்றுவிக்கிறது.

இந்த முரண்பாட்டை ஆராய, உற்பத்தி மூலதனத்தின் சுற்றுக்குச் சென்று பார்ப்போம். ப-ச-ப’ என்ற உற்பத்தி மூலதன சுற்றை விரிவாக்கி ப-ச-உ-ச’-ப’ என்று குறிப்பிடலாம். இதில் ‘உ’ என்பது உற்பத்திச் செயல்முறையைக் குறிக்கிறது. பண மூலதனத்தைக் கொண்டு வாங்கிய உற்பத்திச் சாதனங்களை உற்பத்தியில் ஈடுபடுத்தி சரக்குற்பத்தி செய்து அதைச் சந்தையில் விற்றுப் பணமாக்குவதையே ப-ச-உ-ச’-ப’ குறிக்கிறது.

ப-ச-உ-ச’-ப’ என்ற உற்பத்தி மூலதனச் சுற்றில் ப-ச என்பதும் ச’-ப’ என்பதும் பரிவர்த்தனைகளையே குறிக்கிறது. ஆகையால் இந்த இரண்டு படிநிலைகளிலும் பரிவர்த்தனையின் போது மதிப்பில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் உற்பத்தி மூலதனச் சுற்றின் ச-உ-ச’ பகுதியில்தான் உபரி-மதிப்பின் மூலத்தைக் கண்டறிய வேண்டும்.

ப-ச என்பது ப-உ.ச மற்றும் ப-உ.சா ஆகிய இரண்டு கூறுகளை கொண்டுள்ளது. இதில் உ.ச என்பது உழைப்புச் சக்தியையும், உ.சா என்பது உற்பத்திச் சாதனங்களையும் குறிக்கும். . உழைப்புச் சக்தியை வாங்குவதற்கான மூலதனமானது மாறுமூலதனம் எனப்படுகிறது. நிலை மூலதனத்தை இறந்த உழைப்பாகவும், மாறு மூலதனத்தை உயிருள்ள மூலதனமாகவும் அழைக்கலாம்.

ப-உ.ச மற்றும் ப-உ.சா ஆகிய இரண்டுமே மதிப்பின் அடிப்படையில் 'சம' அளவிலான பரிவர்த்தனைகளைக் குறிப்பிடுவதால், ப-ப' என்று மதிப்பளவில் மாற்றம் பெறுவதற்கான மூலத்தை, உற்பத்திக்காக வாங்கப்பட்ட சரக்குகளின் பயன்மதிப்பிலிருந்தே கண்டறிய வேண்டும். ப என்ற ஆரம்ப மதிப்பை ப' என பெருக்கச் செய்யும் வித்தையை, தன் மதிப்பை காட்டிலும் அதிக மதிப்பை உருவாக்கும் பண்பைக் கொண்ட சரக்கில்தான் காண முடியும். உழைப்புச் சக்தியே இத்தகைய சிறப்பான பண்பைக் கொண்டிருக்கும் சரக்கு என்பதை மார்க்ஸ் கண்டறிந்தார். இங்கே மிகவும் முக்கியமானது 'உழைப்பு' என்பதற்கும் 'உழைப்பு சக்தி'என்பதற்கும் இடையிலான வேறுபாடு. ஒரு கூலித் தொழிலாளி முதலாளியிடம் நேரடியாக விற்பது உழைப்பை அல்ல, 'உழைப்பதற்கான திறனை' யே விற்கிறார் என வேறுபடுத்திக் காட்டினார் மார்க்ஸ்.

உழைப்புச் சக்தியின் நுகர்வானது மதிப்பை உருவாக்கும் உழைப்புச் செயல்முறை ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு உழைப்புச் சக்தியைப் பயன்படுத்தும் போது தன்னை மறுவுற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் மதிப்பைக் காட்டிலும் அதிக அளவில் மதிப்பை உருவாக்குகிறது. உழைப்புச் சக்தியின் பயன்மதிப்பு உபரி மதிப்பை உருவாக்கக் கூடிய பிரத்யேகப் பண்பைக் கொண்டுள்ளது.

ஊதிய ஒப்பந்தத்தின் மூலம், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குத் தொழிலாளியின் உழைக்கும் திறனை முதலாளி தன்வசப்படுத்துக்கிறார். தினசரி வேலை செய்யும் போது செலவாகும் இந்த உழைப்புத் திறனை உழைப்பாளி ஒவ்வொரு நாளும் உணவின் மூலமாகவும், ஓய்வு மற்றும் உறக்கத்தின் மூலமாகவும் மறுவுற்பத்தி (புதுப்பிக்கப்பட) செய்ய வேண்டும். தொழிலாளியிடம் உள்ள ஒரே 'சொத்து' இந்த உழைப்புச் சக்தி மட்டுமே, அதை விற்றால் ஒழிய அவரால் பிழைக்க முடியாது என்ற நிலையை முதலாளித்துவம் உருவாக்குவதாலே, உழைப்புச் சக்தி சரக்காக்கப்படுகிறது.

**உபரி மதிப்பின் ரகசியம்:**

தொழிலாளியின் மொத்த வேலை நேரத்தை விட அவரது உழைப்பு சக்தியை மறுவுற்பத்தி செய்யத் தேவையான மதிப்பானது (உழைப்பு நேரம்) குறைவாகவே உள்ளது.

உழைப்புச் சக்தியை மறுவுற்பத்தி செய்யத் தேவையான உழைப்பு நேரமானது அவசியமான உழைப்பு நேரம் என்றழைக்கப்படுகிறது. வேலை நேரம் பத்து மணி நேரம் என வைத்துக் கொள்வோம். தொழிலாளியின் சராசரியான தினசரித் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான உழைப்புச் சக்தியின் மதிப்பான அவசிய உழைப்பு நேரம், ஆறு மணி நேரமாக இருக்குமானால் கூடுதலாக அவர் நான்கு மணி நேரம் உழைப்பில் ஈடுபடும் போது உருவாக்கப்படும் மதிப்பை முதலாளி இலவசமாகத் தனதாக்கிக் கொள்கிறார். தொழிலாளி நான்கு மணி நேரம் ஊதியமற்ற உழைப்பில் ஈடுபடுகிறார். இவ்வாறு உழைப்புச் சக்தியை மறுவுற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரத்தைக் காட்டிலும் தொழிலாளி கூடுதலாக உழைக்கிறார். இந்த உபரி உழைப்பின் மூலமே தொழிலாளி உபரி மதிப்பை உருவாக்குகிறார். உழைப்புச் சுரண்டலின் மூலம் தொழிலாளியின் உபரி உழைப்பை, உபரி மதிப்பாக முதலாளி அபகரித்துக் கொள்கிறார். தொழிலாளியின் வேலை நேரத்தை கூடிய அளவு நீட்டிப்பதன் மூலம் உபரி மதிப்பானது பெருக்கப்பட்டது. இங்கிலாந்தில் சார்ட்டர் இயக்கம் வேலை நேரத்தைப் பத்து மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்று தொடர்ந்து போராடியது. முதலாளித்துவமானது ஆணாதிக்கச் சமூகத்தின் சமமின்மையையும், ஏற்றத்தாழ்வையும், பாலின அடிப்படையிலான உழைப்புப் பிரிவினையையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பெண்களையும், , குழந்தைகளையும் மலிவான உழைப்புச் சக்தியாக்கிக் கொண்டது.

உழைப்புச் சுரண்டலின் வடிவமானது முன்-முதலாளித்துவப் பொருளாதாரத்தில், முதலாளித்துவச் சமூகத்தில் காணப்படுவது போல் மர்மமாக இல்லை. அதில் உழைப்புச் சுரண்டல் நேரடியாக வெளிப்பட்டது. விவசாயி தனது நிலத்தில் மூன்று நாள் வேலை பார்ப்பார். பண்ணையார் நிலத்தில் மூன்று நாள் வேலை பார்ப்பார். ஒரு நாள் கடவுளுக்காக உழைப்பார். நவீன மூலதனம் சாதுரியமாக சுரண்டலை மறைத்துள்ளது. காகித அளவில் மட்டுமே முதலாளியும், தொழிலாளியும் சம தகுநிலை பெற முடியும்.

**பயன் மதிப்பின் உற்பத்தியாக உழைப்பு செயல்முறை:**

உழைப்புச் செயல்முறையில் மனிதர்கள் இயற்கையுடன் செயலாற்றுகின்றனர். இந்தச் செயல்முறையில் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை மாற்றுவதன் மூலம் மனிதன் தானே மாற்றத்துக்குட்படுகிறான். உழைப்பு நிகழ்வில் மனிதர் உணர்வுபூர்வமாக சமூகப் பயனுள்ள

செயல்பாட்டில் ஈடுபடுகிறார். ஆனால் முதலாளித்துவத்தில் தொழிலாளியின் உணர்வுபூர்வமான செயல்பாடும், படைப்பாக்கத் திறனும் அழிக்கப்படுகிறது. முதலாளித்துவ உழைப்பு முறையில், முதலாளி அல்லது மேற்பார்வையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழே தொழிலாளி உழைப்பில் ஈடுபடுகிறார். உற்பத்தியில் ஈடுபடும் உழைப்பாளி தன் உழைப்புச் செயல்முறையின் தன்மையோ, அதன் விளைவோ, எவ்வாறு இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கும் ஆற்றலை இழந்து விடுகிறார். அவர் என்ன உற்பத்தி செய்ய வேண்டும், எப்படி உற்பத்தி செய்யவேண்டும் என உழைப்புச் செயல்முறை முழுவதையுமே முதலாளியே தீர்மானிக்கிறார். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் அவற்றை உற்பத்தி செய்த தொழிலாளிக்கு கிடைப்பதில்லை, அவை முதலாளியின் உடைமையாக்கப்படுகிறது என்பதால் முதலாளித்துவ உழைப்புச் செயல்முறையில் தொழிலாளரின் அயன்மைப்பாடு இரட்டைத்தன்மை பெற்றுள்ளது. முதலாவதாக அவர் உழைப்புச் செயல்முறையிலிருந்து அந்நியப்படுத்தப்படுகிறார், அவரது உழைப்புச் செயல்முறையைத் தீர்மானிக்கும், கட்டுப்படுத்தும் அதிகாரம் முதலாளியிடம் உள்ளது. அதே நேரத்தில் தான் உற்பத்தி செய்த பொருளிலிருந்தும் தொழிலாளி அந்நியப்படுத்தப்படுகிறார்.

உற்பத்திச் செயல்முறையில் தொழிலாளர் ஆற்றும் பங்கும் மூலப்பொருட்கள் மற்றும் எந்திரங்கள் ஆற்றும் பங்கும் ஒரே தன்மையுடையன என்று முதலாளித்துவப் பொருளாதாரவியலாளர்கள் கருதுகிறார்கள். மார்க்சின் பார்வையில் தொழிலாளியின் உழைப்பே உழைப்புச் செயல்முறையில் செயல்முனைப்பான பங்கு வகிக்கிறது. அவரது உழைப்புச் செயல்முறை பொருளில் நிலைத்த பண்பாக இறுகலாக்கப்படுகிறது. பயனுள்ள மனித உழைப்பு இல்லையென்றால், உழைப்புக் கருவிகள் துருவேறி விடும், இயற்கை அளிக்கும் மூலப்பொருட்களும் அழிந்து போகும். அவற்றில் சாத்தியமாகத் தென்படும் பயன்மதிப்பை உண்மையாக்குவது தொழிலாளியின் உயிருள்ள உழைப்பே என்கிறார் மார்க்ஸ்.

முதலாளித்துவ உற்பத்தி முறை பயன்மதிப்பை உற்பத்தி செய்வதை மட்டுமில்லாமல் மதிப்பையும் உபரி மதிப்பையும் உற்பத்தி செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. உற்பத்திக் கருவிகளும் மூலப்பொருட்களும் அவற்றை உற்பத்தி செய்யத் தேவையான சமூக அளவிலான சராசரி உழைப்பு நேரத்துக்குச் சமமான மதிப்புடனே உழைப்புச் செயல்முறையில் பங்கேற்கின்றன. அவற்றில் மறைமுக உழைப்பு பொதிந்துள்ளது. மதிப்பை உருவாக்கும்

உற்பத்திச் செயல்முறையில் உழைப்பு நிகழ்முறைக்குள் வரும் மூலப்பொருட்களை, தொழிலாளி தன் உழைப்பின் மூலம் பயன்மதிப்புடைய வேறொரு பொருளாக மாற்றுகிறார். அதற்கு உற்பத்திக் கருவிகளைப் பயன்படுத்துகிறார். அதன் மூலம் உற்பத்திக் கருவியின் மதிப்பில் ஒரு பகுதியானது பொருளுக்கு மாற்றப்படுகிறது. இந்த உழைப்புச் செயல்முறையில் மூலப்பொருளோ, எந்திரங்களோ புதிய மதிப்பு உருவாக்கத்தில் பங்கேற்பதில்லை. மாறாக உழைப்பு செயல்முறையின் செயல் முனைப்பான பாத்திரம் வகிக்கும் தொழிலாளரின் உயிருள்ள உழைப்பானது மூன்று வேலைகளை செய்கிறது. i) உற்பத்தி செய்யப்பட்ட பொருளில் மூலப்பொருட்களின் மதிப்பைத் தக்கவைத்து, மதிப்பிழப்பு ஏற்படாத வகையில் அதைப் பாதுகாக்கிறது. (ii) உற்பத்தி எந்திரத்தின் மதிப்பின் ஒரு பகுதியைச் சரக்கிற்கு மாற்றுகிறது. iii) தன் நேரடி உழைப்பால் பொருளுக்கு புதிய மதிப்பைச் சேர்க்கிறது.

சரக்குற்பத்தியில் உபரி-மதிப்பு உருவாக்கப்படுவதற்கு குறிப்பிட்ட வரலாற்று முன் நிபந்தனைகள் தேவைப்படுகின்றன. வரலாற்றின் வெவ்வேறு காலகட்டத்தில் அமைந்த பல்வேறு சமூக அமைப்புகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட அளவில் சரக்குற்பத்தி செய்வது அவற்றில் பொதுவாக காணப்படும் பண்பாக உள்ளது. பணச் சுற்றோட்டத்தின் வளர்ச்சியும், சரக்குற்பத்தியும் மட்டுமே முதலாளித்துவ உற்பத்தி முறை உருவாவதற்கான முன் நிபந்தனைகளாக இருக்கவில்லை. சமூக அளவில் பணத்திலிருந்து தன்னைத் தானே பெருக்கி அபிவிருத்தி செய்து கொள்ளும் மூலதனம் உருவாக வேண்டுமானால் உழைப்புச் சக்தி உழைப்பாளியால் விற்கக் கூடியதாகவும், முதலாளியால் வாங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். தொழிலாளர் உருவாவது இரண்டு முன் நிபந்தனைகளைக் கொண்டுள்ளது. தொழிலாளி தனது உழைப்புச் சக்தியைத் தன் விருப்பம் போல் தானே விற்கக் கூடியவராக இருந்து அதைத் தன் தனியுடைமையாகக் கொண்டிருக்க வேண்டும். அவர் அடிமையாகவோ, நிலத்துடன் கட்டுண்டவராகவோ இருக்கக் கூடாது, இன்னொன்று அவர் உற்பத்தி சாதனங்களை உடைமையாளராக இருந்து தன்னிச்சையான முறையில் சரக்குற்பத்தியில் ஈடுபடுபவராக இருக்கக் கூடாது. உழைப்புச் சக்தியை விற்பதன் மூலமே அவரால் பிழைக்க முடியும் என்ற நிலையில் இருக்க வேண்டும்.

பணத்தின் உடைமையாளர் தன் பணத்தை மூலதனமாக மாற்றுவதற்காக, சந்தையில் விடுமை பெற்ற தொழிலாளியைச் சந்திக்க வேண்டும். இங்கே விடுமை என்பது இரட்டைத்

தன்மை கொண்டது, ஒன்று தொழிலாளி தன் உழைப்புச்சக்தியைத் தானே விற்கக் கூடிய சுதந்திரம் பெற்றவர், அதே நேரத்தில் அவர் உடைமையிலிருந்தும் சுதந்திரம் பெற்றவர், தன் உழைப்புச்சக்தியைத் தவிர விற்பதற்கு அவரிடம் ஒன்றுமில்லை. ஆகவே முதலாளித்துவ உற்பத்தி முறை உருவாவதற்கு ஒரு புலத்தில் பணமுடையவரும், உற்பத்தி சாதனங்களும், மறு புலத்தில் உழைப்புச் சக்தியைத் தவிர வேறு உடைமையற்ற தொழிலாளர்களும் பிரிந்திருக்க வேண்டும். செல்வத்தை ஒரு முனையிலும், வறுமையை மறு முனையிலும் குவிப்பது முதலாளித்துவத்தின் பொதுவிதியாக உள்ளது.

இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வான சமூக உறவானது இயற்கையில் உருவாக்கப்பட்டதல்ல, வரலாற்றின் வெவ்வேறு காலகட்டத்தில் இருந்த சமூக அமைப்புகளுக்குப் பொதுவானதும் அல்ல. முதலாளித்துவ உற்பத்தி முறையானது அதற்கு முன்னிருந்த உற்பத்தி முறைகளைப் போலவே தற்காலிகமானதும், அதை விட மேம்பட்ட உற்பத்தி முறையால் பதிலீடு செய்யப்படக் கூடியதும் ஆகும். உற்பத்திச் செயல்முறையில் நிலத்தை உண்ணாமல் இருப்பது மட்டுமே நிலக்கிழாரின் பங்களிப்பு. உற்பத்திச் செயல்முறையில் முதலாளியின் பங்களிப்பு அவர் மூலதனத்தை உண்ணாமல் தாமதப்படுத்துகிறார் அல்லவா, அதுவே. குறைந்தபட்சம் மூலதனம் அவரது சொந்தப் பணமாக இருக்குமானால் கூட இப்படிச் சொல்வதில் ஏதேனும் நியாயமிருக்கும். முதலாளி வர்க்கம் இருப்பதற்கு இன்று எந்தத் தேவையும் இல்லை. நவீனப் பொருளாதாரம் முதலாளி வர்க்கம் இல்லாமலே சிறப்பாக இயங்க முடியும்.

உங்களை விட அதிக ஊதியம் அல்லது வருவாய் பெறுபவரோ, அல்லது உங்கள் பகுதியில் இருக்கும் சிறு வணிகரோ உங்கள் வர்க்க எதிரி அல்ல. சிறு உற்பத்தியாளர்களையும் சிறு விவசாயிகளையும் ஒருபோதும் கைவிடக் கூடாது. வரலாற்று ரீதியாக அனைத்தும் போராட்டத்தின் மூலமே வெல்லப்பட்டது.

(தொடரும்)

சமந்தா

## டாலருக்கு வந்த வாழ்வு (5)

## வரவு நாலணா செலவு பத்தணா!

வரவு நாலணா செலவு பத்தணா! இதுதான் அமெரிக்காவின் நிதி நிலைமை.

அமெரிக்காவில் கடனும், நுகர்வும்தான் வளர்ந்து வருகின்றன. ஒரு காலத்தில் தொழில்துறை வளர்ச்சியில் மேம்பட்ட அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கு இப்போது தீனி போடுவது வளர்ந்து வரும் நுகர்வும் கடனும்தான். மிக உயர்ந்த உற்பத்தித் திறனைக் கொண்டிருந்த நாடு, கடனட்டைக் கலாசாரத்துடன் 'ஷாப்பிங்' பொருளாதாரமாக மாறியது. அமெரிக்க நுகர்வோர் வருவாயைக் காட்டிலும் கடனிலிருந்தே அதிகம் செலவு செய்கிறார்கள். கடனை அடிப்படையாகக் கொண்ட திறனற்ற நுகர்வே அமெரிக்காவை இயக்கி வருகிறது. அமெரிக்காவின் மொத்த ஜிடிபி மதிப்பில் நுகர்வோர் செலவினம் கிட்டத்தட்ட 70% பங்களிக்கிறது. அமெரிக்காவில் நுகர்வுக் கலாச்சாரம் எந்தளவுக்கு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது என்று பார்த்தோமானால், அங்கு கடன் வாங்குவது பணம் ஈட்டுவதற்கு இணையாகக் கருதப்படுகிறது. திறனற்ற நுகர்வானது உற்பத்திக்கு இணையாகக் கருதப்படுகிறது. அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கடனே என்று கருதும் நிலை காணப்படுகிறது.

அது என்ன திறனற்ற நுகர்வு, திறனுள்ள நுகர்வு? பொருளாதார அடிப்படையில் ஒரு தொழிலாளியின் நுகர்வு திறனுள்ள நுகர்வு, ஏனென்றால் அவர் உண்ட உணவின் மூலம் பெற்ற ஆற்றலைச் சமூகப் பயனுள்ள உழைப்பில் ஈடுபடுத்தி சரக்குப் பொருட்களை உற்பத்தி செய்கிறார். ஆனால் எந்தவிதமான உழைப்பிலும் ஈடுபடாத மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் சாப்பிட்டு விட்டுத் தூங்குவதும், வீணாகப் பொழுதைக் கழிப்பதுமாக இருப்பாரானால் அவருடையது திறனற்ற நுகர்வு. அமெரிக்கா திறனற்ற நுகர்வுப் பொருளாதாரமாக மாறியுள்ளது. இப்படிச் சொல்வதனால் அமெரிக்கர்கள் அனைவரும் ஊதாரிகள் என்றோ, உழைப்பில் ஈடுபடவில்லை என்றோ தவறாகக் கருதக் கூடாது. அமெரிக்காவில் உள்ள உழைக்கும் மக்கள் மற்ற நாடுகளைக் காட்டிலும் நீண்ட நேரத்திற்கு உழைப்பில் ஈடுபடுகிறார்கள், 2016 புளூம்பெர்க் அறிக்கை சராசரி அமெரிக்கர் ஐரோப்பியரை விட 25% அதிக நேரம் உழைப்பில் ஈடுபடுகிறார் என்று காட்டுகிறது. ஆனால் அதற்கு இணையாக ஊதிய உயர்வு பெறவில்லை, அமெரிக்காவில் கூலிவீதம் சரிந்து வருகிறது. 1970இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் (ஜிடிபி) 51.6%ஆக

இருந்த கூலிவீதம் 2018இல் அதிகரிக்காமல் 43.2%ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறு அமெரிக்க அரசு அவர்களைக் கடன் வாங்கிச் செலவு செய்யும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

அமெரிக்கா, ஐக்கிய முடியரசு போன்ற வளர்ந்த நாடுகள் தங்களது நாட்டின் பொருளாதாரத்தில் தொழில்துறை உற்பத்தியை மேம்படுத்துவதை விட்டு விலகி சேவைத் துறைப் பொருளாதாரமாக மாறி வருகின்றன. தொழில்துறை வளர்ச்சியடைந்த நாடுகளின் இயல்பான அடுத்தகட்ட வளர்ச்சி நிலையே சேவைத்துறை பொருளாதாரம் எனவும் இந்த காலகட்டத்தை பின்-தொழில்துறை பொருளாதாரமாகவும் (post-industrial economy) முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்கள் வர்ணித்துப் போற்றுகிறார்கள். வளர்ந்த நாடுகள் பொருளாக்க உற்பத்தி வேலைகளை மூன்றாம் உலக நாடுகளிடம் விட்டு விட்டு நிதி மூலதனச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. எளிமையாகச் சொல்வோமானால், வளர்ந்த நாடுகள் கந்து வட்டி நிறுவனங்களாகச் செயல்படவே விரும்புகின்றன. உலகின் தொழிற்சாலைகளாக மூன்றாம் உலக நாடுகளையே செயல்படுத்த விரும்புகின்றன. ஏன் இப்படி என்று பார்த்தோமானால் மூலதனம் வளர வளர இலாப வீதம் குறையும் போக்கு (TRPF) என்று கார்ல் மார்க்ஸ் கண்டறிந்த பொருளாதார நெறியே இதற்கு அடிப்படையாக செயல்படுவதைக் காணமுடியும். மூலதன வளர்ச்சி/முதிர்வு என்பது அளவின் அடிப்படையிலான வளர்ச்சியை மட்டுமல்லாது பண்பளவிலான வளர்ச்சியையும் குறிக்கிறது. மூலதனம் இரண்டு கூறுகளை கொண்டுள்ளது, ஒன்று உற்பத்திச் சாதனங்களுக்குத் தேவையான நிலை மூலதனம் (constant capital), இன்னொன்று உழைப்பாளர்களின் உழைப்புச் சக்தியைக் கூலி கொடுத்து வாங்கத் தேவையான மாறு மூலதனம் (variable capital). உற்பத்திச் செயல்பாடுகளில் இலாபத்துக்கு அடிப்படையாக உள்ள உபரி மதிப்பானது மாறுமூலதனத்திலிருந்தே பெறப்படுகிறது. என்பதால் மூலதன வளர்ச்சியின் போது உற்பத்தி சாதனங்களில் செய்யப்படும் மூலதனத்தின் அளவானது கூலிக்கான மாறுமூலதனத்தைக் காட்டிலும் பெருமளவு அதிகரிப்பதால் உபரி-மதிப்பும், லாபவீதமும் குறைகிறது. நிலை மூலதனத்திற்கும் மாறுமூலதனத்திற்குமான விகிதம் மூலதனத்தின் அங்கக இயைபு(organic composition of capital) என்று அழைக்கப்படுகிறது. மூலதனத்தின் அங்கக இயைபு அதிகரிக்க, அதிகரிக்க, லாபவீதம் குறையும் போக்கு ஏற்படும் என்கிறார் கார்ல்மார்க்ஸ் பொருளாதாரத் தரவுகளும் அதை உண்மை என நிரூபித்துள்ளன.

வளர்ந்த நாடுகளில், மூலதன வளர்ச்சியானது முதிர்வு நிலையில் உள்ளதால் உற்பத்தி செயல்பாடுகளுக்கு லாபவீதம் குறையும் போக்கு காணப்படுகிறது. 1960-70களில் வளர்ந்த

நாடுகளில் காணப்பட்ட லாபவீதம் அதற்கு பின் வெகுவாக குறைந்துள்ளது. வளர்ந்த நாடுகளின் மூலதனம் மேலும் வளரவேண்டுமானால் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும்.அதற்கு இன்னும் அதிக முதலீடுகள் அவசியம் என்றாலும் அதை அதிலாபகரமாக செயல்படுத்தமுடியுமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. தொழிலாளியின் ஊதியமற்ற உழைப்பே லாபமாகிறது. ஆகையால் தொழில்நுட்பத்தின் மூலம் தொழிலாளியை பதிலீடு செய்யும் போது லாபவீதம் குறைகிறது. ரொபோக்களின்-இயந்திர மனிதர்களின் உழைப்பை சுரண்ட முடியாது என்பதால், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (artificial intelligence) ஒட்டு மொத்த சமூகத்திற்கும் பெரும் பயன்பாடுடையதாக இருக்கலாம், ஆனால் தொழிலாளர்களை முற்றிலுமாக தொழில்நுட்பங்களால் மாற்றீடு செய்யும் போது லாபத்திற்கான அடிப்படை இல்லாமல் போகிறது. முதலாளித்துவத்தின் சுவாசக் காற்றாகவும், ரத்தமாகவும் லாபமே இருப்பதால் லாபம் பெற்றுத்தராத எந்தத் தொழில் மேம்பாட்டிலும் அவர்களுக்கு ஆர்வம் இல்லை. வளர்ந்த நாடுகளில் லாபவீதம் குறைந்தால் என்ன, இருக்கவே இருக்கிறது மூன்றாம் உலக நாடுகள், வளர்ந்த நாடுகளில் இருப்பதைக் காட்டிலும் கடுமையான உழைப்புச் சுரண்டலின் மூலமும், அடிமட்ட கூலியின் மூலமும், அங்கு இன்னும் அதிக லாபகரமாக உற்பத்தி செய்யமுடியும் என்பதால் வளர்ந்த நாடுகள் உற்பத்தி துறைகளில் முதலீடு செய்யாமல், எளிதாக வட்டியை பெற்று தரும் நிதிமூலதனத்தின் மூலம் லாபம் பெறவே விரும்புகின்றன.

அமெரிக்காவில் உற்பத்தித்துறை உயர்ந்த ஊதியத்தை அளித்து வந்தது, ஆனால் பொருளாதாரத்தில் இப்பொழுது உற்பத்தித்துறையின் பங்கு குறைக்கப்பட்டதால், பெருமளவு தொழிற்சாலைகள் மூடப்பட்டு குறைந்த ஊதியம் அளிக்கும் சேவைத்துறை வேலை வாய்ப்புகளையே அளிக்கும் நிலை காணப்படுகிறது. 1960 களில் 25%ஆக இருந்த உற்பத்தித் துறையின் பொருளாக்க மதிப்பு 2019ல் 11.39% ஆக சுருங்கியுள்ளது. இதனால் மொத்த வருமானமும், உற்பத்தித் துறை வாயிலாக வளரும் ஏற்றுமதியையும் குறைந்துள்ளது. பெருமளவில் இறக்குமதியை நம்பியுள்ள நிலை ஏற்பட்டு வெளிநாட்டுக்கடன்களும் இதனால் அதிகரித்துள்ளது.

மூன்றாம் உலக நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கு அந்நிய முதலீடுகளையே நம்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் அமெரிக்கா தான் வெளிநாட்டு முதலீடுகளை சார்ந்திருந்தும் அதன் அடிமையாக இல்லாமல் அதன் முதலாளியாக ஆட்டிப்

படைக்கிறது. அமெரிக்க டாலருக்கு உலகப் பணம் என்ற தகுநிலை பெற்றதால்,உலகெங்கிலிருந்தும் டாலரில் குவியும் அந்நிய மூலதனமும், தலைமை வங்கி தன் போக்கிற்கு டாலரை அச்சடிப்பதாலும், அமெரிக்கர்களுக்கு மலிவுக்கடன் எளிதில் கிடைக்கிறது. மலிவுக்கடனால் அவர்கள் நுகர்வுக் கலாச்சாரத்திற்கு அடிமையாகி விட்டனர். தனிநபரில் தொடங்கி மத்திய அரசு வரை ஒட்டு மொத்த அமெரிக்காவின் கடன் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கடன் என்பதும் ஒரு நுகர்வு தான், கடன் வாங்குவது மட்டுமே பிரச்சனை இல்லை. அந்தக் கடன் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதில் தான் பிரச்சினை உள்ளது. கடன் திறனுள்ள முறையில் உற்பத்தித் துறையில் ஈடுபடுத்தப்படுமானால் புதிய பொருளாக்கம் செய்யப்பட்டு வளர்ச்சி ஏற்படும், ஆனால் கடனானது வெறும் செலவுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு ஆக்கவேலைகளில் ஈடுபடுத்தப்படவில்லை என்றால் தான் பிரச்சனை. அமெரிக்காவுக்கு மலிவுக்கடன் கிடைத்தும் அவை திறனுள்ள முதலீடுகளாக உற்பத்தித்துறையில் செயல்படுத்தப்படுவதில்லை,அதை தொழில் நுட்ப வளர்ச்சியை மேம்படுத்தப் பயன்படுத்தப்படுவதில்லை. மலிவுக் கடன் பெருமளவில் தனி நபர் நுகர்வை ஊக்குவிக்கவும், ஊக முதலீடுகளை அதிகரித்து, சொத்துக் குமிழிகளை ஊக்குவிக்கவுமே பயன்படுத்தப்படுகிறது.

பொருளாதாரத்தில் உண்மையான வளர்ச்சி ஏற்படுமானால் மக்களின் சேமிப்பும், பொதுத்துறை முதலீடுகளும், பொருளாக்கமும் அதிகரிக்கும். ஆனால் இன்றைய சந்தைப் பொருளாதாரத்தின் நவீன தாராளமயப் பணக் கொள்கையும், நிதிக் கொள்கையும், கடன் குமிழிகளின் மூலமே பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகிறது. உலகம் முழுவதும் இதே நிலைதான் காணப்படுகிறது. இது உண்மையான நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவதில்லை, வளர்ச்சி ஏற்படுவது போன்ற மாயையையே தற்காலிகமாக ஏற்படுத்துகிறது. ஆனால் உண்மையில் அதன் மூலம் மக்களின் சேமிப்புகளும், வாழ்க்கைத் தரமும் வீழும் நிலையையே ஏற்படுத்தியுள்ளது.

குமிழி என்பது ஒரு பொருளாதார சுழற்சியாகும், எப்படி சோப்புக் குமிழி ஊத ஊதப் பெரிதாகி ஒரு கட்டத்திற்கு மேல் உடைகிறதோ, அதே போல், ஒரு சொத்து அல்லது பங்குகள், பத்திரங்கள், ரியல் எஸ்டேட் அல்லது சரக்குகளின் விலையானது அதன் உள்ளார்ந்த மதிப்பைக் காட்டிலும் பல மடங்கு உயர்கிறது, அதனால் அவற்றில் முதலீடு செய்யும் போக்கு

அதிகரிக்கிறது இது மேலும் விலையேற்றத்தை ஏற்படுத்தி அவற்றின் மதிப்பு அசுர வேகத்தில் ஊதிப் பெருக்கப்படுகிறது, ஆனால் இது நீடிப்பதில்லை, ஒரு கட்டத்திற்கு மேல் முதலீட்டாளர்கள் உயர்ந்த விலையில் வாங்கத் தயாராக இல்லாத போது, விலை வீழ்வதால் அவற்றில் முதலீடு செய்தவர்கள் வெளியேறுகிறார்கள், இது மேலும் விலையிறக்கத்தை ஏற்படுத்துகிறது. அவற்றுக்கான தேவை சரிந்து குமிழி உடைவது போல் அவற்றின் விலை கடுமையாக வீழ்ச்சியடைகிறது.

அவற்றில் முதலீடு செய்தவர்கள் நிதி நெருக்கடிக்கு உள்ளாகின்றனர், நிறுவனங்கள், வங்கிகளும் நெருக்கடிக்கு உள்ளாகின்றன. அமெரிக்க மத்திய வங்கி மலிவுக் கடனின் மூலம் கடன் குமிழிகளை உருவாக்குகிறது. குறைந்த வட்டியில் கடன் பெருமளவு கிடைப்பதால், அந்த கடன் தொகையானது சொத்துக் குமிழிகளையே ஏற்படுத்துகிறது. அந்நிய முதலீடுகள் அதிகம் வருவதால், அமெரிக்காவின் சொத்து மதிப்புகள் அதிகரிக்கின்றன என்று பார்த்தோம். அந்த முதலீடுகளால் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள்தான் அமோகமாக வளர்ந்து வருகின்றன. அமெரிக்காவில் ரியல் எஸ்டேட் குமிழி, பொருளாதாரத்தை இயக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மத்திய வங்கியின் குறைந்த வட்டியுடனான கடன்கள் உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்யப்படுவதில்லை அவை நுகர்வுச் செலவினங்களுக்கான அடமானக் குமிழிகளையே உருவாக்கியுள்ளது. அந்தக் கடனைக் கொண்டு பலர் புதிதாக வீடுகள் வாங்குகிறார்கள், வீட்டு உரிமையாளர்கள் வீட்டை மலிவான வட்டிக்கு நீண்ட கால அடமானத்தில் வைத்து. அதில் பெற்ற பணத்தைச் செலவு செய்கிறார்கள். வீடுகளின் சந்தை மதிப்பு தொடர்ந்து உயர்வதால் வீட்டை மறு அடமானம் வைத்துக் கடனை அடைத்து விடலாம் எனக் கருதுகிறார்கள். மத்திய வங்கியின் வட்டி குறைவாக இருக்கும் வரை வீட்டின் விலை வாங்க முடியாத அளவிற்கு எகிறிக் கொண்டே செல்கிறது. மத்திய வங்கி வட்டியை உயர்த்தும் போது, வீட்டின் விலை சரிகிறது, அடமானம் வைத்தவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவ்வாறு வீட்டுக் குமிழி ஊக்குவிக்கப்படுகிறது. ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் இழப்புகள் மக்களின் வரிப் பணத்தால் சரிசெய்யப்படுகின்றன. ஆனால் வீடுகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நொடித்துப் போன மக்களைக் காப்பதற்குத்தான் ஒருவரும் இல்லை. அதிகக் கடனில் பாதிக்கப்பட்டதால் அங்குள்ள நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இப்படித்தான் 2009ல் பெரு மந்தம் வீட்டு குமிழிக் கடனால்

தூண்டப்பட்டது. ஆனால் அத்துடன் முடிவடைய வில்லை. இது ஒரு தொடர் நிகழ்வாகி வருகிறது. ஐக்கிய முடியரசு, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் இதே போல் வீட்டுக் கடன் குமிழி உருவாக்கப்படுகிறது.

இவ்வாறு நவீனப் பணக் கொள்கையால் உருவாக்கப்படும் சொத்துக் குமிழிகளே அமெரிக்காவிலும், உலகளவிலும் அழிவுகரமான பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றன. 1929இல் பங்குச் சந்தை குமிழி, 2001இல் இணைய நிறுவனங்களினால் ஏற்பட்ட டாட் -காம் குமிழி, 2009இல் ரியல் எஸ்டேட் குமிழி ஆகிய சொத்துக் குமிழிகள் அவற்றின் விலையில் ஏற்பட்ட அசாதாரண ஏற்ற இறக்கங்களால், அதில் முதலீடு செய்பவர்களுக்கும், நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் பொருளாதார வீழ்ச்சிகளை ஏற்படுத்தின. சொத்துக் குமிழிகளில் குறிப்பாகத் தாமதமாக முதலீடு செய்யும் தனிநபர்களுக்கும் வணிக, நிதி நிறுவனங்களுக்கும் பேரழிவை ஏற்படுத்தின. இவை முதலீட்டாளர்களின் நிகர மதிப்பைத் துடைத்தழிக்கின்றன.

உலகிலேயே வர்த்தக உபரி அதிகம் கொண்ட நாடாக இருந்த அமெரிக்கா நாளடைவில் வர்த்தகப் பற்றாக்குறை அதிகம் கொண்ட நாடாக மாறியது. வேறு எந்த நாட்டிலாவது இந்த அளவிற்கு வர்த்தகப் பற்றாக்குறை ஏற்படுமானால் சர்வதேச நாணய நிதியம் அந்நாட்டின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கும், ஆனால் அமெரிக்கா இதற்கு விலக்கு. ஏனென்றால் சர்வதேச நாணய நிதியமே அமெரிக்காவின் கட்டுப்பாட்டில்தானே உள்ளது!

அமெரிக்காவில் நிகர முதலீடுகளில் தொடர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 2020இல் அமெரிக்காவின் சேமிப்பு வீதமானது 1.4% வீழ்ந்துள்ளது. உற்பத்தி குறைந்து வருகிறது உற்பத்தியைக் காட்டிலும் நுகர்வு அதிகரித்து வருகிறது. கடன் ஒன்றே அனைத்துக்குமான தீர்வாகக் கருதப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கடன் பெற்றுச் செய்யும் நுகர்வுச் செலவினங்களையே குறிப்பதால் அமெரிக்காவின் ஜிடிபியின் வளர்ச்சி என்பது உண்மையில் அது எப்போது நொறுங்க உள்ளது என்பதையே சுட்டிக் காட்டுவதாக அடிசன் விகின் தன்னுடைய ‘டாலரின் மரணம்’ (Demise of the Dollar) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அந்நிய முதலீட்டாளர்களின் செல்வச் சேமிப்பு ஊடகமாக டாலர் இருந்து வருகிறது. அவர்களின் பொருளாதாரச் சீற்றங்களின் போது தங்கள் செல்வத்தை வீழ்ச்சியிலிருந்து

பாதுகாப்பதற்கான புகலிடமாக அமெரிக்கப் பங்குச்சந்தை கருதப்பட்டு வருகிறது.

டாலர் உலகப்பணம் என்ற காரணத்தால், அதில் செய்யப்படும் முதலீடுகள் இழப்பின்றி பாதுகாக்கப்படும் என்று நம்பப்பட்டது. காலப் போக்கில் இது குருட்டு நம்பிக்கையாகி விட்டது. இல்லையென்றால் அமெரிக்க வங்கிகளிலிருந்து தொடங்கிய பொருளாதார நெருக்கடியின் போதும் கூட பல நிதி முதலீட்டாளர்கள் அமெரிக்கப் பங்குச் சந்தைக்கே ஓடியிருக்க மாட்டார்கள். ஆனால் இந்த நம்பிக்கை இன்னும் எவ்வளவு நாள் தொடரும் என்பதுதான் கேள்வியாக உள்ளது.

1980ஆம் ஆண்டு முதல், உலகின் மிகப் பெரிய கடனாளி தேசமாக அமெரிக்கா இருந்து வருகிறது. அமெரிக்க நாட்டின் மொத்தக் கடன் எவ்வளவு என அறிந்தீர்கள் என்றால் மலைத்துப் போவீர்கள். ஏ.பி. பெர்ன்ஸ்டைன் என்ற அமெரிக்கச் சொத்து மேலாண்மை நிறுவனம் 2019இல் அமெரிக்க நாட்டின் மொத்தக் கடன் அதன் ஜிடிபி மதிப்பில் 1832 சதவீதமாக உள்ளதாக அதிர்ச்சியளிக்கும் தகவல் அளித்துள்ளது. கொரோனா தாக்குதல் ஏற்படுவதற்கு முன்பு 2019இல் அமெரிக்க மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை 4.6%ஆக அதிகரித்து 984 பில்லியன் டாலராக இருந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய காலத்தில் அதிகமான நிதிப் பற்றாக்குறை தற்போது உச்சத்தில் உள்ளது. குறைந்த வட்டிவீதத்தால் அமெரிக்காவால் அதிக நிதிப் பற்றாக்குறையுடன் நீடிக்க முடிகிறது. 2020இல் நிதிப்பற்றாக்குறை 3.7 டிரில்லியன் டாலராக 17.9% அதிகரிக்க உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 2009 பெருமந்தத்திற்குப் பின் அமெரிக்காவில் நிதிப் பற்றாக்குறை 9.8%. அதிகரித்தது. 2020இல் அதைக் காட்டிலும் இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரிக்க உள்ளது. 2020இன் முதல் 9 மாதங்களில் மட்டும் 3 டிரில்லியன். அமெரிக்க அரசு 1%-0.625% என்னும் குறைந்த வட்டியில் கடன் பெற்ற போதும், அக்டோபர் 2019 முதல் ஜூன் 2020 வரை 9 மாதங்களுக்கான வட்டித் தொகை 260 பில்லியன் டாலர்.

2019 நிதியாண்டு முடிவில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமான மத்திய அரசின் கடன் 16.8 டிரில்லியன் டாலர். மொத்த ஜிடிபியில் இது 80%. 2007-9 பெருமந்தத்திற்கு முன் அமெரிக்க அரசின் கடன் 35% ஆக அதிகரித்தது. கோவிட்-19க்கு முன் 80% ஆக அதிகரித்தது. 2020 நிதியாண்டின் முடிவில் 100% ஆக அதிகரிக்க உள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது 106.1% ஆக உயர்ந்தது. இதே நிலை தொடர்ந்தால் அதைக் காட்டிலும் மேலும் அதிகரிக்கும். 2030இல் மத்திய அரசு கடன் 118%க்கு மேல் அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

என்னதான் பணவீக்கத்தை அமெரிக்கா உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தாலும், அதாவது மற்ற நாணயங்களை மதிப்பிழக்கச் செய்தாலும், அமெரிக்காவின் மலிவுக் கடன் கொள்கையாலும், அதிகக் கடன் நிலையாலும், பணவீக்கம் ஏற்படத்தான் செய்கிறது, ஆனால் அமெரிக்க அரசு தரப்புத் தரவுகளில் பணவீக்கம் குறைத்து மதிப்பிடப்படுகிறது. பணவீக்கத்தை அளவிடுவதற்கான நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் பொதுவாகச் சரக்குகள் சேவைகளின் விலை மாற்றத்தினை இரண்டு வெவ்வேறு காலகட்டங்களில் ஒப்பிடுவதன் அடிப்படையிலே கணக்கிடப்படுகிறது, ஆனால் அமெரிக்காவில் பணவீக்கமானது நுகர்வோர் வாழ்நிலையைத் தக்கவைப்பதற்காகச் செய்யும் தேர்வுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது, இதன் மூலம் பணவீக்கத்தைக் குறைத்தும், ஜிடிபி மதிப்பை அதிகரித்தும் காட்டப்படுகிறது.

பெருகிவரும் கடனால் அமெரிக்க டாலரின் மதிப்பு சரிந்து வருகிறது. அமெரிக்கர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்யும் போது டாலரின் வாங்கும் திறன் குறைந்ததையும் டாலரின் வீழ்ச்சியையும் நேரடியாக உணருகிறார்கள். டாலரின் மதிப்பை அளவிட டாலர் குறியீடு என்ற அளவீடு பயன்படுத்தப்படுகிறது.

1973இல் பிரெட்டன் வூட்ஸ் ஒப்பந்தம் கலைக்கப்பட்டவுடன், டாலரின் அடிப்படை மதிப்பை 100ஆகக் கொண்டு இந்தக் குறியீடு உருவாக்கப்பட்டது. இந்த டாலர் குறியீட்டின் மதிப்பு உலகளாவிய சந்தைகளில் யூரோ, சுவிஸ் ஃபிராங்க், ஜப்பானிய யென், கனடிய டாலர், பிரிட்டிஷ் பவுண்டு, ஸ்வீடிஷ் க்ரோனா ஆகிய ஆறு உலக நாணயங்களின் தொகுப்பிற்கு எதிராக அமெரிக்க டாலரின் மதிப்பை அளவிட பயன்படுத்தப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு முன்னிருந்தே டாலர் குறியீடு தீவிர சரிவிலுள்ளது. மார்ச் 20 அன்று 102.8ஆக இருந்த டாலர் குறியீடு ஜூலை 24 அன்று 94.7ஆக வீழ்ந்துள்ளது. டாலர் குறியீடு மேலும் வீழ்ச்சியடைந்து 84ஐ அடையும் என நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

டாலர் தொடர்ந்து சரியுமானால், அதன் மீதான நம்பிக்கை குறைந்து விடும், டாலரின் மீதான நம்பிக்கையின்மை அதிகரிக்கும். முதலீட்டாளர்கள் டாலர் முதலீடுகளிலிருந்து வெளியேறுவார்கள், டாலரின் தேவை மிகவும் குறைந்து விடும். உலகெங்கும் உள்ள டாலர் நோட்டுக்கள் அமெரிக்காவிற்குத் திரும்பும். பணவீக்கம் அதிகரித்து டாலர் மதிப்பிழக்கும். அமெரிக்கச் சொத்துக்களின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்படும். அமெரிக்க மத்திய வங்கி

கடனுக்கான வட்டி வீதத்தை அதிகமாக்கும். இதனால் கடனாளிகள் நிதி நெருக்கடியில் பாதிக்கப்படுவார்கள். திடீர் டாலர் சரிவு உலகளாவிய பொருளாதாரக் கொந்தளிப்பை உருவாக்கும். முதலீட்டாளர்கள் யூரோ போன்ற பிற நாணயங்களில் அல்லது தங்கம் மற்றும் பிற சொத்துக்களில் முதலீடு செய்வார்கள். அமெரிக்க நிதிப் பத்திரங்களுக்கான தேவை வீழ்ச்சியடைந்து வட்டி விகிதம் உயரும் அமெரிக்க அரசின் நிதிக் கடனுக்கான வட்டித் தொகையும் அதிகரிக்கும். அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை உயர்ந்து விடும் நிறுவனங்கள் பாதிக்கப்படும், வேலைவாய்ப்பின்மை மேலும் அதிகரிக்கும். அமெரிக்காவின் கடன் நிலை மேலும் அதிகரிக்கும், பெட்ரோ-டாலர் ஏற்பாடு முடிவுக்கு வரும். அமெரிக்காவில் எண்ணெய்ப் பொருட்களின் விலை கணிசமாக உயரும். அமெரிக்க மத்திய வங்கி தன் விருப்பம் போல் டாலரை அச்சிடும் உரிமையை இழக்கும். அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரம் வீழும். அமெரிக்கப் பொருளாதாரம் மிகவும் சுருங்கி விடும்.

அமெரிக்காவில் உள்நாட்டு சேமிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதன் "மோசமான உலகளாவிய தலைமைத்துவமும்" யு.எஸ். டாலரை அழுத்தத்திற்கு உள்ளாக்கியுள்ளன என அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீபன் ரோச் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் அதிகரித்து வரும் நிதிப் பற்றாக்குறையாலும், வீழ்ந்துள்ள சேமிப்புகளாலும், வர்த்தகப் பாதுகாப்புவாதக் கொள்கையினாலும், கோவிட்-19 தாக்குதலைச் சரியாகக் கையாளத் தவறியதாலும் டாலர் குறியீடு 35% வீழ்ச்சியடைய உள்ளதாகவும் கணித்துள்ளார். யூரோவின் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால் டாலருக்கான மாற்றாகலாம், சீனாவின் ரெமின்பி 15 ஆண்டுகளில் 50% மதிப்பேற்றம் அடைந்துள்ளதால் அதுவும் டாலருக்கான மாற்றாக உருவாகலாம் என்றும் குறிப்பிட்ட அவர், இந்த கோவிட் நெருக்கடியின் போது டாலருக்கு மாற்று இல்லை என்ற கருத்து உண்மையில் சோதனைக்கு உள்ளாகப் போகிறது என்று தான் நினைப்பதாகவும் கூறியுள்ளார்

இராணுவ பலத்தைக் கொண்டு தன் ஒப்புறுதியளிக்கப்பட்ட ஃபியட் பணத்தின் மதிப்பை இத்தனை வருடங்களாகக் கட்டிக் காத்த அமெரிக்க அரசு தன் மேலாதிக்கத்தையும் செல்வாக்கையும் தக்கவைக்க எப்பேர்ப்பட்ட போர்த்தந்திர முயற்சிகளிலும் ஈடுபடத் தயங்காது என்பதை வரலாறு அறியும்.

(தொடரும்)

# யானை தானே தன் தலையில்; மண்ணை வாரி இறைத்துக் கொள்ளட்டும்;!

## தன்னைத் தானே அவமதித்துக் கொண்ட உச்ச நீதிமன்றம்!

*கு. பால்ராஜ்*

உன் இரத்தத்துடன் துலங்கும் கோடாரிகளும்,
உன் காயங்களில் ஒட்டியிருக்கும் சவுக்குகளும் ஒளிரும்படி
புராதன விளக்குகளைப் பற்ற வைக்க
பழங்கற்களை உரசி
செத்துக் கிடக்கும் உங்கள் உதடுகளுக்காகப்
பேச வந்திருக்கிறேன் நான்.

சிலிக்குயில் **பாப்லோ நெருடா**

பிரசாந்த் பூசன் மீதான நீதிமன்ற அவதிப்பு வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் ஒற்றை ரூபாய் அபராதம் விதித்துத் தன்னைத்தானே அவமதித்துக் கொண்டுள்ளது. நீதி நிர்வாகம் சட்டம் பத்திரிகை யாவும் ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைக் கருவிதான் என்ற தலைவர் லெனின் வார்த்தைகளை மீண்டும் மெய்ப்பித்துள்ளது உச்ச நீதிமன்றம். இருந்த போதிலும், அதிகாரங்களை எதிர்த்ததற்காக உண்மைகளைப் பேசத் துணிந்த பூசனைத் தண்டிக்க வேண்டும் என்பது உச்ச நீதிமன்றத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியே. ஊழ், மறுபிறப்பு, கடவுள் நம்பிக்கை, சடங்கு சம்பிரதாயம் என 21ஆம் நூற்றாண்டிலும் பிற்போக்கு மூடநம்பிக்கைகளின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் பிஜேபி ஆர்எஸ்எஸ்சின் அதிகாரம் வீசும் எலும்புத் துண்டுகளுக்குக் காத்திருக்கும் சுயநலக் கும்பலின் வேட்டைக்காடாக அரசு மற்றும் அரசுசார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் எண்ணற்றோர் மாறி வருகின்றனர்.

இந்தியாவின் பன்முக கலாசார மொழி அடையாளங்களை அழித்து ஒற்றை இந்து, இந்தி, இந்தியா சர்வாதிகார முகாமாக இந்தியா மாறி வருகிறது. இந்தியாவின் பல்தேசிய இனங்களின் உழைக்கும் மக்களை சுரண்டிக் கொழுக்கத் திட்டமிடும் ஆளும் வர்க்க நயவஞ்சகக் கும்பலால்

பதவி பெற்ற நீதிபதிகளிடமிருந்து இந்திய மக்கள் எதை எதிர்பார்க்க முடியும்?

நீதிபதிகள் பற்றியும் நீதித்துறை பற்றியும் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட கருத்துகளுக்காக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்பட்டதும் அதை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டதும், மன்னிப்புக் கேட்குமாறு உச்ச நீதிமன்றம் கெஞ்சியதும், அவர் மறுத்த பின்பு மன்னிப்புக் கேட்கக் கால அவகாசம் வழங்கியதும், அவர் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை என்று உறுதியாக இருந்த பின்னர் 1 ரூபாய் அபராதம் விதித்து, அதைக் கட்டத் தவறினால் 3 மாத சிறைத் தண்டனை என்று அறிவித்ததும்... இந்திய உச்ச நீதிமன்றத்தின் உயர் பதவிகளில் இருப்போரின் உண்மை முகங்களை மக்கள் அறிந்து கொள்ள இவ்வாறு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

**மேல்முறையீடே விமர்சனம்தானே?**

**எந்த வழக்கிலும் மேல்முறையீடு செய்வதற்கு சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டின் போது பாதிக்கப்பட்ட வழக்காடி, வழக்கறிஞர் இருவரும் "கீழமை நீதிமன்றம் ஆராயாமல் சீர்தூக்கிப் பார்க்காமல் முடிவெடுத்து விட்டதாகத்தான்" மேல்முறையீடு தாக்கல் செய்கிறார்கள். அது கீழமை நீதிமன்றத்தை, நீதிபதியின் தீர்ப்பை விமர்சனம் செய்வதாகத்தானே பொருள்?**

**விமர்சனத்தை விரும்பாத தனிமனிதனோ சமூக அமைப்புகளோ நாடோ ஜனநாயகத் தன்மையற்றுப் போவதோடு, அதில் ஒரு சர்வாதிகாரப் போக்கும் தழைக்கிறது. எனவே எல்லாவற்றையும் விமர்சிக்க இருக்கும் உரிமையை அரசோ, நீதிமன்றமோ தடை செய்வது**

**ஜனநாயகத்திற்கும் மக்களுக்கும் நல்லதன்று. இந்திய நாட்டின் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களால் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதற்காக மோதியை விமர்சனம் செய்யாமல் இருக்க முடியுமா? எவ்விதமான விமர்சனமும் இன்றி மக்களை ஊமையாக்கப் பார்க்கிறதா இந்திய உச்ச நீதிமன்றம்?**

மேலும் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகளாக இருப்பவர்களும் மனிதர்கள்தானே? அதனால்தானே செண்பகம்-எதிர்-சென்னை மாகாணம் என்ற வழக்கில் இடஒதுக்கீட்டிற்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய போது தமிழ்நாட்டில் தந்தை பெரியார் தலைமையில் போராட்டம் நடத்தி இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தில் முதல் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர முடிந்தது.

இன்று எக்காலத்திலும் இல்லாத அளவில் பாசிச பிஜேபி அரசாங்கம் இந்தியாவின் ஏனைய அரசு உறுப்புகளான இராணுவம், தேர்தல் ஆணையம், சிபிஐ, வருமான வரித் துறை, பத்திரிகை, மீடியா என அனைத்துத் துறைகளையும் சுதந்திரமற்ற, ஜனநாயகமற்ற அமைப்புகளாக மாற்றுவதற்காகத் தனது கும்பலைக் கொண்டு நிரப்பி வருகிறது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெற்ற பின்னர் கவர்னர் பதவி உட்பட பல பேரங்கள் நடத்தப்படுகின்றன. அதன் மூலம் தனது நெடுநாளைய கனவான இந்து, இந்தி, இந்தியா என்ற கனவை நிறைவேற்றத் துடிக்கிறது. கடந்த ஒரு வருடத்தில் பாசிச பிஜேபி அரசின் நடவடிக்கைகள் நாட்டை அறிவிக்கபடாத அவசர நிலையில் வைத்திருக்கின்றன. கருத்துக்கள் கூற முடியாத அளவில் அச்சத்தை உண்டாக்கிக் கருத்தியலாளர்களைக் கொலை செய்து ஏனையோரிடம் ஒரு அச்சத்தை உருவாக்கி இருக்கிறது. இஸ்லாமியர்கள் நாட்டின் இரண்டாம்தரக் குடிமக்களாக மாற்றப்பட்டுள்ளனர். பாராளுமன்றம்

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

பிஜேபியின் தொழுவம் ஆகி விட்டது. எந்தப் பெரிய முடிவுகள் மீதும் பாராளுமன்றத்தில் விவாதமின்றி சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

நண்பர்களே இது சோதனைக் காலம்,
உங்கள் இதயத்தைப் பட்டறையில்
கொடுத்து சம்மட்டியால் அடித்து
கூர்தீட்டிக் கொள்ள உகந்த காலம்
இதையேதான் நமது எதிரிகள் நமக்கு
வரலாற்றின் சகல திசைகளிலிருந்தும்
தொடர்ந்து பரிசளித்தார்கள்
அதுதான் நமக்கு வேண்டும்
அழுகையோ கண்ணீரோ பச்சாதாபமோ ஒருபோதும்
நம் இதயத்தை வலுவேற்றாது
மீண்டும் சொல்கிறேன் என் மூதாயின் தொல்மரபின் ;
வார்த்தைகள் ரத்தம் தோய்ந்ததேயானாலும் அதில் துலங்கும் ஒளி விடுதலையை போரிசையை முழங்குபவை
நடக்கட்டும் நமக்கு முன்னமே தெரிந்ததேயானாலும்
நமது மக்களிடம் எதிரியின் பகைப்புலத்தைப்
பறைசாற்றி முரசறைய நமக்குத் தெரியாது
ஏனெனில் நமது வித்து அன்பால் கிளைப்பது
அவனைப் பறைசாற்ற அவனால்தான் முடியும்
இனி நமக்கான காலம்;
அவனைஅவனே எவ்வளவு முடியுமோ அவ்வளவும் காட்டிவிட்டான்
ஆனாலும் அவன் உண்டாக்கத் துடித்த பயம் நம்மிடம் விளையாது
நாம் நம் ரத்தம் கண்ணீர் வியர்வை குழைத்து ஒரு வரலாற்றை
கட்டி எழுப்ப தயாராகத் தொடங்குவோம்
இனி வீசப்போவதோ புயல்.

## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத் தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி!

தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |

# இல்லற ஏற்பு விழா அழைப்பு:

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது." -- திருக்குறள் 45.



அன்பிற்குரியீர்!

வணக்கம்.

சென்னை ஈக்காட்டுத்தங்கள் திருவாளர்கள் ஜெயபால், உஷா ஆகியோரின் புதல்வர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் துடிப்புமிக்க செயல்வீரர்

தோழர் ஜீவானந்தம்

சென்னை ஜாபர்கான்பேட்டை திருவாளர்கள் டி. ஆறுமுகம், ஆ. செல்வி ஆகியோரின் புதல்வி

செல்வி சாமுண்டேஸ்வரி

ஆகியோரின் இல்லற ஏற்பு விழா தமிழ் முறைப்படி எதிர்வரும் 2020 செப்டெம்பர் 9 புதன் கிழமை காலை 6 மணியளவில் ஹோட்டல் சந்திரா,149/80, பிள்ளையார் கோவில் தெரு, மேற்கு ஜாபர்கான்பேட்டை, சென்னை – 83 என்ற முகவரியில் (காசி திரையரங்கம் அருகில்) நடைபெறும்.

உற்றார் உறவினர் நண்பர்கள் தோழர்களுடன் இணைந்து மணமக்களை வாழ்த்திட வாருங்கள் என்று அன்புரிமையுடன் அழைக்கிறோம்.

அன்புடன்,
தியாகு
பொதுச்செயலாளர் ,
தமிழ்த் தேசிய விடுதலை

சென்னை
04. 09. 2020

குறிப்பு: பெருந்தொற்றுக் காலத்துக்குரிய முன்னெச்சரிக்கைக் கட்டுப்பாடுகளுடன் இல்லற ஏற்பு விழா எளிமையாக நடைபெறும்.

**தொடர்புக்கு: 90258 70613, 99406 60299**